குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



தாமஸ் கார்லைல்

50 காசு

ஊசி 2 குத்து

★ மார்ச் 1964 ★

இதனுள்:

நச்சுப்பழம் பழுத்தது
அதோ! சிகப்பு விளக்கு!
சத்திய சபா?
வாழ்க்கை வரலாறு: லெனின்
நல்ல கணவன்: பண்புகள்
நாளும் கோளும் என்செயும்?
பெண்ணின் மாட்சியும் வீழ்ச்சியு
ஹோமியோபதி
சமூக முன்னேற்றம்
சோதிடம் அறிவியல் ஆகும
கவிதைப் பகுதி
இலக்கியப் பகுதி
—இன்னும் பல

டெலிஃபோன் நம்பர்: 51451 | நிறுவனம்: 1930 | தந்தி: ORIDOL

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

பட்டினத்தார் உளுத்தம் பருப்பு	எப்போதும் வாங்கி உபயோகியுங்கள் — எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.	ஷெல் துவரம் பருப்பு

தயாரிப்பாளர்கள்:

P. புன்னவன நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.

அன்புடையீர்,

வணக்கம். நாங்கள் இதுவரை தமிழ் நாட்டுப் பொதுக்கல்வி இயக்குநர்

திரு. நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதிய 12 நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அவை :

1. தம்பீ நில்
2. நஞ்சு உண்டவர்
3. சிலுவையில் மாண்டவர்
4. குண்டுக்கு இரையானவர்
5. மின் விளக்கு
6. தங்கத் தாத்தா
7. வானொலி வழங்கியவர்
8. தோற்றும் வென்றவர்
9. பாக்கு வெட்டி
10. ஆறு
11. விளக்குப்பாவை
12. செஞ்சிலுவை தந்தவர்

அவற்றில் அரிய பெரிய கருத்துக்களை எளிய நடையில், தெளிவான முறையில், இளைஞர் முதல் பெரியோர் வரை ஆர்வத்தோடு படித்து இன்புறும் வகையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றைப் பெருமளவில் வாங்கிப் பயன்படுத்தியது எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

ஆகவே,

"எண்ண அலைகள்"

என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய 24 கட்டுரைகளின் தொகுப்பை இப்போது வெளியிடுகிறோம். அச்சில் உள்ள இந்நூல் விரைவில் வெளிவரும். சுமார் 260 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 2-60. நூலின் படிகள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்பெறும்.

முருகன் & கம்பெனி,

32, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

Manufacturers of:

Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

ஸ்ரீ மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன் : 82026) சென்னை-34

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸ்ட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—

ஒரு ஆண்டும் அதற்கு மேலும்	...	$4\frac{1}{2}$%	ஒரு ஆண்டிற்கு
இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும்	...	$4\frac{3}{4}$%	,,
மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும்	...	5%	,,
நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும்	...	$5\frac{1}{4}$%	,,
ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை		$5\frac{1}{2}$%	,,

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

டி. வி. நரசிம்மன் M.A., C.A., I.I.B.
(காரியதரிசி).

கட்டுரைப் போட்டி

மக்கள் ஆட்சி இந்நாட்டுக்கு ஏற்றதா?

ஏற்றதா ? இல்லையா ? தக்க ஆதாரம், ஆராய்ச்சியுடன், குத்தூசியில் 5 பக்கத்துக்கு மேற்படாமல், தெளிவாக, ஏப்ரல் இறுதிக்குள் எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

குறிப்பு :—*சாதி ஒழிப்பு பற்றிய போட்டிக் கட்டுரைகளின் முடிவு அடுத்த இதழில்.*

—ஆசிரியர்.



நடுத்தெருவிலும் கோவில்! நடைமேடையிலும் கோவில்! (மதச் சார்பற்ற ஆட்சி!!!)

"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

குத்தூசி

ஊசி 2 மார்ச் 1964 குத்து 6

நச்சுப்பழம் பழுத்தது!

விறுவிறுப்பான நகர மன்றத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. வசைகளும், அடிதடிகளும், ஊர்வலங்களும், சுவரொட்டிகளும், கொடிகளும், கூச்சல்களும் ஒழிந்தன.

பெரும் புயலில் சிக்கிய கப்பல் திட்டுத் தடுமாறி கரைவந்து சேர்ந்த பிறகு கப்பலிலிருப்பவர்கள் பெருமூச்சுவிட்டுக் களைப்பாறுவதுபோல் தமிழகப் பொதுமக்கள் இன்று சிறிது அமைதி காண்கின்றனர்.

இந்தத் தேர்தல் புயலில் பாழாக்கப்பட்ட பணம் பலபல லட்சம் இருக்கும்; இரண்டொரு கோடிகூட இருக்கும். பலன்? பெரிய சுன்னம்—O.

இப்பணத்தை வாரி இறைத்தவர்கள், ஒவ்வொரு நகரத்துக்கும் ஒரு பெரிய மருத்துவ மனை கட்டியிருக்கலாம். அல்லது ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி வீதம் கட்டி யிருக்கலாம். அல்லது நூற்றுக்கணக்கான சாலைகளுக்கு தார் போட்டிருக்கலாம். அல்லது ஆயிரம் துவக்கப் பள்ளிக் கட்டடங்களையாவது எழுப்பி யிருக்கலாம். அல்லது ஆயிரம் கிராமங்களில் நிலையான குடிதண்ணீர் வசதிகளைச் செய்திருக்கலாம்! இவற்றிற்கெல்லாம் பணம் சேராதே!

எந்தக் கட்சியில் எத்தனை பேர்?--என்ற வீராப்புக்காக-(போரில் 'வீர சொர்க்கம்' என்ற பெயரால் ஆயிரக்கணக்கில் மாண்டு மடிவது போல)—பல லட்சக்கணக்கான ரூபாய் கரியாகிப் புகையாகி—காற்றோடு காற்றாகக் கலந்துவிட்டது!

போரைவிடக் கேடு தருவது நகர மன்றத் தேர்தல்! இது தேவை யில்லாத அய்ந்தாம் சக்கரம்! ஆணையாளர்களே போதும், அமைதி யாக நிர்வாகத்தை நடத்த! நகரத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்ள-

சாதி! மதம்! பணம்! காலித்தனம்! மடமை! விளம்பரம்! பொய்!—இவைகளுக்குத்தான் வெற்றி! வேறு எதற்கும், யாருக்கும் வெற்றி யில்லை.

நகரங்களின் தேவை உணர்ச்சிக்கோ, லஞ்ச ஒழிப்பு முயற்சிக்கோ, தன்னலமற்ற பொதுத்தொண்டுக்கோ-எதற்குமே வெற்றியில்லை. படுதோல்வி!

ஒரு தேர்தல் நடந்து முடிந்துவிட்டால், தமிழர் சமுதாயம் ஒற்றுமை உணர்ச்சியிலும், நேர்மை வாழ்விலும் ஒரு நூறு அடி ஆழத்துக்குப் போய் விடுகிறது! இந்த இரு துறைகளிலும் அரசினர் அரும்பாடு பட்டுச் செய்கின்ற முயற்சி ஏற்றத்தில் பத்தடி சறுக்கல் ஏற்பட்டு விடுகிறது!

இத்தேர்தல்களால் தனிப்பட்ட கட்சி விரோதம், மனித வெறுப்பு, சாதி—மத வெறி, தன் உயர்வு உணர்ச்சி, விளம்பர ஆசை—ஆகிய இழி பண்புகள் வெற்றி யடைந்து, வியக்கத்தக்க கூட்டுகள்—கூட்டணிகள் முளைத்து, சமுதாய வாழ்க்கை நஞ்சாக ஆகி வருகிறது.

மாவட்ட மன்றங்கள் (ஜில்லா போர்டு) வட்டமன்றங்கள் (தாலுகா போர்டு) முதலியன அடியோடு கலைக்கப்பட்டதுபோல, நகர மன்றங் களும் கலைக்கப் படவேண்டும். அப்போதுதான் சிறிதாவது லஞ்சம் குறையும்; பூசல் குறையும்; சாதி வெறி—மத வெறிக்குப் புது வாய்ப்பு இருக்காது; நிர்வாகத்தில் நேர்மையுமிருக்கும். அந்த நன்னாள் எந் நாளோ!

நகர மன்றத் தேர்தல் நச்சுமரம் பழுத்து விட்டது! பழுத்துக் குலுங் கிக் கொட்டப் போகிறது! வேண்டுவோர் ஆசை தீர அருந்தி நோய் வாய்ப்படலாம்! வாந்தி யெடுக்கலாம்! மிகுதியாக அருந்தி உயிரையும் விடலாம்!

அதோ! சிகப்பு விளக்கு!!

நம் நாட்டில் திடீரெனப் பெரும் புரட்சி ஏற்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலை முற்றிக் கொண்டே யிருக்கிறது.

1. விலைவாசி ஏற்றம்;

2. படித்தோரின் வேலையில்லாத் துயரம்.

இவ் விரண்டு கேடுகளே மற்றக் கேடுகளுக்கெல்லாம் வித்துக்கள்

கலவரம்; திருட்டு; லஞ்சம்; நம்பிக்கைத் துரோகம்; கொள்ளை லாபம்; கலப்படம்; பொய்க் கணக்கு; மோசடி; காலித்தனம்—ஆகிய இத்தனை சமுதாயக் கேடுகளையும் பெற்றெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்ற பெற்றோர்கள் மேற்கண்ட இருவருமே!

இவர்களை வளர விட்டுக்கொண்டிருப்பது சரியா? இருவரும் உடற்கட்டோடு வளர வளர ஆண்டுக்கொரு கோரக் குழந்தை பிறந்து கொண்டுதானே இருக்கும்?

அவசரச் சட்டமோ! தனி அதிகார ஆட்சியோ!—எதுவாயினும் சரி! "மக்கள் ஆட்சி" என்றும், "அடிப்படை உரிமை" (Fundamental right) என்றும் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டு, இவ் இரு பட்டுக் கயிறுகளையும் முறுக்கிக் கழுத்தில் சுற்றி இறுக்கிக் கொள்வது அறிவுடைமைதானா என்று கேட்கிறோம்.

இனி, இந்த இரண்டு கேடுகளையும் சமாளிக்க முடியாது, இந்திய சமுதாயத்தினால். பாட்டாளிப் பாலுக்குக் காவலாகவும், முதலாளிப் பூனைக்குத் தோழனாகவும் நடந்து கொள்வது சோஷலிச (சமதர்ம) ஆட்சிமுறைக்கு அழகல்ல.

இந்த இரு தீங்குகளும் உடனடியாக, இந்த ஆண்டுக்குள்ளாகவே அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

பெரும் பாங்குகள்! தனியாரின் பெருந் தொழிற்சாலைகள்! குபேர கோவில்கள்!—போன்ற பெருஞ் சொத்துக்களையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டாவது உற்பத்தியைப் பெருக்கி, விலைவாசிகளைச் சரிபாதியாகக் குறைத்தாக வேண்டும். அவசரம்! அவசரம்!!

படித்த இளைஞர்கள் வேலையில்லாது தவிப்பதனால்தான் தேவையற்ற அரசியல் கட்சிகள் அடையாறு ஆலமரம் போல் பரந்து கிடக்கின்றன. படிக்காதவர்களுக்குள்ள வேலை வாய்ப்பில் பத்தில் ஒரு பங்குகூடப் படித்த இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் இல்லை. இது ஆபத்தான நிலை! உடனே கவனிக்க வேண்டும். இல்லையேல் இந் நாட்டில் பெருங்கொந்தளிப்புத்தான்! பிற நாடுகளைப் பார்த்தாவது அமைதியான சமுதாயத்தை இங்கு நிலை நிறுத்த வேண்டாமா, இந் நாட்டுப் பெரியார்கள்?

அதோ! சிவப்பு விளக்குத் தெரிகிறது! கவலையற்று உறங்க வேண்டாம்!

இலவசக் கல்வி

தமிழ்நாடு அரசியலாரின் புதிய வரவு செலவுத் திட்டத்தின்படி வரப்போகும் பள்ளியாண்டிலிருந்து 11-ஆவது வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) வரையில் எல்லா மாணவ-மாணவிகளுக்குமே சம்பளம் பெறாமல் கல்வி தரப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன் முதல் இம்மாபெரும் சாதனையை நிறைவேற்றியுள்ள தமிழக ஆட்சியினரை மலர் தூவி வாழ்த்துகிறோம்; மனம் குளிரப் பாராட்டு கிறோம்.

இதற்காக அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 50 லட்ச ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறதாம். செலவு இதைவிட இரட்டிப்பானாலுங்கூட இந்த முடிவு வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆணும் பெண்ணும் நூற்றுக்கு நூறு பேர் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலாவது படித்து விடுவார்களேயானால் தமிழ்நாட்டில் திருட்டு, கொலை, கொள்ளை, அடிதடி, விபசாரம் போன்ற குற்றங்கள் ஏறத்தாழ அறவே ஒழிந்து போய்விடும். இன்றைய சமுதாய அமைப்பில் எந்தெந்த சமுதாயப் பிரிவில் உயர்தரக் கல்வி பயின்றிருக்கிறார்களோ, அதில் மேற்கண்ட குற்றவாளிகள் இல்லாமலிருப்பதைக் காணலாம். சிறைச்சாலைக்குள் செல்கின்ற மேற்கண்ட 'கிரிமினல்' குற்றவாளிகளில் எல்லோருமே எட்டாம் வகுப்பு வரையில்கூடப் படிக்காதவர்களும், முக்கால்வாசிப் பேர் எழுதப்படிக்கவே தெரியாதவர்களுமாக இருப்பதை நினைவூட்டிக் கொள்வது நல்லது. இது, முதலாவது நன்மை.

அடுத்தபடியாக, கல்விச் சம்பளச் சலுகைக்காகவே சாதி உணர்ச்சியற்றவர்கள்கூட சாதியைக் குறிப்பிட்டு சம்பளச் சலுகைபெற வேண்டியிருக்கின்ற மனக்குறை ஒழிந்துவிடும். எழுத்திலாவது ஓரளவு சாதி உணர்ச்சி குறையும். மாணவ-மாணவிகளிடையிலும், "நான் இன்ன சாதி; ஆதலால், சம்பளச் சலுகை பெறுகின்றேன்", என்று சொல்லிக்கொள்ள வேண்டிய மனச் சங்கடம் இராது. ஆசிரியர்களும் குழந்தைகளின் சாதிகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய வாய்ப்பு இல்லாது போய்விடும். சாதி உணர்ச்சியை மறந்திருக்கின்ற சிலர்கூட தேர்தல் சமயத்தில் நடப்பதுபோல், பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கின்ற சமயத்தில் தம் சாதியை நினைவூட்டிக் கொள்ள வேண்டிய சிக்கல் இனி இருக்காது.

இன்று 14 லட்சம் துவக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு நடுப் பகலில் இலவச உணவு தரப்படுகின்றது; பல லட்சம் குழந்தைகளுக்கு ஒரே சீரான உடையும் நன்கொடை மூலம் தரப்படுகிறது.

இனி, புத்தகம்-நோட்டு முதலிய செலவுகளுக்கும், செல்வர்களும், அரசாங்கமும் முன் வந்து ஒரு தனி நிதி திரட்டி, சாதி-மதம் பாராட்டாமல் எல்லாப் பிள்ளைகளுக்கும் 11-ஆவது வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) வரையில் இலவச புத்தகம்-நோட் முதலியன வாங்கித் தருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, கட்டாயக் கல்வியையும் நுழைத்து விடுவார்களேயானால் சோஷலிசத்தின் வித்து முளை கண்டு விட்டது என்றே கூறலாம். இதற்காக மேலும் இரண்டு-மூன்று கோடி ரூபாய் செல

வானாலும் தவறில்லை. படிப்படியாக குற்றங்கள் குறைவதன் மூலம் நீதிமன்றம், காவல்துறை, சிறைச்சாலை—போன்ற துறைகளில் ஏற்படக் கூடிய செலவுகளும் கணிசமாகக் குறைந்து கொண்டே யிருக்கும் என்பது உறுதி.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலாவது இந்த ஆசையை நிறைவேற்றித் தருவார்களென்று எதிர்பார்க்கிறோம். மேலும், 9–10–11 ஆகிய வகுப்புக்களில் முக்கியமான இயந்திரத் தொழிற் கல்விகளை யும் (குடிசைத் தொழில் வேண்டவே வேண்டாம்! ஏனெனில், குடிசை களே ஒழிய வேண்டும் என்பதுதான் சரியான சோஷலிசம்) எல்லா மாணவ-மாணவிகளுக்கும் கட்டாயமாகக் கற்பித்துக் கொடுக்க வேண் டும். மற்றப் பாடங்களின் மணியைச் சரிபாதியாகக் குறைத்துக் கொள்ளலாம். விடுமுறை நாட்களைப் பாதிக்குமேல் குறைக்கலாம்; பள்ளிப் படிப்பு நேரத்தைச் சிறிது கூட்டிக் கொள்ளலாம்.

நம்நாட்டுக்குள் எதிரி நாடுகள் புகுந்தால் எப்படிப்போரிட வேண் டுமோ, அதைப் போலக் கருதிக்கொண்டு கல்லாமை என்ற சமுதாய எதிரியுடன் கடுந்தாக்குதல் செய்து இறுதிப் போர் நடத்தியாக வேண்டும்.

அந்த முறையில் மற்றொரு முற்போக்குத் திட்டமான உயர்நிலைப் படிப்பு இலவசக் கல்வித் திட்டத்தை வரவேற்கிறோம். ஆட்சியாளரை மீண்டும் வாழ்த்துகிறோம்.

சத்திய சபா!

இது எழுதப்படுவது 1965 மார்ச் என்று வைத்துக் கொள்க!

என்ன அதிசயம், பார்த்தீர்களா! புராண—இதிகாசம்; மோட்சம்—நரகம்; கண்ணன்—முருகன், ஆகிய எதைப் பற்றியுமே கூறாமல் அறி வையும் ஒழுக்கத்தையும், நல்வாழ்வையும் மக்களிடையே பரப்பி விடலாமென்று உலகம் புகழும் புத்தரும் வள்ளுவரும் பகற்கனவு கண்டார்களே! அப்பாவிகள், பாவம்! காலஞ்சென்ற திரு. வி. க. கூட 'ஆத்திக சங்கம்' கண்டு அதன் மூலம் நல்லொழுக்கத்தைப் பரப்பிவிட லாமென்று முயன்று இடைவிடாத பிரசாரம் செய்தாரே! சமணம், இஸ்லாம், கிருஸ்துவம், ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்ற பல மதங்கள் நன்னெறிப் பிரசாரம் செய்தனவே! நல்வழியும், நன்னெறி யும், இன்னா நாற்பதும், இனியவை நாற்பதும், முதுரையும், அறநெறிச் சாரமும்—இன்னும் எத்தனையோ அறநெறி நூல்கள் இருக்கின்றனவே! எவராலும் எதனாலும் இந்நாட்டில் நல்லொழுக்கத்தை நிலை நாட்ட முடிந்ததா?

ஆண்டுதோறும் போலீஸ் படையும், இராணுவமும், நீதிமன்றமும் சட்டங்களும் பெருகிக் கொண்டிருப்பதைத்தானே கண்டோம்? சிறைச் சாலைகளிலும் இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதைத்தானே கண்டோம்? குற்றவாளிகளில் 1000-க்கு 999 பேர் மதவாதிகள்—ஆத்திகர்கள்—என் பதைத் தானே கண்டோம்?

இதோ பாருங்கள், ஒரே ஆண்டுதான் ஆயிற்று, ''சத்திய சபா'' என்ற புதிய சத்சங்கத்தை ஆரம்பித்து!!

சுயமுக சுகானந்தவாரியார் தொடர்ந்து மூன்று மாதம் இராமாயண சொற்பொழிவு நிகழ்த்தினார்! அருங்குண அம்மையார் தொடர்ந்து பல்நாள் பெரிய புராண காலட்சேபம் நடத்தினார்! புலவர் புகழ் புன்மையானந்த அடிகள் ஆத்ம தத்துவம் பற்றி ஆங்கில சொன் மாரிகள் அடிக்கடி பொழிந்தார்! நடிக மன்னன் நட்சத்திர நாமம் பல இதிகாச நாடகங்களை நடித்துக் காட்டினார்!

அடாடா! மார்ஃபியா இஞ்செக்ஷன் கொடுத்த மாதிரி, பொது மக்களின் தீப்பண்புகள் அடங்கி ஒடுங்கி, நற்பண்பு எவ்வளவு விரைவில் ஓங்கி விட்டது பார்த்தீர்களா? கிருஷ்ண லீலைகளைக் கேட்டது முதல் திருட்டு என்பதே ஒழிந்து போய்விட்டது! இராம லீலைகளைக் கேட்டது முதல் கொலை என்பதே மறந்து போய்விட்டது! கள்ளக் குடியும் நின்று விட்டது! பாரதக் கதை கேட்டது முதல் பெண்களெல்லாம் துரவுபதைப் பத்தினிகளாகி விட்டனர்! பெரிய புராணக் கதைகளைக் கேட்டது முதல் பணமோசடி, குழந்தைக் கொலை போன்ற கேடுகளெல்லாம் பறந்துபோய் விட்டன! அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்த பிறகு, 'பொய்' என்றால் என்ன என்றே கேட்கிறார்கள் பார்த்த அத்தனை பேரும்!

ஆம்! கடந்த ஆண்டு மார்ச் 5-ஆம் தேதி தான் மக்கள் மனதை புராண–இதிகாச சாணைக் கல்லில் தீட்ட ஆரம்பித்தோம்! இன்றுடன் சரியாக ஒரே ஆண்டுதான்! இதற்குள் கில்லெட் 'பிளேடு' மாதிரி எவ்வளவு கூர்மை ஏறிவிட்டது பார்த்தீர்களா! பாதி போலீஸ்காரருக்கு சென்னை நகரில் வேலையே இல்லையாம்! நீதிமன்றங்களுக்கும் வேலை குறைந்து விட்டது! சிறைக் கதவு திறந்தே கிடக்கிறது, உள்ளே போவதற்கு ஆள் கிடைக்காத காரணத்தால்!

இத்தனைக்கும் ஒரே ஆண்டு முயற்சிதான். இதுபோல் ஊருக்கு ஊர், நகரத்துக்கு நகரம், தினசரி நடக்குமானால், வானொலி மூலம் புராண–இதிகாச–கடவுள் பிரசாரம் செய்து சரிபாதி மக்களைத் தூய்மைப்படுத்தி விட்டிருப்பது போல், மீதியுள்ள சரிபாதி மக்களையும் 'சத்திய சபா' முயற்சி மூலம், சோப் போட்டுக் கழுவிய கண்ணாடி டம்ளர் மாதிரி ஆக்கி விடலாம்!

பல நூற்றாண்டுகளாக புத்தநெறியாலும் திருக்குறளாலும் சாதிக்க முடியாததை ஒரே ஆண்டில் 4–5 புனித வாழ்வு – நல்லொழுக்க நட்சத்திரங்களைக் கொண்டே சாதித்து விட்டோம்!

இம்முயற்சி (சத்திய சபா) துவங்கப்பட்டபோது எள்ளி நகையாடிய நாத்திக பிண்டங்கள் தலை குனிந்து கிடக்கின்றன! அந்தோ, பரிதாபம்!

★ இந்த விதமாக எழுதுவோம் என்று, முன் கூட்டியே, ஓராண்டுக்கு முன்பே, எழுதிக் காட்டியவருக்கு எம் நன்றி!

உலகப் பெரியார் வரலாறு:

லெனின்

[சா. கு.]

II

வழக்குரைஞராக (பாரிஸ்டர்) பணியாற்றினாலும் லெனின் பெரும்பாலும் குற்றவாளிகள் பக்கமே வாதாடினார். தம்முடைய புரட்சி நடவடிக்கைகளுக்கு ஒரு திரையாகவே பாரிஸ்டர் பணியைப் பயன்படுத்தினார். அவ்வூரில் ஒரு மார்க்சிஸ்ட் படிப்புக் குழுவை நிறுவினார். தெளிவான விவாதத்தினால் மற்றவர்களைத் தம் பக்கம் இழுத்தார். நடுத்தர வர்க்கத்தார் மிகுந்துள்ள தொழிலாளர் பகுதிகளில் தொண்டாற்ற வேண்டுமென்று கருதி செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்குக்குச் சென்றார். அப்போது அவர் வயது 23. ஆனாலும் பரந்து விரிந்த படிப்பின் பயனாக மார்க்சிச தத்துவத்தை விளக்குவதில் தனித் திறமை பெற்றவரானார்.

அமைப்புத் திறமையும், தொழிலாள வர்க்கத்திடையே பிரசாரத் திறமையும் பொருந்திய காரணத்தால் அந்நகரின் புரட்சிவாதிகளின் ஒப்பற்ற தலைவராகி விட்டார்.

எதிர்க்கட்சிகளைத் தாக்கிப் பல சிறு நூல்கள் எழுதி, கையெழுத்துப் பிரதிகளாகவே பரப்பிக் கொண்டிருந்தார். பாட்டாளிகளைத் திரட்டி வைத்துக் கொண்டு சோஷலிச விளக்கந் தருவார்; அவர்களது வீடுகளுக்குச் சென்று குடும்பத்துடன் பழகுவார்; அங்கும் சோஷலிசப் பிரசாரம் செய்வார். பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவார்.

"தொழிலாளர் விடுதலைக் கழகம்" என்ற சட்டவிரோதமான கழகத்தை நிறுவி, தொழிலாளர்களிடையே தீவிரமான பிரசாரம் செய்தார்.

அடக்குமுறை ஆரம்பம்

1895 டிசம்பரில் லெனினும் அவரது தோழர்களும் சார் ஆட்சியினால் கைது செய்யப் பட்டனர். சிறை மீண்ட பிறகு 1897-ல் சைபீரியாவுக்கு மூன்றாண்டுகள் வரை நாடுகடத்தப் பட்டார்.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் இருந்த போதுதான் கான்ஸ்டண்டி நோவ்னா க்ருப்ஸ்காயா (Konstantinovna Krupskaya) என்ற பள்ளி ஆசிரியையின் நட்பு ஏற்பட்டது. இருவரும் 1898-ல் வாழ்க்கைத் துணைவர்களாயினர்.

லெனினுக்கு சிறைத்தண்டனையும் நாடு கடத்தலும் பரிசாகக் கிடைத்த காரணமென்ன? மார்க்சிய நூல்களை இரகசியமாக ரஷ்யாவுக்குள் கொண்டுவந்து பரப்பியதுதான்.

பீட்டர்ஸ்பர்கில் இருந்த போது மன்னர் ஆட்சியின் போலீஸ் லெனினைக் கைது செய்வதற்குப் பெருமுயற்சி செய்தது; திடீர் திடீரென்று மணிக்கொரு

தரம் இடத்தை மாற்றிக் கொண்டிருந்தவரை எப்படிப் பிடிப்பது?

1896–ல் 30,000 துணி மில் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக வேலை நிறுத்தம் செய்தனர். லெனின் "போராட்டக் கழகத்தின்" பணியினால் மாஸ்கோ, கீவ், விளாடிமீர் போன்ற வேறு பல நகரங்களிலும் சோஷலிச உணர்ச்சி காட்டுத் தீப்போலப் பரவிற்று.

சிறையிலும் உழைப்பு

1895 டிசம்பரில் மன்னர் ஆட்சி லெனின் உள்ளிட்ட எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களையும் கைது செய்தது. செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் சிறையில் 14 மாத காலம் லெனின் தனி அறையில் அடைக்கப் பட்டார். சிறையிலும் சோம்பியிருக்கவில்லை, புரட்சித் தலைவர் லெனின். கடிதங்களும், கட்டுரைகளும், துண்டு விளம்பர அறிக்கைகளும் எழுதித் திருட்டுத்தனமாக வெளியே அனுப்பிக் கொண்டேயிருந்தார். "மார்க்கிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டமும் அதுபற்றிய குறிப்புகளும்" என்ற முதல் அறிக்கைகூட இச் சிறையில்தான் எழுதப்பட்டது. அவர் படிப்பதற்காக அநுமதிக்கப்பட்ட புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றில் அச்சு வரிகளுக்கு இடையில் பாலைத் தொட்டு எழுதி இரகசியமான குறிப்புக்களை வெளியே அனுப்பிக் கொண்டேயிருந்தார். அவருக்குத் தரப்பட்ட ரொட்டிகளில் சிறு சிறு "மைப்புட்டிகள்" செய்து அதில் பாலை ஊற்றிக் கொண்டு எழுதுவாராம்! சிறை அதிகாரிகள் நெருங்கும் போது அப்படியே எடுத்து வாயில் போட்டு விழுங்கி விடுவாராம். "நான் இன்று ஆறு மைப்புட்டிகள் தின்றேன்", என்று அவர் எழுதிய கடிதம் ஒன்றில் வேடிக்கையாகக் குறிப்பிட்டுள்ளார்!

சிறைக்குள்ளிருந்த கட்சித் தோழர்களுக்கும் இரகசியமாகக் கடிதம் எழுதுவாராம்! எப்படித் தெரியுமா? வெறும் புள்ளிகள் மூலம் ஒவ்வொரு எழுத்துக்கும் கணக்கு வைத்து சிறை அதிகாரிகளுக்குப் புரியாதபடி, சிறைப் புத்தகங்களிலேயே எழுதி அனுப்புவாராம்!

வெளியிலிருந்து ஏராளமான புத்தகங்களைப் பெற்று தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தார்; நூற்றுக்கணக்கான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்தார். "ரஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி" என்ற அரிய ஆராய்ச்சி நூலை எழுதத் தொடங்கியதும் இங்குதான்.

சிறையில் ஒழுங்குமுறையோடு கூடிய வாழ்க்கை நடத்தினார். பெரும்பகுதி நேரம் படிப்பும் எழுத்தும்! இரவில் உறங்கு முன்பு நாள் தவறாமல் உடற்பயிற்சி! "கடுங்குளிரைச் சமாளிப்பதற்கு உடற்பயிற்சி உதவியாயிருந்தது", என்று எழுதியுள்ளார்.

சைபீரியாவில்:

இதன்பிறகுதான் சைபீரியா வாழ்க்கை! அங்கும் இடைவிடாத உழைப்புத்தான். அங்கிருந்த குடியானவர்களின் வாழ்க்கை பற்றி ஆராய்ந்தார். அவர்களுக்காக நிலப் பிரபுக்களை எதிர்த்து வாதாடினார். மூன்றாண்டுத் தனி வாழ்க்கைத் தண்டனையைப் பற்றிக் கவலைப்படாமல் வருங்கால நம்பிக்கையுடனும், நெஞ்சுறுதியுடனும், சுறுசுறுப்பாகப் பணியாற்றினார்.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் கிளர்ச்சி செய்தமைக்காகக் கைது செய்யப்பட்ட பள்ளி

ஆசிரியை க்ரிப்ஸ்காயாவும் நாடு கடத்தப் பட்டு ஓராண்டுக் குப்பின் சைபீரியாவுக்கு வந்து சேர்ந்தாள். இங்குதான் இரு நண்பர்களும் திருமணம் செய்து கொண்டனர். அவரது இறுதிக் காலம்வரையில் நன்றியும் அன்பும் உள்ள வாழ்க்கைத் துணைவியாக இருந்து பேருதவி செய்து வந்தாள், க்ருப்ஸ்காயா. உலகப் பெருந் தலைவர்களுக்கு வாய்த்த ஒப்பற்ற சில மனைவிமார்களில் இவரும் ஒருவர்.

"நண்பர்கள், உறவினர் ஆகியோர் துணைகொண்டு நூல்களையும், பத்திரிகைகளையும் வரவழைத்துப் படித்தார். மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்களை மேலும் நுணுக்கமாகப் படித்தறிந்தார். பிறமொழி நூல்களை ருஷ்யமொழியில் ஆக்கினார். பல நாட்களில் இரவு முழுதும் படித்து எழுதிக் கொண்டிருப்பாராம். தம் கட்சியின் நடைமுறைக்காக விரிவான வேலைத் திட்டம் வகுத்ததும், முப்பதுக்கு மேற்பட்ட நூல்களையும், துண்டு அறிக்கைகளையும் எழுதியதும், சைபீரியாவில்தான்.

பொழுதுபோக்கு

"மிகக் கடுமையான மூளை உழைப்பாளியான லெனின் பொழுது போக்கு ஓய்வையும் மறப்பதில்லை. பனிக்கட்டியில் சறுக்கி ஓடுவது, வேட்டையாடுவது, காடுகளில் நீண்ட தொலைவு நடப்பது, இயற்கை வனப்பைச் சுற்றிக் காண்பது, இயக்கத் தோழர்களுடன் கூடிக் கொண்டு ஒன்று சேரப்பாடுவது-போன்ற பொழுது போக்குகள் அவருக்கு மிகப் பிடித்தமானவை.

தம் தாயாருக்கும் உறவினருக்கும் அன்புருகக் கடிதம் எழுதுவார்; அவர்களிடமிருந்து வரும் கடிதங்களினால் இன்பம் பெறுவார்.

ருஷ்யாவில் ஒரு மார்க்கிஸ்ட் கட்சியை உருவாக்க வேண்டுமென்பதில் மிகுந்த கவலை கொண்டிருந்தார். விடுதலை நாள் நெருங்க நெருங்க, வருங்காலப் புரட்சித் திட்டத்தைப் பற்றிய நினைவின் காரணமாக ஊண், உறக்கமில்லாமல் மெலிந்துவிட்டார். 1900-ம் ஆண்டு விடுதலை பெற்று சைபீரியாவை விட்டுப் புறப்பட்டு பல மைல்கள் குதிரை இழுக்கும் பனித்தரை வண்டியில், கடுங்குளிரில் பயணம் செய்து பீட்டர்ஸ்பர்க் அருகிலுள்ள ஓர் ஊரில் தங்கினார். முக்கிய நகர்களில் அவர் தங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

பிறகு சுவிட்சர்லாண்டு சென்றார்; அங்கிருந்த "தொழிலாளர் விடுதலை"க் குழுவினரைச் சந்தித்தார்; ருஷ்ய மக்கள் படிக்கக் கூடிய ஒரு புரட்சிப் பத்திரிகையை வெளியிடுவதற்கான ஏற்பாடு செய்தார். அதுதான் 'தீப்பொறி' (Iskra—இஸ்க்ரா). அது மூனிக் நகரிலிருந்து வெளியிடப்பட்டது. சார் ஆட்சியைக் கவிழ்ப்பதும், மக்கள் ஆட்சியில் தொழிலாளருக்கே முதலிடம் இருக்க வேண்டும் என்பதும் இந்த ஏட்டின் குறிக்கோள்.

இயக்க ஆக்க வேலை

பிறகு 1903-ல் கூடிய புரட்சி-காங்கிரஸ் (கூட்டம்) 'போல்ஷ்விக்' என்றும், 'மென்ஷ்விக்' என்றும் இருபிரிவுகளாக உடைந்தது. முந்தியது தொழிலாளர் (Proletariat) கட்சி; பிந்தியது நடுத்தரத்தினர் (Bourgeois) கட்சி.

1905-ல் நடந்த ரஷ்ய-ஜப்பான் போரின்போது ரஷ்யா தோற்றது. அப்போது கிளர்ச்சி செய்த தொழிலாளர் மீது அரசாங்கம்

சுட்டது. குடியானவர்கள் வேதனையில் மூழ்கிக் கிடந்தனர். இவற்றைப் பயன்படுத்தி லெனின் ஒரு பெரும் புரட்சிக்கு ஏற்பாடு செய்தார் இதற்கு இராணுவ உதவி கிடைக்காதபடியால் புரட்சி முயற்சி தோற்றது.

இதன் மூலம் லெனின் பெற்ற படிப்பினைகள்:–(1)மக்கள் தற்காலிகமாக அரசியல் சுதந்தரம் பெறவேண்டும். (2) தொழிலாளர்–விவசாயிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் ஆட்சியை நடத்த வேண்டும். (3) மக்கள் தங்களிடம் வன்முறையில் நடப்பவர்களிடம் தாங்களும் வன்முறையில் நடக்க வேண்டும்.

இம்முடிவுகளே 1917-ல் நடந்த இறுதிப் புரட்சிக்கு வித்துக்களாக இருந்தன.

1907-ல் லெனின் ருஷ்யாவிலிருந்து வெளியேறி விட்டார். பிறகு 1917-ல் தான் மீண்டும் வந்தார். அதுவரை ருஷ்யாவில் ஒரே கொந்தளிப்பும் அடக்குமுறையும் பீறிட்டன. அடிக்கடி புரட்சியும் வேலை நிறுத்தமும்! சிறைத்தண்டனையும், துப்பாக்கிச் சுடுதலும்! தூக்கிடுதலும் நாடுகடத்தலும்!

வன்முறையினால் சோஷலிசம் கூடாது என்பது மென்ஷ்விக் கட்சியின் கோட்பாடு; இது மார்க்ஸ் கொள்கைக்கு முரண்பட்டது என்பது போல்ஷ்விக் கட்சியின் கோட்பாடு. எனவே தம் எதிரிகளின் விவாதத்தை தகர்ப்பதற்காக கட்டுரைகளும் அறிக்கைகளும் எழுதித்தள்ளிக் கொண்டேயிருந்தார், லெனின், வெளிநாட்டிலிருந்தபடியே.

1912–ல் ருஷ்ய போல்ஷ்விக் மாநாட்டை 'பிரேகு' (Prague) நகரில் கூட்டினார், லெனின். பீட்டர்ஸ்பர்க் நகரிலிருந்து ப்ராவ்டா என்ற இதழை வெளியிட ஏற்பாடு செய்தார். பிறகு பாரிஸ் நகருக்குக் குடியேறினார். நாளுக்கு நாள் புதுப்புதுப் புனை பெயருடன் போல்ஷ்விக் ஏடுகளுக்கெல்லாம், சோஷலிச தத்துவ-புரட்சிக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார்.

நிழல்போல் இருந்துவந்த இவரது வாழ்க்கைத் துணைவியார் மற்ற ஆக்க வேலைகளில் ஈடுபட்டும், இயக்கத் தோழர்களை வரவேற்றும், இரகசியக் குழுக்கள் அமைத்தும், கடிதங்களை மறைவு முறையில் மாற்றி எழுதியும்–பல்வேறு உதவிகளைப் புரிந்து வந்தார்.

(தொடரும்)

பிரிட்டன்—இந்தியா

1963-ஆம் ஆண்டில் பிரிட்டன் 180 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்துள்ளது. இது, இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பில் நான்கில் ஒரு பங்காகும். இதனால் இந்தியாவுக்கு கணிசமான அந்நியச் செலாவணி வசதி கிடைத்துள்ளது..

"நான் எப்போதும் குறிப்பிட்ட நேரத்துக்கு கால் மணி முந்தியே செல்ல் வேண்டிய இடத்துக்குச் செல்வேன். இதனால் தான் நான் ஒரு மனிதன் ஆனேன்."

—லார்டு நெல்சன்

தாமஸ் கார்லைல்: குறிப்புக்கள்

"ஜேன் வெல்ஷ் கார்லைல், தாமஸ் கார்லைலின் துணைவி இங்கே புதைக்கப்பட்டுள்ளாள்....அவளது வாழ்நாளில் பல துன்பங்களை அநுபவித்துள்ளாள்; அன்பும் நன்றியும் உடையவள். 40 ஆண்டுகளாக அவளது கணவனுக்கு உண்மை அன்புடன் கூடிய உதவி நண்பராக இருந்து வந்தாள்; தனது பேச்சாலும் செய்கையாலும் அவரது கணவன் செய்த, முயன்ற, ஒவ்வொன்றுக்கும் அலுப்பில்லாமல் துணை நின்று ஊக்கப்படுத்தி அவரை முன்னேற்றினாள். திடீரென்று அவரிடமிருந்து பறித்துக் கொள்ளப்பட்டாள்; கணவனது வாழ்க்கையின் ஒளியே அவிந்துவிட்டது.''

இவ்வாறு மனைவியின் கல்லறையில் எழுதி வைத்தார், கார்லைல்.

உலகப் பெரியார்களுக்கு சிறந்த வாழ்க்கைத் துணைவியார் வாய்ப்பது மிகமிக அரிது. அந்த அரிய வாய்ப்புக் கிடைத்தது தாமஸ் கார்லைலுக்கு.

''உழைப்பே வணக்கம்" (Work is worship) என்ற சொற்றொடர் தாமஸ் கார்லைலுடையது.

இங்கிலீஷ் இலக்கியத்தில் தனியிடத்தைப் பெற்றவர் கார்லைல் முப்பதுக்கு மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் முக்கியமானவை. ''ஃப்ரெஞ்சுப் புரட்சி"; "ஃப்ரெடரிக் என்னும் பெரியோர்"; "சார்ட்டர் ரிசார்ட்டஸ்" முதலியன. இவரது நடை தனிச் சிறப்புப் பெற்றது; இலக்கண வரம்பைக் கடந்தது; பல வாக்கியங்களுக்கு வினைச் சொல்லே யிருக்காது. ஆனாலும் நேர்மை ஒளி வீசிய அவரது பண்பட்ட நெஞ்சிலிருந்து வந்தமையால் அழுத்தமும் ஆழமும் கொண்ட கருத்துடன் விளங்கிற்று.

இவரது "ஃப்ரெஞ்சுப் புரட்சி" என்ற நூலை அரும்பாடுபட்டு இரவு பகலாக உழைத்து எழுதி முடித்ததும், தம் நண்பர் ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் அதைப் படித்துப் பார்க்க வாங்கிப் போனார். அவர் வீட்டுப் பணிப் பெண் அதைக் கழிவுக் காகிதம் என்று கருதி அடுப்பெரிக்கப் பயன்படுத்தி விட்டாள். இத் துயரச் செய்தியைக் கேட்ட கார்லைல் தம் நண்பரைக் கடிந்து கொள்ளாமல், ''கவலைப்பட வேண்டாம்", என்று ஆறுதல் கூறிவிட்டு. பழைய குறிப்பு எதுவுமே இல்லாவிடினும், மீண்டும் அதே நூலை எழுதி முடித்தார்.

ஏழ்மையில் பிறந்தார்; படித்தார்;ஏழ்மையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டார். சோம்பேறிகளைக் கடுமையாகத் தாக்கினார்; உழைப்பைப் பாராட்டிப் புகழ்ந்தார். பண மூட்டைகளை (Mammon Worshippers) என்று கண்டித்தார்.

85-ஆம் வயதில் (1881-ல்) மறைந்தார், தலை சிறந்த எழுத்தாளரில் ஒருவரான தாமஸ் கார்லைல்.

வைதீக கிருஸ்து மதத்தையும் அதன் மூட நம்பிக்கைகளையும் கண்டித்தார். ஆனாலும் அவரது உயர்ந்த ஒழுக்கத்தினால் மத வாதிகளின் பாராட்டையும் பெற்றார்.

அவர் பிறந்த நாடு (பிரிட்டன்) முதலில் அவரைப் பாராட்டவில்லை; வெளி நாடுகள் பாராட்டிய பிறகே, அவரது சிறப்பை உணரத் தொடங்கியது. இதனால் வேதனைப்பட்ட அவர், தம்நாட்டு ராணி தந்த உதவியையும் பட்டத்தையும் ஏற்க மறுத்துவிட்டார். தாம் பிறந்த ஸ்காட்லண்டு பகுதியில், அவர் விரும்பியபடியே அவரது பெற்றோர்களுக்கருகில் புதைக்கப்பட்டார். பேரறிஞர்களின் உடலங்கள் புதைக்கப்பட்ட "வெஸ்ட்மினிஸ்டர் அபே" யில் தம்மைப் புதைக்க வேண்டாம் என்று முன் கூட்டியே தெரிவித்து விட்டார்.

குத்தூசி ஏடு பற்றிய அறிக்கை

(நமூனா IV 8-ஆம் சட்டப் பிரிவுப்படி)

1. வெளியிடும் இடம் : மாணிக்கம் பிரஸ், 1, நெல்சன் மாணிக்க முதலியார் ரோடு, சென்னை-29.
2. வெளிவரும் காலம் : இங்கிலீஷ் மாதம் 4-ஆம் தேதி தோறும்.
3. அச்சிடுபவர் : ஏ. எம். பொன்னப்பா

   இனம் : இந்தியத் தமிழர்

   முகவரி : 1, நெல்சன் மாணிக்க முதலியார் ரோடு, சென்னை-29.

4. வெளியிடுபவர் :
5. ஆசிரியர் :
6. உரிமையாளர் :

   } சா. குருசாமி

   இனம் : இந்தியத்தமிழர்

   முகவரி : 84, ஷெனாய் நகர், சென்னை-30.

சா. குருசாமி ஆகிய நான் மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதியாக அறிவிக்கிறேன்.

(ஒப்பம்) சா. குருசாமி
(வெளியிடுபவர்)

நல்ல கணவனின் ஏழு பண்புகள்

1. மென்மை:-வெளியில் உறுதியும் வீரமும் உள்ளவனாக வும், தன் மனைவியுடன் இனிமை கலந்த மென்மைகொண்டவனாக வும் இருக்கவேண்டும். "உன்னைக் காதலிக்கிறேன்", என்று எப்போதாவது சில தடவைகள் கணவன் கூறவேண்டும் என்பதை ஒவ்வொரு மனைவியும் எதிர்பார்க்கிறாள்.

2. மரியாதை:—கணவன் முரட்டுத்தனமாகவோ, அலட்சியமாகவோ, மரியாதைக் குறைவாகவோ நடந்துகொள்வதை எந்த மனைவியும் விரும்புவதில்லை. "நாங்கள் தனித்திருக்கும்போது தன் நல்ல நடத்தைகளை மறந்துவிடுகிறானே, என் கணவன்" என்று ஏங்கும் மனைவிகள் பலர்!

3. கலந்து பழகுதல்:-நண்பர்களுடனும் மற்றவர்களுடனும் கலந்து, சிரித்து விளையாடி-சமமாகப் பழகுவது போலவே மனைவியுடனும் பழகவேண்டும். வீட்டில் பெறுவது உணவும் உறக்கமும் மட்டுந்தான் என்று கணவன் கருதக்கூடாது.

4. கருத்தறிதல்:-(Understanding) "மனைவியின் தேவைகளை அறிந்தும் அவளது பிறந்த நாளில் அவள் தேவைப்படுவதை உணர்ந்து பரிசளித்தும் அவளது கணவன் அன்பு காட்டுவானேயானால் அவளுக்கு அது எத்தனை இன்பம்தரும் என்பதை அறிந்துள்ள கணவன்மார் மிகச் சிலரே. அவளது பெருந்தன்மையை உணர்ந்து அதற்கேற்ற அன்பு காட்டுவது இன்றியமையாதது.

5. நீதி:—கணவன் (தான் பொருள் ஈட்டுவதன் காரணமாக) தானே வீட்டுக்குத் தலைவன் என்று கருதிக்கொண்டு மனைவியிடம் சொந்தச் செலவுக்காகவும் வீட்டுச் செலவுக்காகவும் கொடுக்கும் பணத்தில் சிக்கனம் காட்டக் கூடாது. கணவன் தன் செலவுக்காக மட்டும் மிகுதியான பணம் வைத்துக்கொள்வதாகப் பல மனைவிமார் மனக்குறை அடைகின்றனர்.

6. நன்றியுடைமை:-"நானும் என் கணவனும் பிறருடன் வெளியே செல்லும்போது என்னைக் கிண்டல் செய்தும், பரிகசித்தும், அவமானப்படுத்துகிறார். எங்கள் குழந்தைகள் முன்புகூட என்மீது குற்றங் கண்டு கண்டிக்கிறார்", என்று மனவேதனை அடைகின்ற மனைவிமார் பலர். தன் கணவன் தன்னை என்றும் காட்டிக் கொடுத்துவிட மாட்டார் என்ற நம்பிக்கை மனைவிக்கு இருந்தால்தான் இல்லற வாழ்க்கையில் இன்பம் இருக்கும்.

7. நேர்மை:-மனைவிக்குத் தெரியாத இரகசியம் இருக்கக் கூடாது. கணவன் தன்னிடம் பொய் சொல்லுகிறான் என்ற ஐயப்பாடு தோன்றியவுடனே மனைவி அவனது நடத்தைகள் மீதெல்லாம் அய்யப்பாடுகொள்கிறாள். உண்மையாகவும் நேர்மையாகவும் கணவன் நடந்து கொள்வது மிகமிக முக்கியம்.

[இத்தாலி, அமெரிக்கா, கானடா ஆகிய நாடுகளில் தனித் தனியே அந்தந்த நாட்டுப்பெண்களில் சிலரது கருத்துக்களைக் கேட்டுத் தொகுத்து வெளியிட்ட கட்டுரையின் சாரம் இது. எழுதியவர், டாக்டர் டேவிட் மேஸ்.]

("ரீடர்ஸ் டைஜெஸ்ட்")

கவிதைப் பகுதி

உழைப்பாளியே உயிராளி

—(சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட்.)—

புத்துலகச் சோசலிசப் பொழிலெழுப்ப வேண்டும்;—
புகைபடிந்த பழஉலகை உடைத்துவிட வேண்டும்;—
சத்துளதாய் உலகமிதைச் சரிக்கட்ட வேண்டும்; -
தடம்புரளும் குதிரைக்குக் கடிவாளம் வேண்டும்!
மெத்தனமாய் இருப்பவரை விழிப்பூட்ட வேண்டும்;—
விழியாரேல் தலைநிறைய நீர்கொட்ட வேண்டும்!
பத்திரமாய்ப் பத்திரமாய் வழிநடக்க வேண்டும்;—
பழமையிலே புதுத்துடிப்பைப் பாய்ச்சிவிட வேண்டும்!

* * *

மடமையெனும் விலங்குகளுக்கு அலங்காரம் செய்தே,
'மாபெரிய கலைகண்டேன்!' என்பவர்கள் உண்டு;—
திடமுடனே அவர்கலையை விலங்கோடும் அள்ளித்
தென்கடலின் நடுவிடத்தே அமிழ்த்திவிட வேண்டும்!
உடலதனைப் பசிபிடுங்கத் துடிக்கின்ற ஏழைக்கு
'உலகநிலை யாமைவலை' வீசுகின்ற ஞான
மடமையினை முதல்வேட்டில் மாய்த்தொழிக்க வேண்டும்;—
மனிதனுக்கு முதலின்பம் பசியாறும் இன்பம்!

* * *

வேற்றுமைகள் பிளவுகளை விரிவாக்கிக் கொண்டே,
விளக்கங்கள் விரிவுரைகள் அவைகளுக்குக் கூறும்
கூற்றுவர்கள் உள்ளவரை முன்னேற்ற மில்லை;—
கூன்விழுந்த உழைப்பாளி நிமிர்ந்துநிற்க மாட்டான்!
ஏற்றியதோர் பெருஞ்சுமையாய் உல்லாசக் காரர்

இருக்கின்றார், உழைப்பாளி தோள்மீதில் ஏறி!
மாற்றிடுவோம் இச்சுமையை முதல்நாளில் என்றால்,
மறுநாளில் உழைப்பாளி தலையோங்கி நிற்பான்!

* * *

உழைப்பாளி யேஉலகின் உயிராளி யாவான்;—
உயிரதனைப் பட்டினிக்குள் விட்டெறிந்து விட்டால்,
களைப்பாளி யாகிமிகு கடனாளி யாகிக்
கண்மூடிப் பசிமயக்கில் சுருண்டுவிடு கின்றான்!
தழைப்பாளி சமுதாய ஒட்டுண்ணி யாவான்;—
தலையாளி யாயவனை நியமித்து வைத்தே,
பிழைப்பாளி அவனுக்குப் புகழ்பாடு கின்றான்;—
பிறகென்ன உலகெங்கும் பேயாட்ட மேதான்!

* * *

அறமுரைக்கும் கதைகளிலும் அந்தத்தில் பார்த்தால்
அடிதடியின் முடிவில்தான் அறம்வெல்லக் காண்போம்!
திறமிருந்தும் தெளிவின்றிச் சந்துபொந்தில் சுற்றி
திரும்பியந்த மூலைக்கே வந்துவந்து சேர்ந்தே,—
அறமெனவும் கருணை என்றும் புதுமுறையாம் என்றும்
அறிவுக்குப் புறம்பான விளக்கங்கள் சொல்லும்
வறட்டுவழி வேதாந்த வாசலினைச் சாத்தி,
வாருங்கள் வெளியேறி நல்வழியில் செல்வோம்!

* * *

கண்கலங்கி மிகுபலர்கள் நடைமெலிந்து செல்லக்
கைவீசி ஒருசிலர்கள் மிதப்பதுவோ வாழ்க்கை?
பண்பிருக்க வேண்டும், இன்றேல் பசியிருக்க வேண்டும்;—
பாரகத்தை இரண்டிலொன்றுக்கு உரிதாக்க வேண்டும்!
பண்புடைமைக் கதையளப்பு வாசல்வரை ஆள,
பசியங்கே வீட்டுக்குள் கொடிகட்டி ஆள,
பெண்புலம்பல் புலம்பியிங்கே பெரும்பாலார் மாயும்
பேதைமைக்கு வெகுவிரைவில் முடிவுகட்ட வேண்டும்!

நோயற்ற வாழ்வன்றோ குறைவற்ற செல்வம்?
நூருண்டு நூருண்டு நோய் மடமை பற்றி
வாயற்ற பூச்சிகளாய்ப் பலப்பலர்கள் உள்ளார்;—
வாழ்கிறதாம் இவ்வுலகம்!-ஈதென்ன கேலி?
"சாயட்டும் சடசடெனப் பழமடமைப் போக்கு;—
தளிர்க்கட்டும் மளமளெனச் சோசலிச வாழ்க்கை!"
வாயெட்டும் வரையிதனை முழங்கியொலி செய்வோம்!—
வளர்குன்றத் தோள்தோள்கள் நிமிரட்டும், அங்கே!

"நண்பர்களின் குறைகளை மறந்துவிடு; பகைவர்களின் குணங்களை நாடு. இப்படிச் செய்வதில் உனக்கு நன்மையுண்டு."

—கதே (Goethe)

* *

"ஒரு கர்ம வீரனுக்கு அவனது கொள்கையே பெரிது. தேவைப்பட்டால் அதற்காக எப்பொழுதும் தன் உயிரையும் பலி கொடுக்கச் சித்தமாயிருக்க வேண்டும்.

—காந்தியடிகள்

* * *

"வாழ்க்கை என்பது தொண்டு. அதைப்பற்றி வேறு எந்த வித விளக்கமும் தவருகும். பிற விளக்கங்களை ஒப்புக்கொண்டு நடப்பவர்கள் தவருன பாதையில் சென்று விடுவர்."

—மாசினி

* * *

"ஒரு நாளும் திருப்தி செய்ய முடியாத மூன்று ஆசைகள் உள:— (1) இன்னும் வேண்டும் என்ற பணக்காரரின் ஆசை (2) வேறு நோய் ஏதேனும் வேண்டும் என்ற நோயாளியின் ஆசை (3) வேறு எங்கேனும் போகவேண்டும் என்ற சுற்றுப் பயணியின் ஆசை."

—R. W. எமர்சன்

புலவர் வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.

நாளும் கோளும் என் செயும்?

[எல்லா மதங்களிலும் மூடநம்பிக்கைகள் உண்டு. அறிவுக்குத் தடைபோடும் 144 உண்டு! ஆனால் இந்து மதத்தைப்போல் மூச்சுவிடுவதற் கெல்லாம் மடமை குறுக்கிடுகின்ற மதம் உலகிலேயே கிடையாது. "நல்ல நாள்-கெட்ட நாள்" தொற்றுநோய் தமிழகத்தைப் பீடித்திருப்பது போல பிற பகுதிகளில் கிடையாது. இராகுகாலம், சகுனம் போன்ற மடமைகளும் வட இந்தியப் பகுதியில் கிடையாது. நாளும் கோளும் தமிழனைக் கோழையாக்கி விட்டதையும், இதற்கு இந்துமதக் கட்டுக் கதைகளே காரணம் என்பதையும் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரை.]

பரவை சூழ்ந்த பாருலகில் இந்தியத் துணைக் கண்டம் ஒரு வியப்புக்குரிய நிலப் பகுதி. அதிலும் தென்னாடு ஒரு நகைப்புக்குரிய பகுதி. நினைக்க நினைக்க எவர்க்கும் (அறிவைப் பயன்படுத்துகின்றவர்க்கு) வியப்பும், நகைப்பும், வேதனையும் உண்டாகாதிரா.

ஏனெனின், இந்நாட்டில் உள்ள மக்கள் பெரும்பாலோர் (நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பதே முக்காலே மூன்று வீசம் முக்கால் வீசம் பேர்), பகுத்தறிவுக்கே, ஏன், தன்னறிவிற்கே தடை போடுகின்றவர்களாயுளர். அங்ஙனம், எவராவது அறிவுக் கண்கொண்டு ஆராயத் தொடங்கினால் அவரை 'நாத்திக'ப் பட்டஞ் சூட்டி நலியச் செய்கின்றனர்.

எந்தக் காரியம் செய்தாலும் நல்ல நாள், கோள் பார்த்துச் செய்கின்றனர். இராகு காலம், எமகண்டம், குளிகை காலம், யோகம், சூலம், திதி, நட்சத்திரம், சகுனம் பார்த்துத்தான் செய்கின்றனர். திருமணம் என்றால் மணமகனுக்கும் மணமகளுக்கும் பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு கிரகங்களை யெல்லாம் நன்கு சோதித்து நட்சத்திரப் பொருத்தம், நாள் பொருத்தம், கணப் பொருத்தம், யோகப் பொருத்தம், திதிப் பொருத்தம், கிரகப் பொருத்தம், இராசிப் பொருத்தம் முதலிய பத்துப் பொருத்தங்கள் பார்க்கின்றனர்.

எதை அடிப்படையாகவைத்து இவையெல்லாம் பார்க்கின்றனர் தெரியுமா? அந்தப் பெண்ணோ, ஆணோ பிறந்த நேரத்தில் எந்தக் கோள், எந்த நிலையில் இருந்தது என்று பஞ்சாங்கத்தைக்கொண்டு கணித்துக் கூட்டி பெருக்கி, கழித்துக் கண்டு பிடிக்கின்றனர். நுணுகி நுணுகி ஆய்ந்து ஒரு சிறிதும் தவறிப் போகாது பார்க்கின்றனர். ஆனால், திருமணம் செய்த அன்றே மணப்பறை பிணப் பறை யாவதை நாம் அறிவோம். எங்கே அவர் சாதகம்? காந்தி சோசியர் சொன்னரே,

125 வயது வரை காந்தி உயிர் வாழ்வாரென்று. என்ன வாயிற்று?

இத்தகைய நாள் கோளெல்லாம் பார்ப்பவர் யார் என்ருல், இந்து மதத்தைச் சேர்ந்தவர்களே! ஆனுல், சில இந்தியக் கிறித்தவர்களும், முசிலிம்களும், ஏனையோரும் இந்துக்களுடன் பழகும் கேட்டாலும், இந்து மதத்தினின்றும் புறமதத்திற்குப் போனவர்களாதலாலும், இந்நாள், கோள் பார்த்துக் காரியம் செய்யும் பழக்கத்தையும், திருமணத்திற்குச் சாதகப் பொருத்தம் பார்ப்பதையும் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் மதக் கொள்கைப்படி இவை பார்ப்பதில்லை. சார்ந்ததன் வண்ணமாகும் சூழ்நிலையே காரணமாகும்.

இப்பொழுது முசிலிம், கிறித்தவர்களிலும் சோதிடர்கள் இருக்கின்றனர் என்பது மிகையன்று. இவை பார்த்துச் செய்யும் காரியங்கள் யாவும் வெற்றியுடன் முடிகின்றனவா? இல்லையென்பதே சரியான விடை. பின்னர், ஏன் இவற்றைப் பார்க்கின்றனர்?

கட்டுக் கதைகள்

இந்த நாட்டில் உள்ள புராணங்கள் ஏராளம். அவை யாவும் புலவர்களின் புனைந்துரைகளே. அவை படிப்பதற்கு, இக்காலக் காதல் கதைகள், திரைப்படக் கதைகள் போல, வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருந்தன. இராமாயணம், மகாபாரதக் கதைகளைக் கேட்டாலோ, படித்தாலோ மிகுந்த புண்ணியம், சொர்க்கலோகத்தில் போய் இன்பத்துடன் வாழலாம் என்று பலவாறு புனைந்து எழுதிவைத்துள்ளனர். தம்மறிவற்ற மக்கள் இவற்றை யெல்லாம் கேட்டும், படித்தும் உண்மையென்று நம்பிவிட்டனர். இப்பொழுது எத்தனைபேர் . தலபுராணங்களைப் படித்துப்பார்த்துவிட்டு ஒவ்வொரு ஊராகச் சென்று அங்கங்குள்ள கற்களையும், சிலைகளையும் வணங்கிவிட்டு, அங்குள்ள கால்கழுவக்கூடத் தகாத குளங்களில் (தீர்த்தங்களில்) முழுகி வருகின்றனர்! சிலர், ஒவ்வொரு ஊரிலுள்ள குழவிக் கல்லிற்கும், சிலைகளுக்கும் தனித்தனியான (மகாத்மியம்) சிறப்புத்தன்மை உண்டுஎன்று ஆயிரக்கணக்கான கல்தொலைவு சென்று பல தொல்லைகளையும் பொறுத்துக்கொண்டு வணங்கி வருகின்றனர். ஒவ்வொரு கல்லுக்கும் ஒவ்வொரு பெருமை கற்பித்துள்ளனர், புராணிகர்கள். அதை நம்பியே அறி

சோவியத் ருஷ்யாவில்:

இன்றைய மக்கள் தொகை, 22 கோடியே 50 லட்சம். நிமிஷத்துக்கு 6 பேர் வீதம், மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ 2,70,000 பேர் வீதம் பெருகிக் கொண்டிருக்கிறது.

நான்கில் மூன்று பேர் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு பிறந்தவர்கள். 16 வயதுக்கு உட்பட்டவர்கள், பிரிட்டனில் 1000-க்கு 251 பேர்; ருஷ்யாவில் 1000-க்கு 304 பேர்.

புரட்சிக்கு முன்பு ருஷ்யரின் சராசரி ஆயுட்காலம் 32 வயது: இன்று 72.

ருஷ்யாவில் மொத்தம் 1763 நகரங்கள்; நகரங்களை யொத்த 3255 தொழில் பகுதிகள்—இவற்றில் 11 கோடியே 70 லட்சம் பேர் வாழ்கின்றனர்; 7 லட்சம் கிராமங்களிலும் 10 கோடியே 80 லட்சம் பேர் வாழ்கின்றனர்.

வற்ற மக்கள் பொருளையும், காலத்தையும் வீணாக்குவதுடன் உடல் நலத்தையும கெடுத்துக் கொண்டு பல நோய்களுக்கும் ஆளாகின்றனர்.

பொய்யையும், புனைந்துரையை யும், புராணப் புளுகுகளையும், இராமாயண, மாபாரதக் கட்டு ரைகளையும் உண்மை யென்று நம்பி அவற்றையெல்லாம் நடை முறையில் நம்மக்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். இவை மக்கள் மனத்தில் ஆழப்பதிந்து வைரம் பெற்றுவிட்டன.

மேலும், எல்லாம் அவன் செயல்; அவனன்றி ஓர் அணு வும் அசையாது; நம்மாலாவது யாதொன்றுமில்லை; விதிப்படியே எல்லாம் நடக்கும்; அதிர்ஷ்டப் படிதான் அனைத்தும் நடக்கும்; மோட்சம், நரகம், வைகுந்தம், சொர்க்கலோகம், எமலோகம் என்றெல்லாம் எழுதிவைத்தும், அவற்றை மக்களிடையே கதை மூலமும், நாடகம் மூலமும், "கதா காலட்சேபம்", மூலமும் பரப்பிவிட்டனர். ஏன்! இன்றும் அப்பணிகள் மதப் பித் தர்களால் செய்யப்பட்டுத்தானே வருகின்றன ?

இத்துணைக் கடவுட் பற்று, நாள்—கோள் பார்த்துச் செயல் புரிதல், யாவும் இருந்தும் ஏதா வது ஒரு சிறு பொருளாவது புதி தாகக் கண்டு பிடித்திருக்கிறார் களா இந்த நாட்டார் ?

நாளும் கோளும் பற்றி நாட் டில் வழங்கும் பழமொழி கள் பல; "நாள் செய்வது நல்லவர் செய்யார்; நாள் கோள் பார்த்து நற்செயல் புரிக; கிரகக்கோளாறு அப்பா இது; கிரகப்படிதான் எல்லாம் நடக்கும்; என்னுடைய கிரகச் சாரம் இப்படியாயிற்று," என் றெல்லாம் பொதுமக்கள் பேசிக் கொள்வதை நாடோறும் கேட்கி றோம்.

மடமை வளர்க்கும் ஏடுகள்

இக்கோட்பாட்டிற்கு முரணாக, "நாளென் செயும் மற்றக் கோளென் செயும்; நாளுங் கோளும் நலிந்தோர்க்கில்லை," என்ற புதுமொழிகள் எழுந்தன. ஆனால், இவற்றை வெளிப்படை யாக எவரும் எடுத்தியம்புவது மில்லை, எழுதுவதுமில்லை. ஓரிரு செய்தித்தாள்கள் தவிர ஏனைய நாளிதழ்களும் நாளும் கோளும் பற்றி எழுதி நாட் பலன், வார பலன், மாதபலன், ஆண்டுப் பலன் ஆகியன கூறுகின்றன.

அவற்றை ஆவலுடன் அனைவ ரும் புரட்டிப் பார்க்கின்றனர். அதற்காகவே தாளிகை வாங்கு கின்றவர் பலர். மக்களது மட மையைப் பயன்படுத்திக் கொண்டு விற்பனையை விரிவு படுத்த இந்த இராசி பலன்களை வெளியிடுகின்றனர். ஏன் ? திரைப்பட நடிகைகளின் படங் களையும் அவர்களது வரலாறு களையும்கூட வெளியிட்டு விற் பனையை மிகுதிப்படுத்துகிற செய்தி இதழ்கள் பல. இத்த கைய வேண்டாதவற்றை வெளி யிடும் இதழ்களை மக்கள் விரும் பிப் படிக்கின்றனர் என்றால் என்ன பொருள் ? அறிவுக்கண் கொண்டு எதையும் நோக்கும் பண்பு மக்களிடையே மழுங்கிப் போய்விட்டது என்பதாம்.

எதையும் குருட்டுத்தனமாய் நம்பி முரட்டுத்தனமாய்ப் பேசும் முதியோர்களே இந்த நாட்டில் மல்கியுள்ளனர். ஆதலின், பகுத்தறிவைப் பயன்படுத்தும் பழக்கம் இல்லாமலே போய்விட் டது.

நாள்களும் கோள்களும்

நாள்களை உண்டாக்கியது யார்? மனிதனே! ஏன், கடவுளை உண்டாக்கியதும் மனிதன் தானே? தன் வாழ்க்கையைக் கணக்கிடத் தேவையாயிருந்தது. வானத்தில் இயங்கும் கோள்களை நோக்கியே ஏழு நாட்களின் பெயர்களையும் சூட்டினான், நொடி, நிமையம் (நிமிஷம்), மணி, நாள், திங்கள், ஆண்டு என்று கணக்கிடத் துவங்கினான். அக்கோள்களுக்கு கடவுளர்க்கு உருவம் கற்பித்ததுபோல, கற்பனை உருவங்களை உண்டாக்கிக் கோயில்களிலெல்லாம் அவற்றை நிலை நிறுத்தினான். அவற்றிற்கு "நவக்கிரகங்கள்," என்றுபெயரிட்டான்.

குறளும் பிறவும்

"குறளிலுள்ள அறநெறிகள், பார்ப்பன (இந்து) மதத்தைப் போலவும், பகவத் கீதையைப் போலவும், பயனையும் பரிசையும் எதிர்பார்த்த கருத்துக்களைக் கொண்டவையல்ல என்பது குறிப்பிடத் தக்கது. நன்மை நன்மைக்காகவே செய்யப்பட வேண்டும் என்ற உயர்ந்த கருத்து 211-222 ஆகிய பல குறள்களில் காணப்படுகிறது.... மனிதன் தனக்குள், எப்படி நடந்து கொள்ள வேண்டும், உலகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் – என இரண்டைப் பற்றியும் குறளில் கூறப்பட்டிருப்பன யாவும் நல்லறிவுடன் பெருந்தன்மையும் கொண்டதாக இருப்பதைக் காணலாம். உலக இலக்கியங்களில், இவ்வளவு உயர்தரமான அறிவுரைகளைக் கொண்ட களஞ்சியம் ஒன்று கூடக் கிடையாது." —Albert Schweitzer.

("Indian Thought and its Development." 1935, பக்கம் : 197 & 199)

நாள்-கோள் பார்ப்பதால் என்ன பயன்?

நாட்களை உண்டாக்கியோன் மாந்தனே. அவைகளைக் கோள்களின் அடிப்படையிலே அமைத்தான். தன்னுடைய நலத்தின் பொருட்டே செய்துகொண்டான். இவற்றில் நல்ல நாள் கெட்ட நாள் எப்படி யுண்டாயிற்று? இவனே உண்டாக்கிய நாட்களில் கெட்ட நாளை ஏன் உண்டாக்கினான்? எங்ஙனம் நாட்கள் கெட்டன? தன்து நன்மைக்காகவன்றோ உண்டாக்கினன்?

இந்த நாள் நல்ல நாள், இந்த நாள் கெட்ட நாள் என்று பார்க்காது செயலாற்றுகின்ற பிறநாடுகள் எவ்வளவு முன்னேறுகின்றன? உருசியாவைப் பார்! கடவுள் நம்பிக்கைகூட இல்லாத நாடு! சீனாவை நோக்குக. இன்று நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றதே! அந்நாடுகள் நாள் கோள் பார்ப்பதே இல்லையே! உலகில் 150 கோடி 'நாத்திகர்' உளரே. அவர்களும் நலமாகவும், வளமாகவுந்தானே வாழ்கிறார்கள்?

நல்ல நாள், கெட்ட நாள் பார்த்து எல்லாம் செய்கின்ற நம் நாடு இன்று எந்த வகையிலும் முன்னேறவில்லையே! கைக்கூலி பெறுவதிலும், கள்ள வாணிகஞ் செய்வதிலும், கோவில்கள் கட்டுவதிலும், குட முழுக்குச் செய்வதிலும், திருப்பாவை, திருவெம்பாவை மாநாடுகள் போடுவதிலும், தெய்வங்கட்குத் திருவிழாச் செய்வதிலும், ஒலிபெருக்கி மூலம் திருப்பள்ளி யெழுச்சிபாடி பிறருக்குத் தொல்லை கொடுப்பதிலும், மார்கழி மாதத்தில் கூலிப் படைகளைக்கொண்டு அதிகாலையில் 'பஜனை' பாடிக்கொண்டு தெருத்தெருவாய்ச்சென்று சுண்

டல் கடலை, பொங்கல் வ்ாங்கி யுண்பதிலும்தான் மிகுந்த முன்னேற்றம்! எந்தநாட்டிலும்இத்தகைய முன்னேற்றங்கள் இல்லவே இல்லை. அந்த நாட்டினர் சோம்பேறிகள், முயற்சியற்றவர்கள், கடவுள் பற்றற்றவர்கள் போலும்!

கெட்ட நாளானால், கிரகம் கெட்டதானால் "கிரகசாந்தி," செய்யும்படி சோதிடன் சொல்லுகிறான். உடனே கோயிலிலுள்ள ஒன்பது கற்சிலைகட்கும் "அபிடேகம், ஆராதனை," செய்கின்றனர். கோயிலிலுள்ள இந்தக் கற்சிலைகட்கும் வானத்தில் இயங்கும் கோள்களுக்கும் என்ன தொடர்பு? இக்கற்களுக்குச் செய்யும் பூசையால் அக்கோள்கள் எப்படி நமக்கு நன்மை செய்யும்? மதப்பற்று மதியை மறைத்துவிட்டது; அறிவுக்கு வேலை அற்றுப் போயிற்று; கடவுட் பற்றால் கண் தெரியவில்லை.

இந்த நாட்டிலும் நாள் கோள் பார்க்காத பிற மதத்தினர் செல்வத்துடனும், சிறப்புடனும், நலத்துடனும் வாழவில்லையா? அவர்கள் இந்துக்களைவிட உயர்ந்த நிலையில் தான் இருக்கிறார்கள். அவர்களை இந்த நாளும் கோளும் ஏன் ஒன்றும் செய்யவில்லை?

அவர்கள் நம்புவதில்லை. "நம்பினவர்க்கு நடராசா, நம்பாதவர்க்கு எமராசா" என்று பக்தர்கள் மழுப்புவர். நம்பாதவனுக்கு நாளுமில்லை, கோளுமில்லையென்றால் நாமும் அவ்வாறிருப்பதால் கேடென்ன? கோள்கள் நமக்குத் தீங்கு செய்யுமென்றால் திங்கள், வெள்ளி, சுக்கிரன் இவற்றை நெருங்கிஏவுகணையில் சென்று ஆய்கின்றவர்களை ஏன் அவை ஒன்றும் செய்யவில்லை? இந்த நாட்டில் உள்ள விலங்குகள், மாக்கள் நாள்-கோள்கள் பார்க்காமல் நலமாக வாழவில்லையா? நம்மை மட்டும் பாதிக்குமா? அறிவுக்கு வேலைகொடுத்தால் அனைத்தும் விளங்கும். அதுதானே இங்கு நடக்காது!

"நீ உன்னை மட்டும் யோக்கியனாக்கிக் கொண்டால் போதும். அதனால் உலகில் ஒரு அயோக்கியன் குறைந்திருக்கிறான் என்பதை உணர்வாய்!"

—*கார்லைல்*

* * *

"ஒருவன் தன் பணப் பையைத் தன் மண்டைக்குள்ளே உதறிக்கொள்வானேயானால் அந்தப் பணத்தை அவனிடமிருந்து வேறு யாராலும் பறித்துக்கொள்ள முடியாது. அறிவுக்காக முதலீடு செய்யப்படும் பணம் எப்போதும் கொழுத்த வட்டியைத் தரும்."

—*பெஞ்சமின் ஃப்ராங்க்லின்*

மனசை ப. கீரன் பி. ஏ.

சுவிட்சர்லாண்டில் ஆட்சி முறை

சுவிட்சர்லாந்தின் மக்கள் தொகை, வெளிநாட்டினரையும் சேர்த்து 55 இலட்சத்திற்கும் குறைவுதான். அந்நாட்டினரில் சுமார் 72% செர்மானிய மொழியையும், 21% பிரஞ்சும், 6% இத்தாலிய மொழியும், 1% உரோமானிய மொழியும் பேசுகின்றனர். இவ்வாறு அங்கே நான்கு தேசீய மொழிகள் உள்ளன. தொழில் வட்டாரங்களிலும் பயணிகளுக்கும் ஆங்கிலம் கலந்து உறவாடும் மொழியாகிவிட்டது.

பாதிக்கும் சற்றே அதிகமானவர் பிராடஸ்டண்டுக் கிறித்தவர்கள்; பாதிக்குச் சற்றே குறைந்தோர் கத்தோலிக்கர்கள். வர்த்தகத் துறையில் தலைசிறந்த மிகப் பெரிய நகரம் 440 ஆயிரம். மக்கட்தொகையுள்ள சூரிச் (zurich) நகரமாகும். அது அதற்கு அடுத்த நிலையிலுள்ள நகரங்களான பேசலையும் ஜெனீவாவையும் காட்டிலும் இருமடங்குக்கும் பெரிதாயுள்ளது. நடுவரசின் தலைநகரான பெர்ன் 163 ஆயிரம் மக்களையே கொண்டதாகும். பொதுவாக இது ஆட்சிபுரிய எளிதான நாடல்ல. ஆனால் இந்தச் சிக்கலோ நெடுநாளின் முன்னரே தீர்க்கப்பட்டு விட்டது. சுவிட்சர்லாந்தின் மீது ஆட்சி 'செலுத்தப்படுகின்றது' என்பதினும், அங்கே ஆட்சி 'நடத்தப்படுகின்றது' என்னலாம்.

பெரிய அரசியல் கட்சிகள் பலவற்றின் நிலைக்கேற்ற விழுக்காட்டைக் கொண்டுள்ள நிலையான கூட்டுக்கட்சி ஆட்சி என்றே இதன் அரசைக் குறிப்பிடுவதில் தவறில்லை. ஆயுட்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் நல்ல முறையில் ஏழு உறுப்பினரைக் கொண்ட மத்தியக்குழு உண்மையில் ஒரு கூட்டுவைப்பு நிறுவனத்தின் இயக்குநர் குழுவையே ஒத்திருப்பினும் அது ஓர் அமைச்சரவையின் முறையான பணிகளைச் செய்து வருகின்றது. ஒவ்வொரு உறுப்பினரும் வெளிநாட்டு விவகாரங்கள், உள்விவகாரங்கள், தேசீயப் பொருளாதாரம் போன்ற ஏழு துறைகளில் ஏதேனும் ஒன்றுக்குத் தலைவர் ஆவார். ஒவ்வொரு உறுப்பினரும் தம் துறையைக் கவனிப்பதுடன் வரிசை முறையிலே ஓராண்டிற்குக் கூட்டாட்சியின் தலைவர் ஆகின்ருர். நடைமுறையில் அவர் குழுவின் தலைவர் மட்டுமே ஆவார். அந்த ஆண்டின் இறுதியில் பெரும்பாலும் வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த துணைத் தலைவர் அவரது இடத்திற்கு வருகின்ருர். பாராளுமன்றத்தின் இரு மன்றங்களில் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற தலைவர் தேர்தலின் முடிவு முன்னரே தெரிந்ததாக இருப்பதாலும், தலைவர்க்கு இணையாய் உள்ள மற்றவரைக் காட்டிலும் அவரது அதிகாரங்கள் சற்றேனும் மிகுதியாக இல்லை என்பதாலும் அங்கே அரசியல் கொந்தளிப்புக்களுக்கு வாய்ப்பில்லை.

இம்முறை சுவிட்சர்லாந்து போன்ற சிறிய நாட்டில் நன்கு செயற்படுகின்றது. சிறப்பாக இது அரசியல் வேற்றுமைகளை

யும், தேர்தல் ஆரவாரங்களையும், கட்சிப் பூசல்களையும் தவிர்த்து விடுகிறது. மேலும் இது ஆட்சியில் ஒரு தொடர்ச்சியை நிலவச் செய்கிறது. மத்திய அரசின் ஒரு துறையின் தலைவர் தமது வேலையைத் தெரிந்து கொண்டு அச்சமும் பாரபட்சங்களும் இன்றிச் செயலாற்றவும் நிறைய அவகாசம் இருக்கின்றது. அரசாங்கம் முறியடிக்கப்படுவதில்லை. அரசியல் நெருக்கடி என்பதும் அவர்கள் காணாத ஒன்று.

ஆனாலும் மத்தியக்குழு சர்வாதிகார அதிகாரங்களுடன் அமைந்துவிடவில்லை. மாறாக அது பாராளுமன்றத்தின் பணிவார்ந்த தொண்டனே ஆகும். 'கேண்டன்' என்னும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரு உறுப்பினரைக் கொண்ட மாநிலக்குழு, 24 ஆயிரம் குடிகட்கு ஓர் உறுப்பினரைக் கொண்ட தேசீயக்குழு ஆகிய இருமன்றங்களால் ஆனதே பாராளுமன்றம். ஒருசில சட்டங்களைத் தவிர மற்ற யாவற்றையும் பற்றி தனது பரிந்துரைகளை சமர்ப்பிக்க அரசியல் சட்டத்தில் மத்தியக்குழுவிற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாலும் இவை நிறைவேற்றப்பட்டாலும் சட்டமாக்க ஆய்ந்து கொண்டுள்ள தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாத 30 ஆயிரம் குடிகள் எல்லாமக்களின் பொதுவாக்கெடுப்பிற்கு வழிகோல விண்ணப்பிக்கலாம். இன்னும் சிறப்பாக, 50 ஆயிரம் குடிகள் கையொப்பமிட்டு வேண்டிக் கொண்டால் அரசியல் சட்டத்தையே திருத்தச் செய்யலாம்.

கேண்டன்கள் (Cantons) அரசியல் சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள தனியுரிமை ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்கின்றன. அவற்றில் சில தம்மைச் சட்டப்படி குடியரசுகளாகவே அழைத்துக் கொள்கின்றன. அவையும் தமக்கே உரிய பாராளுமன்றங்களைப் பெற்றுள்ளன. ஆகவே அப்படிச் சொல்லப்படுகின்ற 3000 க்கும் அதிகமான கம்யூன்கள் சுவிட்சர்லாந்தில் இருக்கத்தான் செய்கின்றன. அவை ஒவ்வொன்றும் வரி விதிப்பு, பொதுவைப்புக்களைச் செலவிடுதல், கல்வி—கோயில்களைப் பற்றிய செயல்கள், உள்ளூர் விதிகள், முன்னேற்றத் திட்டங்கள் போன்ற தாமே முடிவு செய்து கொள்ளக்கூடிய தனிப்பட்ட பணிகளும் உள்ளன. ஆகவே ஒரு குடிமகன் தன் குடியாட்சித் தலைவரை ஆதரித்தோ, அன்றி எதிர்த்தோ, தானே நேராக வாக்குப் பதிவு செய்யாவிடினும், தனது நிலைக்கு ஊறு விளைக்கின்ற சிக்கல்களுக்காகவே ஓராண்டில் நான்கு முதல் ஆறு தடவைகள்கூட வாக்குச் சாவடிக்குச் செல்கின்றான். இது அரசியல் கட்சிகளையும் வாக்காளரையும் விழிப்புள்ளவராக ஆக்குகின்றது.

—('சுவிட்சர்லாந்து' தூதரக வெளியீடு.)

நன்கொடை; நன்றி!

பம்பாயிலுள்ள (திருவாடானை வட்ட) ஆதித் திராவிடர் சங்கத்தின் சார்பாக குத்தூசி வளர்ச்சிக்காக அன்பளிப்பு ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். நன்றி. —ஆசிரியர்

பெண்கள் பகுதி :

பெண்ணின் மாட்சியும், வீழ்ச்சியும்

[மு. குழந்தைவேலு, பீ. ஏ.]

[மாட்சியோடு இருந்த தமிழ்ப் பெண்கள் வீழ்ச்சி பெற்ற காரணமென்ன? மத உணர்ச்சியினல் பெண் உரிமைக்கும் பெண் தன்மைக்கும் கேடு வந்தது எப்படி? பெண் இனம் முன்னேறுவதற்கான வழி என்ன? — இவைகளைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை, இது.]

"பெண்ணின் பெருந்தக்க யாவுள?" என்ற வினு எழுப்பிக் கற்புடைய பெண்ணே பெருமைப் படத் தக்கச் சிறந்த செல்வம் என்று முடிவு கட்டுகிருர், வள்ளுவர்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற மகடூ முன்னிலையில் பெண்ணுகப் பிறக்கப் பெரும் பேறு செய்திருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிருர் கவிமணி அவர்கள்.

'தொட்டிலை ஆட்டும் கை நாடாளும் கை' (The hand that rocks the cradle rules the world) என்பது ஆங்கிலப் பொன்மொழி. வீரர்களை உருவாக்கி நாட்டை வீரம் உடையதாகச் செய்ய வீரத்தாய்களாலேயே முடியும் என்பதை நாம் காண்கிருேம். ஸ்பார்ட்டா நாட்டு வீரத்தாய்களின் வரலாறு காணும்போது "மகன் எங்கே?" என்று வினுவியதற்குப் "புலி இருந்த குகை போன்று அவன் இருந்த வயிறு இதோ இருக்கிறது குகையிலிருந்து விடுபட்டுச் சென்ற மறப் புலியாம் வீரன் போர்முகத்திலே இருப்பான்", என்றுபொருள்படக் கூறின வீரத் தமிழ்த்தாயை நாம் புறத்திலே காண்கிருேம்.

காடாக இருப்பினும், நாடாக இருப்பினும், மேடாக இருப்பினும், பள்ளமாக இருப்பினும் எங்கே ஆடவர் நல்லவராக இருப்பார்களோ அந்நிலம் செழிப்புடைய நிலம், அந்நிலம் செழிப்பாக வாழும் என்றுணர்ந்தவர் தமிழர். ஆடவரை உருவாக்கும் பொறுப்புத் தாய்க் குலத்தைச் சார்ந்தது என்பது தமிழர் அறிந்தது. அதனல் தான் "தாயைப் போலப் பிள்ளை" என்று கூறினர். அதை அறுதியிட்டு வரையறுத்துக் கூறுவதற்காகவே சேலையின் நிறம் அதை உருவாக்கத் துணை நின்ற நூலைப் போல் அமையும் என்றனர். விதிவிலக்கு எதற்கும் உண்டு. சூழ்நிலையையும் பொறுத்துள்ளது.

தாய்க் குலத்தைப் பெருமையாக எண்ணி மதிப்பளித்து உயர்வோடு வாழ்ந்த சமுதாயத்தில் 'பெண் புத்தி பின் புத்தி' என்று துணிந்து சொல்லும் காலமும் ஒன்று வந்தது. "பெண் எனப்படுவது பேதமையே" என்று கூறும் நாளும் வந்தது. அதற்குக் காரணங்களும் இருந்திருக்க வேண்டும்.

ஒன்றில் உள்ள குறையை மட்டும் எடுத்துக் கொண்டு நிறைவை விட்டு விடும் பழக்கம்

உள்ளோர் பெண்களிடையே காணப்பட்ட குறைகளை உரை கல்லாக—எடுத்துக் காட்டாகக்—கொண்டு அவர்களைப் போன்றே அனைவரும் வாழ்வர் என்ற பிழை பட்ட கருத்து எனும் அடிப்படை மேல் ஆங்காங்கே அவர்கள் கண்டெடுத்த உடைந்த கல் உருக் குலைந்த செங்கல், ஈரமிழந்து வரண்ட சாந்து, இவைகளால் கோட்டைகளைக் கட்டினார்கள். அழகான தமிழால் வர்ணம் தீட்டி எழில்பட அக்கோட்டையைக் காண்போர் வியக்கக் கட்டி முடித்துக் காட்டினார்கள். ஆலகால விடத்தைக் காட்டிலும் சேலை கட்டிய மாதரைக் கொடிது என்று நம்பும் அளவுக்கு இழுத்துச் சென்றார்கள், கவி நயத்தின் மூலம்.

> "தாய் போற்கழறீத்
> தழீஇக் கோடல்
> ஆய் மனைக் கிழத்திக்கு
> உரித்தென"

மொழிந்த நிலையைப் புகழ்ந்த மக்களினம், நோயைக் காட்டிலும், பேயைக் காட்டிலும் பெண் கொடியவள்; அக்கொடிய பெண்ணால் நிலை கெட்டவர் ஏராளம்; ஏராளம அப்பேயுருவப்பெண்ணை மறுத்து, மறந்து, துறந்து வாழ்ந்தால் உயர்நிலை அடையலாம் என்று ஏனோ, ஏதற்காகவோ, எந்தச் சூழ்நிலையிலோ, யாரோ சொன்ன சொற்களுக்கும் மதிப்புக் கொடுத்துக் கோடிட்டுக் காட்டி விளக்கம் கொடுக்கவும் துணிந்த சிலருக்கு ஆதரவு நல்கவும் தவறவில்லை. இந்த அளவுக்குப் பெண்ணினத்தை மிகவும் கீழ்த்தரமான நிலையிலே சித்தரிக்கும் அளவுக்கு அக்குலத்தில் பிறந்தவர் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு பெண்ணினத்துக்குள்ள உயர் குணத்தை மறந்து, துறந்து மிகவும் படுமோசமான போக்கிலே சிலர் நடக்க முற்பட்டதுதான் காரணம். இதை மறைப்பதாலோ, மறப்பதாலோ, மறுப்பதாலோ பயன் இல்லை.

களவும், கற்பும் அகத்திலே; போற்றிய தமிழர் வாழ்வில் பொருட் பெண்டிர் தலை காட்டத் தொடங்கினர். பொருட் பெண்டிரைக் குறித்து ஒருவர் இழிவாகப் பேசத்தேவையேயில்லை, அழகை மூலப் பொருளாக வைத்துத் திறமையைத் துணையாகக் கொண்டு பொருள் பறித்து அருள் கெடுக்கும் கூட்டம் பொருட் பெண்டிர் கூட்டம். அதனால் நஞ்சைக் காட்டிலும் கொடியவர் பெண்கள் என்று குறிப்பிட்டது பொருட் பெண்டிரை மட்டுமல்ல; குலப் பெண்களையும் சேர்த்துத்தான். பொருட் பெண்டிர் பெண் குலத்திலிருந்தே நீக்கப்பட்டவர்கள். ஆணினத்தில் கயவர் கூட்டம் எப்படி நீக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட கூட்டமோ, காட்டிக் கொடுக்கும் விபீஷணன் எப்படி ஆழ்வார் என்று தனித்து ஒதுக்கப்பட்டாரோ, அதுபோன்று ஒதுக்கப்பட்ட கூட்டம். அதனால் அவர்களைப்பற்றிக் கவலை இல்லை.

போற்றப்பட வேண்டிய பெண்ணினம் தூற்றப்படுவானேன்? புகழப்பட்ட பெண்குலம் இகழப்பட்டதேன்? பாவலர் நாவில் பண் அமைப்பால் "விண்ணவரைக்" காட்டிலும் உயர்ந்தவர் என மதிக்கப்பட்ட மங்கையர் நாயினும் கடையராக இகழ்ந்து உரைக்கப் பட்டது எதற்காக? இதன் காரணத்தை நாம் அறியக் கடமைப் பட்டுள்ளோம்.

உருவும், திருவும், ஒத்த வயதும், கல்வியும், குலனும் ஆய்ந்து மணம் முடித்த நாள் என்றிருந்தது தமிழர் வாழ்வில். ஏறு தழுவியவனை முல்லை நில மகள்

மாலை சூடி மணாளனாகக் கொண்டாள். இவ்வாறே நானில மக்களும் ஒவ்வொரு விதமாகக் கட்டமைந்த உடலழகனைத் தன் தகுதிக்கு ஏற்ப தேர்ந்தெடுத்து மணாளனாகக் கொண்டனர். இதனால் அவர்களுக்குள் உடற் கோளாறு காரணமாகப் பிரியும் மனமோ, சூழ்நிலையோ, ஒருவரை ஒருவர் ஏமாற்றித் தன்னையே ஏமாற்றி நாட்டின் மானத்தை அழிக்கும் நரிக்குணமோ தோன்ற இடம் இல்லாது போயிற்று.

போலி இணைப்பு

"மாமுது பார்ப்பான் மறை வழி காட்டிட தீவலம் வந்து" மணம் புரியும் நாளும்; நட்சத்திரம் எனப்படும் கோள் ஆய்ந்து இந்தக் கோளில் பிறந்தவன் இந்தக் கோளில் பிறந்தவளை மணம் புரியலாம், பொருத்தம் இருக்கிறது, என்று புரட்டுச் சொல்லும் புரட்டர்களை நம்பி, அவர்தம் பொய்யுரையை நம்பி ஆடவனும், பெண்டிரும் ஒருவரை ஒருவர் காணாமல் இருவர் பிறந்த நாட் குறிப்பும் ஒன்றாக ஒருவர் கையில் கிடைத்து அவர் பார்த்து இணைத்து விட்டது என்று சொன்ன சொற்களை நம்பித் திருமணம் புரியும் வேளையும், இழிநிலையும் வந்தது. ஏறுதழுவி ஏற்றம் கண்ட தமிழன் வாழ்வில் பிறந்ததினக் குறிப்புப் பார்த்துத் திருமணம் நடத்தும் அவல நிலை வந்தது. இதன் பயன் காசநோய்க் காரனுக்கும் கட்டிளம் மங்கைக்கும் இணைப்பு! கட்டான உடலுள்ள காளைக்கும் நோயாளி கன்னிக்கும் மணவிழா! இதன் பயன், இந்திரர்கள் அகல்யைகளைத் தேடி வர, அகல்யைகள் செய்வது தவறு என்று உணர்ந்தும் உணராதது போல் நடிக்க, உயர்வாழ்வு வாழ்ந்த சமுதாயமே சீர்கெட்டு நாடகமேடை ஆகிவிட்டது.

நேருவின் மதம்!

"நேருவின் சொந்த வாழ்க்கைத் தத்துவம் முற்றிலும் மதச் சார்பற்றதே. மதத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிடிவாத வெறியையும் கண்மூடிப் பழக்கங்களையும் அவர் பல முறை கடுமையாகக் கண்டித்துள்ளார். இவ் வாழ்க்கைக்குப் பின்னால் நடப்பதைப் பற்றித் தமக்குக் கவலையே இல்லையென்றும் தனிக் கடவுள் ஒன்றை (personal god)ப் பற்றிய நம்பிக்கை தமக்கு இல்லையென்றும் 1944ல் எழுதியுள்ளார். மனித அன்பு-விஞ்ஞான உணர்வு ஆகிய இரண்டு தான் இக்காலத்துக்கு ஏற்ற உயர்ந்த லட்சியங்களாதலால் இந்த அடிப்படையில் வாழ்க்கையை வகுத்துக் கொள்வஃதே சிறந்ததாகும் என்று எழுதியுள்ளார்."

—Donald Eugene Smith

("இந்தியா மதச்சார்பற்ற நாடு" 1963 —பக்கம். 154)

இரண்டாவது காரணம், தமிழர் மறம் பற்றியது. தமிழர் போர் எனின் இன்பம் எனக்கொண்டனர். மூப்பெய்தி, பிணியால் இறந்தாலும் வாளால் உடலைப் பிளந்துதான் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்வராம். இவ்வழக்கம் அன்று நிலவியது. வீரம் வேண்டியதுதான். போற்றப்பட வேண்டியதுதான். எப்படி அன்பு எல்லை மீறிச் செல்லும் போது வெறியாகிறதோ, இகழ்ச்சிக்கு உரியதாகிறதோ, அதேபோல் வீரமும் எல்லை தாண்டிப் போகும்

போது அதை அறியாமை என்றும், இன்னும் கடினமாகச் சொல்லப் போனல் முட்டாள்தனம் என்றும் சொல்லலாம். சற்று சூடாகத்தான் இருக்கிறது! தமிழர் வீர முறை அப்படி இருந்திருக்கிறது. "எம் அரசர் பகைவரோடு போர் தொடுக்கவில்லை. அதனுல் நாம் எமக்குள்ளே பொருது சாவோம்,'' என்று கூறித்தம் நண்பர்களுக்குள்ளே, தம் படையிலுள்ள ஆட்களே ஒருவரோடு ஒருவர் சண்டையிடும் அவல நிலையைக் காண்கிறேம், புறப்பாடலில். இது வீரம் என்று நாம் தமிழர் என்ற காரணத்தால், சொல்லலாம்; சிந்திக்கும் திறனுடைய தமிழனும் சராசரி அறிவு படைத்த பிற நாட்டானும் இது விவேகம் அற்ற செயல் என்று தான் சொல்வார்கள். இவ்வாறு வீரம் முறுக்கேறிய காரணத்தால் அமைதியின்றி சண்டை. சண்டை எனும் அந்நிலை எப்படியும் உருவாயிற்று. மாற்றுனேத் தாள் படிய வைக்கும் ஆற்றலோடு கூடிய ஆள்வினே உடைமை எனப் போற்றப்படும் வீரம், இங்கு இகழ்ச்சிக்குறிப்புக்கு இலக்காகிறது. இதன் பயன் பலர் மரணம். அதன் பயன் பல பெண்கள் தாலியிழந்து, வாழ்விழந்து. 'கணவனே இழந்தார்க்குக் காட்டுவதில்' எனும் கையறு நிலையிலே தள்ளப்பட்டார்கள்.

இந்நிலையிலே சமுதாயக் கட்டுப்பாடு தன் கொடிய வேலிகளே அமைத்துக் காவல் புரிந்தது. விளக்கம் தந்தது. ''நீ முன் பிறப்பில் செய்த பாவத்தால் உன் கண் அனய கணவனேப் பறித்து நீதி வழங்கி விட்டார், அந்த அன்பே உருவான ஆண்டவன். அதனுல் நீ இனி சாக்கடைப் புழுவாய்,வாயில்லாப் பூச்சியாய்,வாழ்ந்து அழிந்து மண்ணில் மண்ணுக மக்கிக், "கோரிக்கை அற்ற, வேரில் பழுத்த பலாவாகப்'' பயன்படாமல் அழிந்து ஒழிவதைத் தான் கடவுள் விரும்புகிருர். அப்படி வாழ்ந்து போ!" என்று மத விளக்கம் தந்தனர். சமுதாயச் சட்டமும் அந்நீதியின் பேரால் செய்து வைத்தனர் சதிகாரர்கள். அதன் பயன், இன்பச் சுவை கண்டறியாத இளம் பெண்கள் காதலைத் தீய்த்த கட்டுப்பாட்டுக்குப் பயந்து வாழ்ந்தனர் உடலுக்கு அடிமைப்பட்டவர்கள், உணர்வுக்கு அடிமைப் பட்டவர்கள் நெறி தவறி களங்கம் தந்தனர். இந்நிகழ்ச்சி பெண்களே இகழ்ந்துரைப் போருக்குக் கிடைத்த கல்லாகப் பயன் பட்டது.

வெளியார் புகுந்தபின்

அத்துடன் நெறிதவருத் தமிழர் வாழ்வில் அந்நியர் புகுந்தனர். அவர்கள் வசதியாக ஏற்றத்தோடு வாழ முதலில் அவர் மொழியைப் புகுத்தினர். பண்பாட்டைப் புகுத்தினர். நாட்டை அடிமைப்படுத்த அது தானே சிறந்த வழி? இதிகாசங்கள் மூலம், புராணம் மூலம், பெண்ணின் உயர்வாழ்வின் அடிப்படையையே தகர்க்க ஆரம்பித்தனர் எதற்கும் ஆமாம் போடும் இழிபிறவிகள் உணர்ந்தும் உணராமல் அதற்கு இடம் கொடுத்துத் தமிழர் வாழ்வு நெறியையே மாற்றி அமைக்க இடம் கொடுத்து விட்டனர். ஐந்து பேருக்கு மனேவியாக் இருந்தாலும் அவளும் பத்தினிதான், என்று கற்புக்குப் புது விளக்கம் தந்த புன்மையான புலமையையும் போற்றித் தங்களேயும் அவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர், நாமமது தமிழரெனக் கொண்ட நல்லறிவாளர்கள், சிலர்!

நெறி பிறழ்ந்து போனவளை யும் கடவுள் கற்புடையவளாக்கி விடுவான்! அவர் கால் பட்டால் நீங்கிய கற்பும் மீண்டும் ஒன்ருகி விடும். பழுது பார்க்கப்பட்ட மின் சார இயந்திரம் போல், என்று சொன்ன புராணிகர்களின் பேச்சை நம்பி இழிவுக்குள் இறங் கினர். இதன் பயன் என்னவெனில், நெறி தவருத மங்கை மனதில் அகலிகை தோன்றினுள்! ஐவருக்கு மனைவியான 'அழியாத பத்தினி' தோன்றினுள்! இதனுல் தமிழக வாழ்வில் தொல்காப்பியர் காலத்துக்கு முன் பிருந்த வாழ்க்கை முறைக்கும் அந்நியர் புகுந்தபின் ஏற்பட்ட முறைக்கும் நிறைய வேறுபாடு. அதன் பயன், "கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக்குலமகள்" வாழ்வு மறைந்து, "கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையை எடுத்து அப்புறம் தன்னிலே அசையாமல் முன் வைத்து அயல் வளவில் ஒப்புடன் சென்று துயில் நீத்துப் பின் வந்து உறங்கும்..." இழிந்த நிலை தொடர்ந்தது. இதனுல் கண் எனப் போற்றப் பெற்ற பெண்குலம் மாயமலம் என்று வெறுத் தொதுக்கப் படலா யிற்று!

இதுபோல் இன்னும் பல கார ணங்கள். பொருளாதாரக் கார ணங்களைக் காட்டிலும் சமுதாய மாற்றத்தால் ஏற்பட்ட விளைவு தான் விபரீதமான விளைவு.

காதலைப் போற்றிய வாழ்வு மறைந்து கடமைக்காக மணம் எனும் நிலை ஏற்பட்டது. பெருந் திணை ஏற்பட்டது. இதன் விளைவு, கணவன் ஒரு திசை நோக்க, மனைவி மற்ருெரு திக்கை நோக்கி வாழ்ந்தனர். இன்பமாக இருக்க வேண்டிய இல்லற வாழ்வு மறைந்து பிணைப்பு விடுபட்டாலே போதும் என்ற அந்த நிலைக்கு வந்தார்கள். அந்நிலையிலே "பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசம்" என்று அடிகளார் பாட, இல்லறத்தில் உள்ளவரும் "ஆமாம் சுவாமி ஆமாம்" என்று தலையசைக்கும் நிலை உருவா யிற்று. "இல்லறம் அல்லது நல் லறம் அன்று" என்ற அவ்வை மறைந்தாள். "மைந்தரும் நிசமு மல்ல; மனைவியும் நிசமுமல்ல" என்ற கணபதி தாசர் தோன்றி னர்; புகழப்பட்டனர்.

சாதிப்பாகுபாடு, உட்பிரிவு என்ற நச்சுமரம் வேர் ஊன்றிக் கிளை படர்ந்து தளைத்து வளர ஆரம்பித்தது, தமிழர் வாழ்வில். இட்டார் உயர்குலத்தோர் இடா தார் இழிகுலத்தோர் என்று சாதி இரண்டொழிய வேறில்லை என்றிருந்த சமுதாய அமைப்பில் சீவகன் வணிக மகனுகவே எல் லோருக்கும் தோன்றினுலும் அவன் அரசன் மகளை மணக்க முடிந்தது. அங்கு சாதிபாகுபாடு இல்லை. வர்ணுசிரம முறைப் பழக்கம் தமிழரிடையே புகுந்து "தொல்லுலகில் நாற்சாதி அநே கம் சாதி" அவரவர்கள் பிழைக் கத் தொகுத்துச் சமுதாயத்தைச் சாவிடமாக்கினுர்கள்.

சாதி நெறி தவறினுல் மழை பெய்யாது, நாடழியும் என்று அச்சுறுத்த, அச்சமே ஆச்சாரமா கக் கொண்ட இழிந்தவர்களும் அதை நம்பி ஏமாந்து காதலின் புனிதத்தை அறியாமல் சாதியை வளர்த்துப் பெண்கள் மானத்தை அழித்தனர். புராணம் வளர்ந் தது; புன்மை வென்றது.

பெரும்பாலும் 'அந்நியர்' வருகையாலே, அவர்கள் மொழி புகுந்ததாலேயே; அவர்கள் கலை, பண்பாடு பரவ வழி விட்டதாலேயே தமிழினம் தன் குன்றனைய உயர் பண்பை இழந்து குப்பை மேடாகக் காட்சி தந்தது. அதனால் தான் குழலைக் காட்டிலும், யாழ் இசையைக் காட்டிலும் இன்பம் ஊட்டும் மழலைபேசும் குழந்தைகளை உருவாக்கும் தாய்க்குலத்தைச் "செந்தீ, பேய், பிசாசு" என்றெல்லாம் பேசும் நிலைவந்தது.

யாவரும் கேளிரே

வாழ்ந்த சமுதாயம், தாழ்ந்தது; வீழ்ந்தது. ஏற்றம் பெற இன்றும் வழி உண்டு. பழைய தமிழர் நெறியைப் போற்றுவது தான் அம்முறை. கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகச் செய்து "சோதிடம் தன்னை இகழ்" என்ற பாரதியின் வார்த்தைகளை ஊன்று கோலாகக் கொண்டு மணப் பொருத்தத்துக்கு அன்று தமிழன் வகுத்த முறையாம் உரு, திரு, வயது, குலம் இன்ன பிறவற்றை ஏற்றுக் கொண்டு சாதி ஒழிந்த சமுதாய அமைப்பில் யாவரும் கேளிர் என்ற உயர் நெறியைப் பின்பற்றிக் காதல் வாழ்வுக்கு இடமளித்துக் கடமை போற்றும் முறை வேண்டும்.

மானமும் வீரமும், விவேகம் உள்ளதாக இருக்கவேண்டும். மனத்துக் கண் மாசு இலாத கற்பு நெறியைப் பின்பற்றி வாழ வேண்டும். ஒவ்வாத திருமணமும், வயதுப் பொருத்தமும் மனப் பொருத்தமுமில்லாத மணமுறையும் புதைக்கப் பட வேண்டும். பொய் சொல்லும் புராணங்கள் ஒழிக்கப்படவேண்டும். கோபிப் பெண்களுடன் கொட்டம் அடித்த கோபாலர்களை நாட்டில் நடமாட விடக் கூடாது. காந்தியார், "நான் வணங்கும் இராமன் அயோத்தியாண்ட தசரதன் மகனல்ல; சீதாமணாளனல்ல; உருவம் அற்றவன்", என்ற தத்துவ விளக்கம் கொடுப்பதாக நினைத்து ஏமாந்தவர்களைத் திருப்திப்படுத்தும் பெரிய மனிதத்தன்மையில் விளக்கம் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளாத ஆற்றல் உடைய மனம் வளர வேண்டும்.

மதம் மக்களுக்கு அபின். மதத் தலைவன் - கடவுள் – அந்தச் சொல்லுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை என்றறியும் இங்கர்சால் உள்ளம் வேண்டும். சிந்திக்கும் திறன் பெற்ற உள்ளம் வேண்டும். இது இருபாலருக்கும் பொது. இதுபோன்று சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துக்கள் மக்கள் மனதில் இடம் பெற்றுத் தளைத்தால் தான் "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த முடியும். இல்லாவிட்டால் கோபால கிருஷ்ணர்களைத் தொழும் தொண்டர்கள் திருவிளையாடல்கள் நடத்துவதும், அகல்யைகள் வழுக்கி விழுந்து கல்லாகி அவதார மனிதர்கள் பாதம் பட்டுப் பெண்ணாகி மீண்டும் கற்புப்பெற்று வாழ்வதும்; சீதைகள் இராவணர்களால் சிறையெடுக்கப்பட்டுச் சுடுதலையே குணமாகக் கொண்ட தீயின் குணத்தையே — தன்மையையே — மாற்றியதாகப் பொய்யுரைத்து ஏமாற்றுவதும், மணமாகுமுன் கன்னத்தின் வழியே குழந்தை பெறும் அற்புதப்பேறு பெருங்குந்திகளும், ஐந்துபேருக்கு மனைவியாக இருந்தும்கற்பு "ஈரத் துணி உடலில் ஒட்டியது போல் ஒட்டியே இருக்கிறது" என்று விளக்கம் கூறித் திரவுபதிகள் வாழ்வதும் ஒழுங்காக நடந்து

கொண்டேயிருக்கும்!! பிறகு எப்படிப் "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்று கேட்க முடியும்?

"பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசம்; சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்றுத்தியங்கித் தவிப்பரே" என்ற கருத்தைத் தான் சொல்லமுடியும்.

"தொட்டிலை ஆட்டும் கை நாடாளும் கை". அதனால் எப்போது அந்தக்கை,

"மூடத்தனத்தின் முடை
நாற்றம் வீசுகின்ற
காடுமணக்கவரும் கற்பூரப்
பெட்டகமே!
வேண்டாத சாதி
இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த்
துலங்கும் பெருமாட்டி!
புண்ணிற் சரம் விடுக்கும்
பொய்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணில் கனல் சிந்திக்
கட்டவிழ்க்க வந்தவளே!
எல்லாம் கடவுள் செயல்
என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப்
புதுமை செயவந்தவளே!
வாயில் இட்டுத் தொப்பை
வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயிலென்று காசு தரும்
கொள்கை தவிர்ப்பவளே!
சாணிக்குப் பொட்டிட்டு சாமி
என்பார் செய்கைக்கு,
நாணி உறங்கு! நகைத்து
நீ கண்ணுறங்கு!"

என்று தொட்டிலை ஆட்டுகிறதோ; அதற்குப் பின்புதான் அந்தக் கை நாடாளும். அதற்கிடையில் விழிப்பில்லை; வெற்றி இல்லை; எழுச்சி இல்லை; ஏற்றமும் இல்லை.

"உன்னால் இயன்ற நன்மைகளை
யெல்லாம் செய்;

உன்னால் இயன்ற வழிகளி
லெல்லாம் செய்;

உன்னால் முடிந்த இடங்களி
லெல்லாம் செய்;

உன்னால் முடிந்த நேரங்களி
லெல்லாம் செய்;

உன்னால் இயன்ற மக்களுக்
கெல்லாம் செய்;

உன்னால் எவ்வளவு முடியுமோ
அதுவரையில் நன்மை
செய்துகொண்டே இரு!"

—ஜான் வெஸ்லி

சோ. இலட்சுமிரதன் பாரதி, எம்.ஏ., பி.எல்.

சமூக முன்னேற்றம்

['சமூக முன்னேற்றம்' என்றால் என்ன? ஒரு சமூகம் முன்னேறுவதும் அழிவதும் எதைக்கொண்டு அளக்கப்படுகிறது? சில சமூக ஆராய்ச்சி வல்லுநர்களின் கருத்துக்களைத் திரட்டி ஆராய்வது இக்கட்டுரை. சமூக அமைப்புப்பற்றி சிந்தனையைத் தூண்டிவிடக் கூடிய பல அரிய கருத்துக்களை இதில் காணலாம்.]

இந்திய சமூகம் இன்று பல்வேறு மக்கட் தொகுதிகளைக் கொண்டியங்குகிறது. சிறப்பாக பூர்வீக இனங்கள் (Primitive tribes) மலைவாசிகள் (Hill tribes) மோஹெஞ்சதாரோ, ஹாரப்பா, பூம்புகார் போன்ற புதைந்த நகரங்களுக்கு அடிப்படையான திராவிட நாகரிக சமூகங்கள், ஆரிய சமூகங்கள், வாளொடு நுழைந்த இஸ்லாமியர்கள், கடைசியாகப் புகுந்த மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த வெள்ளையர்கள்-ஆகிய பல சமூகங்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கலந்து பல திறப்பட்ட உறவுகளுக்குக் காரணமாகி அதன் விளைவாகப் புதிய பண்புகளும் நிறுவனங்களும் ஏற்பட்டன. இத்தகைய சமூகப் போக்குகளையும் மாறுதல்களையும், விளைவுகளையும் ஆராய்வதற்கும், அவற்றின் பயன் தூக்கி மதிப்பிடுவதற்கும் அடிப்படையான சமூகவியல் கருத்துக்களும், அளவுகோல்களும் அவசியமாகின்றன. சமூக இயல் துறையில் வல்லுநர் பலர் பல கருத்துக்களையும் கொள்கைகளையும் வடித்துக் கொடுத்திருக்கின்றனர்.

மக்கள் அனைவரையுமே அவர்களுக்குள்ளே ஏற்படும் உறவுகள் பற்றி ஒரு சமூகம் என்று சொல்லலாம். "காலப் போக்கில் அடுத்தடுத்து மாறிக்கொண்டே சமூகம் இயங்கி வருகிறது. நிலைத்து அப்படியே அது இருப்பதில்லை. அது உருமாறிக் கொண்டே இருக்கும். அது ஒரு இயக்கம் அல்லது போக்கு; விளைவித்து விட்ட சரக்கல்ல." (MacIver in "Society")

ஒரு இயக்கம் அல்லது போக்கென்பது தொடர்ந்து மாறிக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. புதிது புதிதாகப் பின்னும் சிலந்திக் கூடுபோல, மக்களுக்குள்ளே தொடர்ந்து நிகழ்கின்ற உறவுகளினால் பல மாற்றங்களை ஏற்று அமைவுறுகின்ற நிலையில் சமூகம் இருந்து வருகிறது. அதில் இருப்பவர்களுக்குச் சில போழ்து அது மாறாது நிலைத்து நிற்பது போல் காணப்படலாம். அவ்வளவு மெதுவாகவும் சுருங்கியும் அதன் போக்கு இயங்கியிருக்கலாம். பூர்வீக இனங்களின் வாழ்க்கை அத்தகையது. 'மாறுதல் இல்லாத கீழ்த்திசை மக்கள்' (The Unchanging East) என்று

சொல்லப்படுகிறது. மக்களிடையே பெருத்த அளவில் மிக வேகமான மாறுதல்கள் ஏற்படுகிறதையும் காணுகின்றோம். மேல் நாடுகளில் நீராவி, மின்சாரம் போன்ற சக்திகளைக் கண்டுபிடித்து இயந்திரங்களை ஓட்டுவதற்கு ஆரம்பித்த பின்னர், பெருந் தொழிற்சாலைகளில் சரக்குகளைப் பெருவாரியாகச் செய்து குவிக்கும் முறைகளும், இரயில், மோட்டார், பெருங் கப்பல்கள், வான ஊர்திகள் போன்ற துரிதப் போக்குவரவு சாதனங்களும் அவற்றையொட்டி மக்கள் உறவுகளில் பெரும் மாறுதல்களும் ஏற்பட்டன. அது தொழில்துறைப் புரட்சி (The Industrial Revolution) என்றழைக்கப்படுகிறது. அத்தகைய துரிதமான மாறுதல்களை விளைவிக்கும் இயக்கங்களையே புரட்சிகள் என்று கூறுவர். உறவுகள் இத்தகைய மாற்றங்களால் ஒன்றி இயங்கலும் (Integration) அன்றி உடைந்து சிதறலும் (Disintegration) மக்கள் இயக்கங்களேயாம். சமூக மாறுதல்களை ஆராய்ந்து அவற்றின் தன்மைகளையும் முறைகளையும் கண்டறிதல் பயன் தரும்.

சமூகப் போக்கில் ஒரு நெறியை அல்லது அது செல்லும் ஒரு திசையை (Direction) நாம் காணின், அதை நாம் பரிணும வளர்ச்சி (Evolution) என்கிறோம். அப்படிப்பட்ட போக்கின் திசை அதை விளக்குவதில் முக்யத்வம் வாய்ந்ததாக இருக்கிறது. நம் நாட்டில் காணும் எண்ணற்ற மக்கட் தொகுதிகள் பலவற்றுள்ளும் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும் பண்பாடுகளிலும் நெடுகிலும் பல மாறுதல்களைக் கண்டு வருகிறோம். வைதீகச் சடங்குகள், இளமை மணம், பெண்களை அந்தப்புரத்தில் வைத்துக் கட்டுப்படுத்தல், விதவைகளுக்கு மறு மணத்தடை, சாதிக் கட்டுப்பாடுகள், தீண்டாமை போன்றவை பரவி, மக்கட் தொகுதிகளால் ஏற்றுக் கொள்ளப்படுவது முன்னேற்றமாகவும் சிறப்பாகவும் கருதப்படலாயின. இவற்றிலிருந்து சமூகப் போக்கு ஆரியம் அல்லது சமஸ்கிருதப்படுத்தல் எனும் நெறியில் சென்றுகொண்டிருந்ததாகச் சொல்கிறோம். இன்னும் ஆரியச் சமூகப் போக்கில் வெற்றிதான் முக்கியம்; அதை எவ்வழியானும், ஏன்! தவருகக் கருதப்படும் முறைகளிலும் கூட,

---

டன்லப் டயர்

75 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்காட்லாண்டைச் சேர்ந்த ஜான் பாய்டு டன்லப் என்பவர் காற்றடைக்கும் ரப்பர் சக்கரத்தைக் கண்டு பிடித்தார். தம் சிறுவன் ஓட்டிக்கொண்டிருந்த கெட்டி ரப்பர் உருளை போட்ட மூன்று சக்கர சைகிளின் சக்கரத்தில் சிறு மாற்றம் செய்து சோதனை நடத்தியதன் மூலம் புதிய கண்டு பிடிப்பு நிகழ்ந்தது.

இன்று 14 நாடுகளில் டன்லப் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் பணி புரிகின்றனர்.

இந்தியாவில் கல்கத்தாவுக்கு அருகில் 1936-ல் முதல் டன்லப் தொழிற்சாலை ஏற்பட்டது. 1959-ல் சென்னைக்கு அருகிலுள்ள அம்பத்தூரில் இரண்டாவது தொழிற்சாலை ஏற்பட்டது. 1961 இறுதி வரையில் இந்திய டன்லப் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்த டயர்களின் எண்ணிக்கை, 11 கோடி.

அடைவது போற்றற்பாலது! அகத்துறையில் காமத்திலும், புறத்துறையில் போரிலும் வெற்றிகாணப் பொய்யும் புரட்டும் போற்றப்பட்டன. புராணங்களும் இதிகாசங்களும் இத்தீய ஒழுக்கநெறிகளேயே மக்களிடையே வளர்த்தன. ஆனால் பழந்தமிழர் போற்றி வளர்த்த ஒழுக்கங்களுக்கு இவை முற்றிலும்முரணும் விலக்குமாகும். எனினும் அவர்களும் இவற்றிற்கு இடங்கொடுத்து அவற்றைத் தமதாகக் கொள்ளலாயினர்; கடந்த மூன்று நான்கு நூற்றுண்டுகளில் விஞ்ஞான அறிவிலும் செய்நேர்த்தித் திறமையிலும் மிக்குயர்ந்து இவ்வுலகிற்கு வேண்டிய பொருளும் வசதிகளும் வளர்க்கும் ஐரோப்பிய சமூகங்களின் தொடர்பும் உறவுகளும் ஏற்பட்டன; அவை இந்த சமூகப் போக்கின் நெறிக்கு அறைகூவலாக எழுந்து, இந்தப் போக்கின் திசையையே மாற்றிவிட்டது என்று கூறலாம். முன்னேற்றப்பாதை என்று முன்பு கொண்டது இன்று வழிதவறிய பிற்போக்குப் பாதையாகக் கருதப் படுகிறது. விஞ்ஞான அறிவும் செய்நேர்த்தித்திறமையும் வளர்க்க வழிகோலப்படுகிறது. பண்புடைமை, செய்நேர்த்தித் திறமை, நாகரிகம் போன்ற வாழ்க்கை நயங்களேப்போலவே பொதுவாக சமூகமும் வளர்ந்து வந்திருக்கின்றதென்பதை உறுதியாக மெய்ப்பிக்கலாம். பூர்வீக இனங்களிலிருந்து இன்று அடைந்திருக்கும் நாகரிக ஏற்றம், பிறப்பால் அமைந்த நிலேயிலிருந்து இன்று மனமொப்பி ஏற்கும் உரிமைநிலே, நிறுவனத்தில் பெறும் உறவிலிருந்து இன்று தானுகத் தேர்ந்துகொள்ளும் இணேந்த வாழ்க்கை, ஆகியன சரித்திரப் போக்கிலேசமூகம் செல்கின்ற சிறப்பான திசையை நன்கு விளக்குகின்றன.

முன்னேற்றம் எது?

சமூக மாறுதல்கள், போக்குகள் ஆகிய அனேத்தையும் முன்னேற்றம் என்று சொல்ல முடியுமா? முன்னேற்றம் என்ற சொல்லிற்கு இன்று எல்லோரும் ஒப்ப முடிந்த, திட்டவட்டமான பொருள் இல்லே. அப்படிப்பட்ட அளவுகோலோ, அன்றி உரைகல்லோ வகுக்கப்படவுமில்லே. சமூகப் போக்குகளேயோ அதன் திசைகளேயோ வரையறுக்கப்பட்ட அல்லது ஒப்பி ஏற்ற ஒரு குறிக்கோளே அளவு கோலாக வைத்துக் கொண்டு சீர்தூக்கி முடிவு செய்ய வேண்டிய காரியம் முன்னேற்றமாகும். அஃதில்லாமையால் தான் சமூகப் போக்குகளேப் பற்றியும் அது செல்லும் திசைகளேப்பற்றியும், அதன் இலட்சியங்களேப் பற்றியும் இன்று மலேக்கும் மடுவிற்கும் போன்ற கருத்து வேறுபாடுகள் எழக்காண்கிறோம்.

முன்னேற்றத்தையும் அதன் இன்றியமையா உறுதியையும் பற்றிப் பலர் பலவாருகப் பேசுகின்றனர். இன்றைய சமூகங்கள் ஒரு முழுத்தன்மை நிலேயை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றனவா? சமூக இயல் பற்றி ஆராய்ச்சி செய்யும் சில தத்துவ ஞானிகளுக்கு இன்றைய நாகரிகம் ஒரு தோல்வியெனக் கை கழுவுவது ஒருவிதத்தில் நயமாகத் தோன்றுகிறது.

முன்னேற்றத்தைப் பற்றிப் பல திறப்பட்ட கருத்துக்கள் தோன்றின:—

''விஞ்ஞான அறிவின் அடர்த்தியானதும் எல்லேயற்றதுமான தொகுப்பே மனிதனுடைய தொடர்ந்த முன்னேற்றத்தைத் தருகிறது'' (Fontenelle)

"உலக மக்கள் அனைவருடைய இன்பப் பெருக்கின் வளர்ச்சியை நோக்கி நாகரிகம் இடையறாது போய்க் கொண்டிருக்கிறது" (Abbede sant Pieste)

"பொன்னுலகம் நமக்குப் பின்னால் இல்லை, நமக்கு முன்னால் தான் இருக்கிறது" (Henri de-St. Simon)

"எல்லா யுகங்களும் காரண காரியச்சங்கிலித்தொடரில் பிணையுண்டிருக்கின்றன. அவ்வகையில் இன்றைய உலக நிலை கழிந்துபோன எல்லாவற்றுடனும் சேர்ந்து இணைந்திருக்கிறது" (Turgot)

"முன்னேற்றம் பரிணாமக் கொள்கையில் அடங்குகிறது. அகிலாண்டப் பரிணாமம், உயிரியல் பரிணாமம் ஆகிய இயற்கைப் போக்கில் சமூகப் பரிணாமும் அடங்குகிறது'' (Herbert Spencer)

ஆனாலும் பரிணாமத்தின் மூலம் முன்னேற்றம் நடந்தே தீரும் என்ற எளிமையான நம்பிக்கையில் ஆட்டம் கண்டிருக்கிறது. மனித முயற்சிகளின் மூலமே, அதாவது மாறிக் கொண்டிருக்கும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கேற்ப, சமூக உறவுகளை அமைத்துக் கொள்ளப் பயிலும் பாடத்தின் மூலமே, முன்னேற்றம் ஏற்படக்கூடும்.

"பொருள்களோடு சார்ந்த பழக்க வழக்கங்களில் முதலிலே மாறுதல்கள் தோன்றி பின்னர் அவை மற்றப்பண்புகளின் மாறுதல்களை உருவாக்குகின்றன. ஆனால், மக்களிடையே ஊறி இறுகி ஏற்கனவே அமைந்துபோன பற்றுக்கோடுகளின் (Vested Interests) எதிர்ப்பும், அவர்களுடைய பழக்க வழக்கங்களினாலாய பழமையின் செல்வாக்கும், அவசியமான புதிய பண்பாட்டை அடைய முடியாமல் இடையே வழி மறிப்பதனால் ஒரு துண்டு (lag) விழச்செய்கின்றன" (Ogburn)

ஆல்டஸ் ஹக்ஸிலி (Alduous-Huxley) என்ற சிறந்த ஆங்கில எழுத்தாளர், அண்மையில் நம்மைத் திகைக்க வைக்கும் விஞ்ஞானப் பொருளியல் மாறுதல்

சிமெண்ட்

1756-ல் ஜான் சிமீட்டன் என்னும் இங்கிலீஷ்காரர் சிமெண்ட் செய்வதைக் கண்டு பிடித்தார். இன்று வழங்கும் போர்ட்லண்டு சிமெண்டைக் கண்டுபிடித்தவர், ஜோசஃப் ஆஸ்ப்பிடீன் (Joseph Aspidin) என்பவர். இவர் 1824-ல் சுண்ணாம்புக் கல்லையும் களி மண்ணையும் கலந்து எரிப்பதால் கிடைத்த பொருளை அரைத்துப் பொடியாக்கி நீரில் இறுகும் பொருள் ஒன்றை உண்டாக்கினர். இதுதான் (போர்ட்லண்டு கல்லின் நிறத்தை ஒத்திருந்த படியால்) போர்ட்லண்டு சிமெண்ட் என்ற பெயர் பெற்றது.

இந்தியாவில் சிமெண்ட் உற்பத்திக்கு, சுண்ணாம்புக் கல்லும் களி மண்ணுமே மிகுதியாகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள்.

இத்தொழில் இந்தியாவில் முதன் முதல் 1904-ல் சென்னையில் தொடங்கியது. அடுத்து 1913-ல் போர்பந்தரிலும் மற்ற இரு இடங்களிலும் தொடங்கப் பட்டது.

இன்று இந்தியாவில் 34 சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

களைப்பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்:—

"ஒருபுறம் மனித வாழ்க்கையினுடைய உயிர்ப்பில் குறைந்த உத்வேகம் (Biological tempo). அதைத் தூங்கிக் கிடக்கும் மனோசக்தி எனலாம். மற்றொருபுறம் விஞ்ஞான அறிவு, செய்நேர்த்தித் திறமை ஆகியவற்றின் மாறுதல்களில் துரிதப் படுத்தும் அளப்பரிய உத்வேகம். இந்த இரண்டிற்குமிடையே துண்டுவிழுதல்; இணைக்க முடியாத ஏற்றத்தாழ்வு, வேகமான விஞ்ஞான விளைவுகளை எட்டிப் பிடிக்குமளவிற்கு மனித உறவுகள் பக்குவமடையவில்லை. அதனால் எல்லாவிதமான சமூகத் துயரங்களும் எழுகின்றன. நம்மை எதிர்த்து நிற்கும் முக்கியமான இடர்ப்பாடுகளில் இது ஒன்றாகக் காணப்படுகின்றது"

இன்றைய சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான வில் ட்யூராண்ட் (Will Durant in, "Pleasures of Philosophy") கூறுவதாவது:—

"வாழ்க்கையின் பயன் அதிகரிக்குமளவிற்குச் சுற்றுப்புற சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவது முன்னேற்றம் என்று தற்காலிகமாக வரையறை செய்வோம்; ஆசையைப் பொருத்துவதற்கும், அடைவதற்கும் காரணமாகும் சகல சந்தர்ப்பங்களையும் சுற்றுப்புறச் சூழ்நிலையாக எடுத்துக்கொள்வோம்; அதில் அழிவு தரு குழப்பத்தை, உள்ளத்தையும் உறுபயனையும் கொண்டு அடக்கி ஆள்வதும் பொருளை வகை செய்து திறம் படஆள்வதுமே முன்னேற்றம்."

நோபல் பரிசு பெற்றுச் சிறந்த டாக்டர் அலெக்ஸிஸ் கேரல் (Dr. Alexis Carrel in "Man the Unknown" and "Reflections on Life") கருத்துக்களையும் பார்ப்போம்:—

"விஞ்ஞானமும் செய்நேர்த்தித் திறமையும், மனிதனை ஒரு படுகுழியின் பக்கத்தில் ஓங்கி நிற்கும் குன்றின் உச்சியினுடைய ஓரத்தில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கின்றன. நாகரிகம் தவிடு பொடியாகிக் கொண்டிருக்கிறது. காரணம், ஒரே சமயத்தில் இரண்டு காரியங்களை அநுமதிக்கிறோம். ஒன்று, ஆளைக் கெடுத்தொழிக்கும் பணம்; மற்றொன்று அவனை வாடி வதங்கி மடியச் செய்யும் ஏழ்மைத்தனம். .... மனிதன் தன்னுடைய சுற்றுப்புறச் சூழலில் கட்டுண்டு கிடக்கிறான். அவனை அடிமைப்படுத்தும் இயந்திரப்பொருள் உற்பத்தி நெறிமுறைகள். அவற்றிற்குச் சிறிதும் விட்டுக்கொடுக்காத ஊக்கத்துடன் இன்று போரிட வேண்டும். ஆடுகளைப் போல கூட்டத்தில் கோவிந்தா போடவேண்டிய பழக்கங்களுக்குப் பணிந்தொழுகக் கட்டுப்பட்டிருக்கிறான். இந்நிலையில் தனியொருவன் முன்னேற வேண்டுமானால் அவன் பிரிந்து தனியாக நிற்பதும் (Relative Isolation) தன்னடக்கம் பேணுவதும் (Discipline) அவசியமான இரு காரியங்களாகின்றன.......அறிவும் அன்பும் நம்மிடத்திலும் உலகிலும் தழைத்தோங்க வேண்டும்...சுக போகங்களைத் தேடாத பண்பும், ஆடம்பர அலங்காரங்கள் இல்லாத அழகும், அடிமைப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு அவசியமில்லாத இயந்திரமும், பொருளை வணங்காத விஞ்ஞானமும், அறிவையும், அறவுணர்ச்சியையும் ஆண்மையையும். மீண்டும் மனிதனுக்கு அளித்து அவனை வளர்ச்சியின் உச்சிக்கு அழைத்துச் செல்லும்."

இன்னும் பேராசிரியர் ஜெரல்டு ஹோல்ட்டனுயை (Gerald Holton-Professor of Physics-Harvard University) கருத்துக்கள் கவனிக்கத் தக்கன :

"மனிதனைக் கெடுத்தொழிக்கும் நோயான விஞ்ஞானம், நிலையான மெய்யறிவையும் (Eternal Truth) தன்னிகரில்லாததும் முடிந்ததுமான மதிப்பீடுகளையும் (Absolute Values) மறுக்கிறதென்பது குற்றச்சாட்டு. விஞ்ஞானக் கருத்துக்களை அதற்குப் புறம்பான காரியங்களுக்குக் கொண்டுபோய்ப் பயன்படுத்தும் அறியாமையே இக்குற்றச் சாட்டிற்குக் காரணம். விஞ்ஞானத்தை மறுத்து விலக்கிவிட முடியாது. அது இன்றியமையாதது. ஆனல் விஞ்ஞானச் செயல் முறைகளை மக்கட் பண்புகளுடன் ஒன்றி இயங்கச் செய்ய வேண்டும். மனித உறவுகளைப் பற்றியும், பிரச்னைகளைப் பற்றியும் விஞ்ஞானம் முக்கியமானதும் பயனுடையதுமான கருத்துக்களைத் தெரிவிக்கிறது. வெடிக்கும் குண்டுகளையும் குறிவைத்துச் செலுத்தும் நாசகாரிகளையுமே மனதில் எண்ணி மயங்கி மறுகக்கூடாது. மனிதனுடைய தேவைகள் (ஊண், உண்ட, உறையுள் போன்றவை) உறவுகள், உடல் நலம், சுகபோகங்கள் ஆகிய அனைத்திலும் விஞ்ஞானம் இன்று சிந்தை செலுத்தி சிறந்த பலனளிக்கிறது."

பெனிடிக் ரூத் (Benedict Ruth in "Patterns of Culture") தமது நூலில் கூறுவது :—

"அடிக்கடி சொல்லப்படுகிறது போல, மனிதன் ஒருவேளை தன்னுடைய கூரிய மதி நுட்பத்தைக் கொண்டு தன்னையே மாய்ப்பினும் மாய்க்கலாம்... நாகரிகம் என்பதனை ஏந்திச் செல்பவர்கள், அப்போதைக்கப்போது எவரா யிருப்பினும், அதனுண்டிய தொடர்ச்சியான பண்பாட்டின் போக்கைப் பற்றி நாம் ஐயுறுவ தற்கில்லை."

சமூக மாறுதல்களின் முன்னேற்றப் போக்குகள் செல்லும் திசையை (Direction)ப் பற்றிய கருத்துக்களைக் கவனிப்போம்; அத்திசையைக்கண்டு தீர்மானிப்பதற்கு விதிகளுண்டா ?

பொது உடைமைப் பேராசிரியரான கார்ல் மார்க்சு முன்னேற்றப் போக்குச் செல்லும் திசைக்குப் பொருளாதார ஆதாரமும் அழுத்தமும், விளக்கமும் அளிக்கிறர். பொருளை உற்பத்தி செய்து, வினியோகித்து, அநுபவிக்கும் முறைகளே அவனது உறவுகளுக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாகிறது. ஆனல் பேராசிரியர் டாயின்பீ (Professor Toynbee)யின் கருத்து வேறுபட்டது. இயற்கைச் சூழ்நிலையினுடையதும், புறத்தில் எழும் சக்திகளினுடையதும் ஆன தொல்லைகளை எதிர்ப்பதில் வெளிப்படுத்தும் ஆளுமை, ஆன்மிகத் தன்மையின்பாற்பட்டது முன்னேற்றம் என்று விளக்குகிறர்.

பேரட்டோ (Pareto) என்பவர், அதிகாரத்தைக்கொண்ட புதிய தலைமையின் எழுச்சியே முன்னேற்றத்தைத் தீர்மானிக்கிறதென்கிறர். ஆசிரியர் லாபியரும் (Lapiere) தமது நூலில் இதை ஆதரிக்கிறர். "மக்கள் எங்கும், எக்காலத்திலும் தங்கள் பண்பாடுகளுக்குக் கீழ்ப்படிகிறர்கள். அவை அவர்களைக் கைவிடும்பொழுது வேறொரு அதிகார மூலத்தை நாடுகிறர்கள். பரம்பரையான முடிவேந்தன், குல குரு, இனத்தலைவன் போன்ற பிறப்பினுல் தலைமைப்பதவி

யுடையவர்களைப் பெரும்பாலும் நாடுவர். அல்லாத பொழுது, தங்களைக் கவரும் புரட்சிப் புதுத் தலைமையைப் பின்பற்றுவர். (ஹிட்லர், லெனின், சன்யாட் சென், காந்தி போன்றவர்கள்.) புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கருவிகள், பொறிகள், நீராவி, மின்சாரம் ஆகியவற்றைச் செய் நேர்த்தித் திறமைகளுடன் சேர்த்து, பல வாழ்க்கை நலன்களைப் பெறுவதின் மூலம், உடனடியான பல சமூக மாறுதல்கள் விளைகின்றன. சமூகம் எப்படி இயங்க வேண்டுமென்று கண்டுபிடிக்கும் முயற்சிகள், திட்டவட்டமாக வரையறை செய்யாததும் ஐயப்பாடுகளுக் கிடமானதுமான இலட்சியக் கொள்கைகளைத் தீட்டுவதில் கொண்டுபோய்விடுகின்றன.'' சமுதாயப் பொதுவுடைமை, சமூகப் பொதுவியல் உரிமைகள்போன்ற திட்டங்களை இன்று வகுக்கக் காண்கிறோம். அவை நீண்ட கால முன்னேற்றத் திட்டங்களாகும்.

சமூகத்தின் அழிவு

சிலர் உடலுறுப்புக்களைப் போன்றே, சமூகமும் தோன்றி, வளர்ந்து, பின்னால் தளர்ந்து, சீர்குலைந்து அழியும் என்ற, "சமூக வாழ்க்கைச் சுழல் கொள்கையை" (Theory of the Social Life Circle) ஆதரிக்கின்றனர். (Spangler—"The Decline of the West") கிரேக்க, உரோம சமூகங்களை இதற்குச் சான்றாகப் பகர்வர். சீனா, இந்தியா போன்ற நாட்டு மக்களின் தொடர்ந்து நின்ற சமூகங்கள் இக்கொள்கையை மறுப்பனவாகும். இந் நாட்டு மக்கள் எண்ணிக்கையும் பெருகி வளர்ந்துகொண்டே இருக்கிறது.

மற்றும் சிலர், பருவ காலங்கள் சுற்றிச் சுற்றித் திரும்பவும் சுழன்று கொண்டிருப்பது போலவே, சமூக வாழ்க்கைப் போக்கிலும், சுழன்று வருகிற பருவங்களைப் பார்க்கலாம் என்பர். (The Cyclical Theory—See P. Sorokin—"Social & Cultural Dynamics") உயர்வும் தாழ்வும், பொலிவும் நலிவும்; சமாதானமும் சண்டையும் செல்வமும் வறுமையும் மாறி மாறிச் சுற்றி வருகின்றன. இக் கொள்கைகளைப் பற்றி ஆசிரியர் லாபியர் (Lapiere—"Sociology") கூறும் முடிவு பொருத்தமாயிருக்கிறது:—

''மொட்டையான உண்மை என்னவென்றால் சமூக இயல் துறையில் ஆராய்ச்சி வளர்ந்திருக்கும் இன்றைய நிலைமை சமூக மாறுதல் போக்குகளின் நீண்ட காலத் தன்மையையோ, திசையையோபற்றிய கொள்கைகளை உருவாக்க இடங்கொடுக்கவில்லை.''

இனி சமூகப் போக்குகளும், மாறுதல்களும் ஏற்படும் வகைகளைப் பார்ப்போம்; சமூக உறவுகள், மக்களிடையே கலந்து இயங்கிமாறும் நான்கு வகைகளைப் பார்க், பர்கஸ் (Robert Park and E. W. Burgess—From "Readings in Sociology") என்ற இரு ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவை, போட்டி, (Competition) பகை, (Conflict) இடங்கொடுத்தல் (Accommodation) தமதாக் கொள்ளல், (Assimilation) ஆகியன.

போட்டி உணர்ச்சி

இவற்றுள் எங்கும் சர்வசாதரணமானதும் அடிப்படையானதும் ஆகக் கருதப்படுவது போட்டியே. ஆனால், அது சமூக உறவுகளின்றி, மக்கள் தம்முள் செயல்படுவதாகும். ஒரே காரியத்திற்காகப் போட்டிபோடுகிறவர்களுக்

குள் உறவுகள் வளர்வதில்லை. ஒருவரோடொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் பொழுதும் நெருங்கிப் பழகும் பொழுதும் தான் சமூக உறவுகள் ஏற்படுகிறதாகச் சரியான முறையில் சொல்ல முடியும். போட்டி மனப்பான்மை முனைந்து எழும் பொழுது சண்டையிலும் சச்சரவிலும் கொண்டுபோய்விட்டு விடலாம். அப்பொழுது போட்டியிடுகிறவர்கள் தமக்குள் பகைவர்களாகிவிடுகிறார்கள். "நாட்டுப் பற்று, நன்றி அறிதல், ஈதல் போன்ற நல்லியல்புகளுக்கு போட்டி மாறுபட்டது." பொருளாதாரச் சமூக அமைப்பு (The Economic Organisation of Society) போட்டியின் விளைவாக இருக்கும் பொழுது அது தன்னைச் சுற்றியுள்ளதும் தான் இயங்குவதும் ஆன நிலமும் அதைச் சார்ந்த பொருள்களுமான சூழ்நிலையைச் சார்ந்த சமூக அமைப்பாகும். செடி, கொடிகள் (Plants) உயிர்ப் பிராணிகள் ஆகியவற்றிற்குச் சுற்றுப்புறச் சூழல் (Ecology) அமைவது போலவே மாந்தருக்கும் அது உண்டு. தமிழர் வகுத்த நிலமும் பொழுதும் (முதற் பொருள்) அதில் உண்டான பொருள்களும் (கருப்பொருள்) அவற்றைச் சார்ந்த அவர்களது ஒழுக்கமும் (திணை) இதற்குச் சான்று. வாழ்க்கையில் போராட்டம், (Struggle for Existence) சுற்றுப்புறச் சூழலுக் கேற்ப அமைவுறுதல் (Adaptation to the Environment) தகுதியுடையோர் அழியாது நிற்றல் (Survival of the Fittest) ஆகியன இந்தப் போட்டியை விளக்குகின்றன. அத்தகைய போட்டி, நெருக்கடியான நிலைமைகளில், பகையும், போராட்டமும் ஆக மாறுகிறது. சமூகம் தன்னுடைய நெருக்கடியைத் தீர்த்துக்கொள்வதற்கு அரசியல்துறை என்று நாம் சொல்லும் பகுதியில் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. போர், அரசியல் துறையில் மக்கள் செல்லும் போக்கில் தலைசிறந்தும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். கட்சிகள், ஆட்சி மன்றங்கள், நீதி மன்றங்கள், பொது வாக்குவாதங்கள், வாக்கெடுப்பு போன்றவை சண்டைக்குப் பதிலானவை என்றே கருதப்படுகின்றன.

போட்டியும் சண்டையும் தோற்றுவிக்கக் கூடிய புவ்திகப் பொருளியல் அல்லது சமூகவியல் சூழ்நிலைச் சந்தர்ப்பங்களில் ஒருவரையொருவர் வென்று ஒழிக்கும் வகையை விடுத்து, வேறு விதமாக தங்கள் உறவுகளைத் தீர்மானித்துக் கொள்ளுதலும் உண்டு. தனிப்பட்டவர்களும் மக்கட் தொகுதிகளும் போட்டி, போர் ஆகிய ஆபத்துக்களை விலக்குவதற்காக அவசியமான அளவிற்கு தங்கள் பழக்க வழக்கங்களையோ, வாழ்க்கை நலன்களையோ விட்டுக் கொடுப்பதின் மூலம் தங்கள் உறவுகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

புகுந்தோர் திறமை

ஆரிய மறையோர்கள் தென்னகத்தில் புகுந்து குடியேறிய வரலாற்றில் அவர்கள் நாட்டு மக்களுடன் போட்டியையும் சண்டையையும் விலக்கி ஆங்காங்கு உள்ள சுற்றுப்புறச் சூழலுக்கேற்ப தங்கள் பழக்க வழக்கங்களில் அவசியமான மாறுதல்களை ஏற்று உறவுகளை வளர்த்து உயர்ந்தனர். சேர நாட்டில் மறையோர்கள் நம்பூதிரிகள் என்ற பெயரை ஏற்று நிலமனைத்தையும், தங்களுக்காகப் பரசு

ராமன் கடலை விரட்டிப் படைத்த தாகக் கதை கட்டி, தங்களது உரிமையாக்கிக் கொண்டதும், தங்கள் பொதுக் குடும்ப முறையில் ஒருவரே சொத்தைப் பிரிக்க முடியாத உரிமைத் தலைமை ஏற்று, பின் பிறந்தவர்கள், தம்ம வருள் மணந்து தாரம் கொள்ளாமல், நாட்டு மக்களிடையே வழக்கிலிருந்ததாக வழிமுறையைப் பயன்படுத்தி, அக்குடும்பப் பெண்களுடன் மண உரிமையற்றதும், பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு இல்லாததும்ஆன சம்பந்த உறவுமுறைகளை வளர்த்ததும், தங்கள் நலத்தையே பெருக்கிக் கொள்ளும் தகைமையாகும். இப்போட்டியில் தென்னாட்டு மக்களே தங்கள் பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும், உரிமைகளையும், பதவிகளையும் சிறிது சிறிதாக விட்டுக் கொடுத்து (Accommodation) புகுந்தவர்களுடைய பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொள்ளலாயினர். இவ்வகையில் போட்டிக்குப் பதிலாக இவர்களிடையே ஆழ்ந்த திருத்தங்களும் மாற்றங்களும் ஏற்படுகின்றன. படு தோல்வியடைந்த ஒருமனிதனே ஒருபொழுதும் பழைய மனிதனாக இரான். தமிழன் இதற்கு நற்சான்று. போகப்போகப் புதிய ஒழுங்குமுறை அவர்களுடைய பழக்கவழக்கங்களில் எளிதாக நிலைபெற்று விடுகிறது. அப்புறம் அதுவே உறுதியடைந்த ஒரு சமூக வரன்முறை (Social heritage)ஆகி பின் சந்ததிகளுக்கு அளிக்கப்படுகிறது.

இயல்பான் மனித விருப்பங்கள் அனைத்தையும் எந்த நிலவுலகாலும், சமூக உலகாலும் திருப்தி செய்ய இயலாது. சமூகத்தில் நாம் காணும் சொத்துரிமைகள், குடும்ப அமைப்பு, அடிமை நிலைகள், சாதி; ஏன், சமூக அமைப்பு முழுமையுமே இவ்வாறுமக்கள்இடங்கொடுத்து ஏற்றுக் கொண்டதின் பிரதிபலிப்புக்களேயாகும். சகித்துக்கொள்ளும் தாராள மனப்பான்மை (Toleration)யில் உதித்து இறுதியில் அவற்றை ஏற்றுக்கொள்வதில் (Adoption)முடிகிறதென்று, இடங்கொடுத்தலை, ஒருவாறு கூறலாம்.

ஓரிடத்துக் கூடிவாழும் மக்களுடைய சமூக உறவுகள் மிகவும் பொருளுடையதும் நெருங்கிய பான்மையதுமாகி, மிகுந்த சக்தி வாய்ந்தனவாகி விடுகின்றன; அதில் உள்ளவர்களுடைய ஆளுமையை (Personality) முற்றிலும் மாற்றி அமைத்து விடுகின்றன. உலகின் பல பகுதிகளிலிருந்தும் போய் அமெரிக்காவில் குடியேறும் மக்கள், அமெரிக்க தேசிய இனத்தவர்களாகிவிடுகின்றனர். அவ்வாறு அவர்கள் தங்களது பழமையை அகற்றி புதியதைத் தமதாக்கிக் கொள்கின்றனர். வேறுபட்ட மக்கட் தொகுதிகள் ஓரிடத்துக் கூடி வாழும் சமூக உறவுகள் ஒன்றனுள் ஒன்று நுழைந்து (Interpenetration) ஒருவர் மற்றவர் வாழ்க்கையில் இடம் பெறுதலின் வழியாக, பொதுவான புதியஅநுபவங்களையும் பாரம்பரியங்களையும் (Experiences & Traditions)அடைகின்றனர். அதன் விளைவாகப் பழைய நினைவுகளே மறந்து அற்றுப் போய் விடுகின்றன. சரித்திரம் இவற்றைச்சேமித்துப் பாதுகாக்கின்றது. தொடர்ந்து புதிய தொடர்புகள், உறவுகள், அநுபவங்கள், இவற்றின் பயனாக மாறுதல்கள் நடந்துகொண்டே இருப்பதில், தங்கள் நிலைகளில் மீண்டும் மீண்டும் புதுப்பொருள் காணுகின்றனர். வரலாறு இவ்வகையாக அவர்களுடைய பொருளாதார, அரசியல், சமூக,

வாழ்க்கையை அழிய விடாமல், தொடர்ந்து காக்கின்றது. ஒத்துழைப்பிலும் (Co-operation) பண்படுதலிலும் (Acculturisation) ஆரம்பித்து ஒன்றி விடுதல் அல்லது ஒன்ருகச் சேர்தலில் (Fusion or Amalgamation) முடிகிறதாகத் தனதாக்கிக் கொள்ளும் வகையை ஒருவாறு கூறலாம். இந்நால்வகைப் போக்குகளுக்கும் உரித்தான ஒழுங்கு முறைகளும் சமூகப் போக்குகளில் காணலாம்:—

சமூகப் போக்குவகை (Social process)	... ...	சமூக ஒழுங்குமுறை (Social Structure)
போட்டி	... ...	பொருளாதாரச் சமநிலை (Economic Equilibrium)
சண்டை	... ...	அரசியல் துறை (Politics)
இடங்கொடுத்தல்	... ...	சமூக அமைப்பு
தமதாக்கிக் கொள்ளல்	... ...	ஆளுமையும் பண்பாட்டு வரன் முறையும் (Personality & Social & Cultural heritage)

மேற்சொன்ன நால்வகைகளையும் போட்டி, ஒத்துழைப்பு என்ற இருவகைகளிலும் அடக்கலாம்.

சொரோகின் (Sorokin) என்ற ஆசிரியர் ஒன்றை அடுத்து ஒன்று நிகழ்க்கூடிய மூவகைச் சமூகப்போக்குகளை வகுக்கிருர்:— (1) வலுகட்டாயமுறை (2) ஒப்பந்தமுறை (3) ஒத்துழைப்பு முறை.

"எந்த நிகழ்ச்சியும் உன் ஆசை போல நடக்காது. சிறு இடையூறுகள் நேர்ந்தால் சந்தடியில்லாமல் அவற்றைப் பொறுத்துக் கொள்ள அறிந்து கொள். பேசாமை என்ற பெரும் புண்ணைப் பழகிக் கொள்; மேலும் அதிகமான உழைப்பு மூலம் உன் புகையை நீயே பருகி விடு! அப்போதுதான் உன்னைச் சூழ்ந்துள்ளவர்கள் உன் புகை, தூசி ஆகிய முணு முணுப்புக்களால் வெறுப்படையாமலிருப்பார்கள்."

—Sir William Osler

பி. என், பாலசுப்பிரமணியன், B.Sc., D.H.M.P.

ஹோமியோபதி

[இந்த சிகிச்சை முறை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் வரவர வளர்ச்சி யடைந்துகொண்டு வருகிறது. மற்றத்துறை மருத்துவத்தில் போலி மருத்துவம் உள்ளது போல், இதிலும் நல்ல பயிற்சியும், படிப்பும், பட்டறிவும் இல்லாத பலர் இருக்கின்றனர். என்றாலும், உடலுக்குக் கேடு அல்லது ஆபத்து உண்டாக்காத மருந்து 'ஹோமியோபதி' என்பதைப் பலரும் ஒப்புக்கொள்கின்றனர்.]

உடலுறுப்புக்களில் அழற்சி ஏற்படுவதால் பிணியுறுவதும், பின்னர் குணம் பெறுவதும் மனித குலம் தோன்றிய நாள் முதற்கொண்டு ஒரு நிகழ்ச்சியாக இருப்பதை நாம் அறிவோம். மனிதன் தான் வாழும் இடத்தின் தட்ப வெட்ப நிலைக்கேற்ற வண்ணம் தனக்கேற்படும் பிணிகளைப் போக்க; சித்தம், ஆயுர்வேதம், யூனனி, அலோபதி போன்ற பல மருத்துவமுறைகளைக் கண்டுபிடித்துள்ளான். இவைகளில் சில சீரிய பயனளிக்க வல்லவை.

சிறந்த தத்துவத்தின் அடிப்படையில் பிணிகளை முற்றிலும் போக்கடிக்கவல்ல ஹோமியோபதி என்னும் மருத்துவ முறையை டாக்டர் சாமுவேல் ஹானிமென் என்னும் Dr. Samuel Hahnemann) அல்லோபதி மருத்துவர் பதினெட்டாம் நூற்றாண்டில் கண்டுபிடித்தார்.

தோற்றம்

'இங்கிலீஷ்' மருந்து முறை என்று கூறப்படும் அல்லோபதியில் M. D. பட்டம் பெற்று ஆயிரக்கணக்கானவர்களின் நோய்களைத் தீர்த்த ஹானிமெனுக்கு ஒரு அய்யமும் திருப்தியின்மையும் தோன்றலாயிற்று. நோய்கள் குணமடைந்த போதிலும் நோயிலிருந்து விடுபட்டவர்கள் வலுவிழந்து நடைப்பிணங்களாக காட்சியளித்தது அவரது மனத்தை உறுத்தலாயிற்று. நோயின் மூலக்காரணத்தைக் கண்டறிந்து அதைப் போக்கினால் நோயினின்றும் குணமடைந்த பின்னர் நோயாளி வலுவிழக்க வேண்டியதில்லை என்றுண்ணி ஆராய்ச்சியில் ஈடுபடலானார்.

தத்துவம்

தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக Simila Similibus Curentur. (Let Likes be Cured by Likes) என்னும் அரிய தத்துவத்தினை நிலைநாட்டினார். 'ஒத்தவை ஒத்தவைகளால் குணப்படுத்தப்படும்' என்பதே இதன் பொருள்.

பிணியாளனின் உடல் இயல்புக்கேற்றபடி தோன்றியுள்ள பொதுவான குறிகளையும் (Common Symptoms) சிறப்பான குறிகளையும் (Particular Symptoms)

குறிப்பெடுத்து அவைகளின் அடிப்படையில் மருந்தளிப்பதே இம்முறையின் குறிக்கோள். இதனாலேயே நோயினின்றும் முழு குணம் பெறமுடிகின்றது.

நிலையான சட்டம்

அல்லோபதி முறையில் ஒரு நோயை ஒரு மருந்து போக்கடிக்கக்கூடும் என்ற திட்டத்தின் பேரில், மருந்து அக்குறிப்பிட்ட நோயுள்ள பிராணிகளிடத்துப் பரிசோதிக்கப்பட்டு நோய் நீங்கினால் அல்லது நீங்குவதுபோலக் காணப்பட்டால், அந்நோயை அம்மருந்து நீக்கும் என்று முடிவு செய்யப்படுகிறது. பிராணிகளுக்குச் சரியானது மனிதர்களுக்கும் ஏற்றதாவது எப்படியோ!! மேலும், நாளடைவில் பிறிதொரு மருந்து முன்னதைக் காட்டிலும் சிறப்பானதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அம்மருந்தே அந்நோயை குணப்படுத்த பயன்படுத்தப்படும். எனவே, இம்முறை நிலையானதன்று சிறந்த முறையில் நோய்களுக்கேற்ற மருந்துகள் முடிவு செய்யப்படுவதால் ஹோமியோபதிமுறையை நோய்களுக்கேற்ற மருந்துகளை நிச்சயிக்கும் ஒரு மாற்றவியலாத நிலையான சட்டமெனக் (Stable Law) கூறலாம். இவ்வரிய பண்பாலும் இன்ன பிற காரணங்களாலும் இம்முறை சிறந்ததாகத் திகழ்கின்றது.

நோயின் பெயர் ?

உடலுறுப்புக்களில் கோளாறுகள் வெளிப்படையாகத் தோன்று முன்னரே ஒருவன் பிணியுற்றிருக்க வேண்டுமென்பது இம்முறையின் வாதம்; அல்லது தத்துவம். காரணமின்றி விளைவு ஏற்படாது. எனவே முன்னமே தோன்றியதன் விளைவே கோளாறுகள் அல்லது நோயின் தொல்லைகள் என்பது இம்முறையின் கொள்கை.

"உருவமற்றவைகளாலும் நுண்ணிய பொருள்களாலும் நோய்கள் தோன்றுகின்றன. எனவே அவைகளை நுண்ணிய பொருளைக்கொண்டு (மருந்துகளைச் சிறிய அளவில் கொடுப்பதன் மூலம்) போக்கவேண்டும்," என்று இம்முறை இயம்புகின்றது.

இம்முறையில் குறிகளைக் கொண்டே நோய்களுக்கு மருந்தளிக்கப்படுவதை முன்னரே கண்டோம். நோயாளியிடம் காணப்படும் சாதாரணக் குறிகள், சிறப்புக் குறிகள், மாற்றுக் குறிகள் (Objective Symptoms) ஆகியவைகளை ஆய்ந்து நோயாளியின் உடல் இயல்புக்கேற்றபடி மருந்தளிக்கப்படுகின்றது.

இம் முறையில் நோயின் பெயரை அறிய வேண்டிய தேவையில்லை! ஆயின் ஏற்பட்டுள்ள குறிகளை ஆய்ந்து நோயைக் குணப்படுத்த முடியும்.

'கொயினா'உட்கொண்டவர்கள் மலேரியா காய்ச்சலினின்றும் முழுதும் சீர்பெற்றதை தமது பட்டறிவில் கண்ட ஹானிமென், தவறுதலாக மிகுந்த அளவில் உட்கொண்டவர்களுக்கு நோய் அதிகரிப்பதையும் உணர்ந்தார். உண்மையைக் கண்டறிய உடல் நலத்துடனுள்ள அவரே 'கொயினா'வை மிகுந்த அளவில் உட்கொண்டார். அதன் பயனாய் அன்னாருக்கு நேரம் செல்லச் செல்ல கடுங்குளிரும் மலேரியா காய்ச்சலின் பிற குறிகளும் தோன்றலாயின. இவ் ஆய்வின் பயனாக, உடல் நலத்துடன் இருப்பவர்கள் (ஒரு மருந்தை) மிகுந்த அளவில் உட்கொள்வதால் ஒரு நோயின் ஒத்த குறிகளை ஏற்படுத்தும் மருந்தை

சிறிய அளவில் உட்கொண்டால் அந்நோயை முற்றிலும் போக்கி விடும் என்னும் அரிய தத்து வத்தைக் கண்டறிந்தார். மாறு பட்ட உடல் இயல்புடைய பல நண்பர்களிடம் பரிசோதித்த பிறகே இவ்வுண்மையை வெளி யிட்டார்.

இதே அடிப்படையில் பல மருந்துகள் ஏற்படுத்தும் குறி களையும் நோய்களின் உண்மைக் குறிகளையும்கொண்டு பல நோய் களுக்கு ஏற்ற மருந்துகளை முடிவு செய்தார். ஹானிமெனின் ஆராய்ச்சி ரீதியில் அவரது மாணவர்களும் மருந்துகளை முடிவு செய்தனர்.

இங்ஙனம் புரியும் ஆய்வையும் அவற்றின் அடிப்படையில் நோய்களின் உண்மைக் குறி களையும், மருந்துகள் மாறுபட்ட உடல் இயல்புடையவரிடத்துத் தோற்றுவிக்கும் குறிகளையும் குறிப்பெடுப்பதை ஹோமியோ பதியில் "மருந்து நிர்ணயம்" (Drug Proving) என்பர். ஏனெ னில் இவைகளின் அடிப்படை யில்தான் நோய்களுக்கான மருந் துகள் நிச்சயிக்கப்படுகின்றன.

நோயின் மூலகாரணத்தை அழிக்க இம்முறை முயல்வதால் நோய் முழுதும் குணமாவதற்குச் சிறிது காலம் பிடிக்கும். எனி னும் இக்காலத்தில் வீரியம் (Potency) மிகுந்த மருந்துகளின் உதவியால் நோய்களை விரைவில் குணப்படுத்துகின்றனர். "நோய் களை விரைவாகவும், (கூடியவிரை வில்) மென்மையாகவும் நிலையாக வும் குணப்படுத்த வேண்டும்," என்று டாக்டர் ஹானிமென் தமது ஆர்கனன் ஆஃப் மெடிசின் (Organon of Medicine) என்னும் நூலில் கூறியது போல் இம் முறை நோய்களை நிலையாகப் போக்கப்பாடுபடுகின்றது.

அறுவை சிகிச்சை

கருவிகளின் உதவியுடன் சிகிச்சை செய்யும் முறை அறு வைச் சிகிச்சை எனப்படுகின் றது. "அல்லோபதி" முறையில் அறுவை சிகிச்சையால் குணப் படுத்தப்படும் பல நோய்களை ஹோமியோபதி முறையில் மருந் துகளைக் கொண்டே குணப்படுத் தலாம். எடுத்துக்காட்டாக, ஹோமியோபதி தத்துவப்படி 'டான்சில்ஸ்' என்ற தொண் டைச் சதை நோயை மருந்து களைக்கொண்டே குணப்படுத்த லாம். நோயின் மூலகாரணம் முறிக்கப்படாததால் அறுவைச் சிகிச்சைக்குப்பின்னரும் தொண் டையில் சதை வளருவதை நாமறிவோம்.

இம்முறையில் அறுவைச் சிகிச்சை அதிக அளவில் பயன்

பிரிட்டிஷ் பெண்கள்

"அழகாக ஆடை அணிவதி லும், ஆடம்பரமாக நடப்பதி லும், பிரிட்டிஷ் பெண்கள் பிரெஞ்சு சகோதரிகளைப் பின் பற்றவில்லை. 18 ஆண்டு நிறை வெய்து முன் உதட்டுச் சாயம், நகச்சாயம் முதலியவை உப யோகிக்கப் பிரிட்டிஷ் பெண் கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியப் பெண்களின் 'கல்லா னாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற அடக்கமும், சுவிஸ் பெண்களின் மீன் கடை ஆரவாரமும், அமெரிக்கப் பெண்களின்புதுமைப்பித்தமும், ஆஸ்திரேலியப் பெண்களின் விரைவின்மையும், ஜெர்மன் பெண்களின் அழகும் பிரிட்டிஷ் பெண்களிடம் இல்லாதன."

-"என் பிரயாண நினைவுகள்"
(சோம. லெ. இலக்குமண செட்டியார்)

படுத்தப்படாததால் ஹோமியோபதியில் அறுவை சிகிச்சையே இல்லையென்பர் சிலர். பொருளற்ற வாதம் இது. எலும்பு முறிவுபோன்ற மிக முக்கியமான வைகளைத் தவிர, இம் முறையில் இரண சிகிச்சை தேவைப்படுவதில்லை. அல்லோபதியில் அறுவைச் சிகிச்சை அதிக அளவில் கையாளப்படுகின்றது; அவ்வளவே. நோய்களைப் போக்கும் ஒரு முறையான அறுவை சிகிச்சை ஹோமியோபதியிலும் உண்டு.

பத்தியம்

ஆயுர்வேதம், சித்தம், போன்ற நாட்டு மருத்துவ முறைகளைக் கையாள்வோர் கடுமையான பத்தியத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. எம்முறையாயினும், சிறிதளவாகிலும் உணவுக்கட்டுப்பாடு (Diet restriction) இருந்தே தீரும். ஹோமியோபதியில் அதிக காரம், புளிப்பு, டீ, காஃபி போன்வைகளை மட்டுமே விட்டொழிக்கவோ அல்லது குறைக்கவோ வேண்டும். அங்ஙனமிருப்பின்தான் மருந்துகள் தமது முழு வீரியத்துடன் வேலை செய்ய முடியும்.

"எங்ஙனம் எனது பலாத்காரமின்மை தோல்வியுறுதோ அது போன்று சிறந்த தத்துவங்களின் அடிப்படையில் அமைந்துள்ள ஹோமியோபதியும் என்றும் தோல்வியுருது. ஏனெனில் இம்முறை சிறந்த பயனைத்தர வல்லது," என்பார் காந்தியடிகள்.

காலஞ்சென்ற முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராசேந்திரப்பிரசாத், "மிகச் சிறந்த பலனை யளிப்பதாலும் மலிவானதாலும் ஹோமியோபதி முறை மேலும் மேலும் சிறப்புற்று வளர்ந்து வருகிறது," என்றியம்பியுள்ளார்.

இம்முறையில் நோய்கள் விரைவாகவும் மென்மையாகவும் முற்றிலும் குணப்படுத்தப்படுகின்றன. மருந்துகள் மலிவான விலைக்குக் கிடைப்பதால் மருத்துவச் செலவும் குறைகின்றது. அறுவைச் சிகிச்சை தேவைப்படும் நோய்களில் பலவற்றையும் தீராத நோய்களில் சிலவற்றையும் இம்முறையில் மருந்துகளைக் கொண்டே குணப்படுத்தலாம். சொற்களால் வர்ணிக்க முடியாத எண்ணற்ற பயன்களைக்கொண்ட இம்முறை ஏழைகளுக்கான ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

இன்றுள்ள மருத்துவ முறைகளில் உரிய இடம்பெற்றுள்ள இம்முறையைப் பயில்வதும் எளிது. அரிய தத்துவங்களின் அடிப்படையில் அமைந்துள்ள இம்முறையை அறிவுடைய மக்கள் அனைவரும் கற்று பிணியாளர்க்குத் தொண்டுபுரிவதைத் தமது கடமையாகக் கொள்ள வேண்டும். ★

லாப்லாண்டு (Lapland)

ஆர்க்டிக் வட்டத்துக்குமேலே வடநார்வே, வட சுவீடன், வட ஃபின்லாண்டு, வடமேற்கு ருஷ்யா—ஆகிய எல்லைக்குள் அடங்கியுள்ள நாடு. பரப்பு 1,50,000 சதுரமைல்; மக்கள் எண்ணிக்கை 30,000; நாடோடிகளாகத் திரிகின்ற மங்கோலிய இனத்தவர். மீன் பிடித்தல், கலைமான் வளர்த்தல்-முக்கிய தொழில்கள். 19-ஆம் நூற்றுண்டு முதல் பல உரிமைகள் பெற்று வாழ்கின்றனர். அது வரையில் பக்கத்து நாடுகளின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தனர்.

கோ. இராமச்சந்திரன், எம். ஏ.

வடமொழியில் தமிழ்ச் சொற்கள்

[தமிழ்மொழி—வடமொழிப் போராட்டம் பல நூற்றுண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதாகும். "ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழியாத" தமிழ்மொழியின் சொற்கள் சில பிற மொழிகளுக்குச் சென்றிருப்பது போலவே, இன்றியமையாத பிறமொழிச் சொற்களையும் தமிழ் ஏற்றுக் கொண்டிருக்கிறது; ஏற்றுக் கொள்ள வேண்டும். வடமொழியில் புகுந்துள்ள சில தமிழ்ச்சொற்களைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை இது.]

"வடமொழிக் காவியங்களில் 'த்ராவிடம்' என்பது தமிழ் மொழியை மட்டுமே குறிப்பதாய் உளது."

கற்றோர்தம் ஆராய்ச்சி அறிவு பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்து வரும் இன்றைய நிலையிலும் இந்திய நாட்டினுடைய நாகரிக மேம்பாடு, வரலாறு, பண்பாடு முதலியவைகளை அறிய மொழிகள் பெரிதும் துணைபுரிகின்றன. அவற்றுள் பழமையுடையனவை என ஆராய்ச்சி முடிவுகளின்படி ஒப்புக் கொள்ளப்படும் பெருமைக்குரியவை இரண்டு மொழிகள். அவை தமிழும், சமஸ்கிருதமும் (வடமொழி) ஆகும். அந்த இரண்டு மொழிகளிலும் இலக்கண வரம்பு, பழைமை, வளம் என்னும் பல சிறப்பியல்புகளைக் கொண்டதும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தனித்தியங்கியதும் ஆகிய மொழி தமிழேயாம் என்பதை மொழி நூல் வல்லார் அனைவரும் தெரிவித்துள்ளனர். கண்மூடித்தனம், வெறி, அழுக்காறு, சுயநலம், பிரித்தாளும் சூழ்ச்சி முதலியவை காரணமாக "சமஸ்கிருதமே இந்திய மொழிகளின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தது; சமஸ்கிருதம் இன்றித் தமிழ் (மொழி) இல்லை; இந்திய நாகரிகம் இல்லை; வரலாறு இல்லை," என்றெல்லாம் பண்டிதர்கள் பேசியும் எழுதியும் வந்தனர். அந்தக் காலம் மலையேறிப் போய் விட்டது. சாதிச் செருக்கு காரணமாக 'தேவ பாஷை', 'கிருதம்' (தெளிவு, பிழிவு, சாரம் என்னும் பொருளது; அதாவது இங்கு தமிழுடன் தொடர்பு கொண்ட பொழுதே தெளிவாக்கப் பட்டது என்பது முடிந்த முடிபு) என்றெல்லாம் சொல்லிச் சமஸ்கிருதத்தைப் பாராட்டும் வழக்கமும் மறைந்து கொண்டு வருகிறது. எவ்வளவு காலத்திற்குத் தான் பொய் புனை சுருட்டுக்களை (புனைந்துரைகளை) வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழ முடியும்? சமஸ்கிருதத்தைப் பற்றி ஆரியர் சொன்ன பொய்கள் இன்று (அவர்களையே அவர்களால் சொல்லப்பட்ட பொய்கள் மொழியை முன்பே அழித்து விட்டன) அழிக்க ஆரம்பித்துள்

ளன. இந்திய வரலாற்றையும் மொழிகளையும் பற்றிய நூல்களை எழுதிய மேலைநாட்டு ஆசிரியர்களும் தமிழர் நாகரிகம், மொழி பற்றிய செய்திகளை வெளியிடாமல் மறைத்ததன் மூலம் பெருந் தவற்றைச் செய்து விட்டனர்.* இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குள் தமிழர் இந்திய நாகரிக வளர்ச்சிக்கும், பிறமொழிகள் வளர்ச்சிக்கும் காரணமாய் அமைந்தவர்கள் என்னும் உண்மை தெளிவாக நிறுவப்பட்டு விடும்.

வேத மொழியாக விளங்கிய காலத்தில் ஒரு சிலராலே பாடல்கள் மூலம் இறவாமல் காக்கப்பட்ட (மற்றவர்கள் கற்காதவாறு தடுக்கப்பட்ட) சமஸ்கிருதம் — இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பிரிவைச் சேர்ந்ததாகக் கொள்ளப்படும் சமஸ்கிருதம் — காலப் போக்கில் வழக்கொழிந்து போயிற்று. இன்று சிலரே பேசும் மொழியாக அது குறுகிக் காட்சியளிக்கிறது. அன்று மூடிவைத்து மொழி வளர்ச்சியைத் தடுத்தவர்களின் வழித் தோன்றல்களெனத் தங்களைப் பற்றிக் கருதிக்கொள்ளும் சிலர் இன்று, 'இந்திய மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்ருகக் கொள்ளப்பட வேண்டும்' என ஓலமிடுகின்றனர். இயலாத செயலைப் பற்றிக் கனவுகள் காணுகின்றனர்—கோட்டைகளைக் கட்ட முயல்கின்றனர். நாளிதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள செய்தியைக் காண்பாராயின் சமஸ்கிருதத்தின் இன்றைய நிலையை எவரும் எளிதில் தெரிந்து கொள்ள முடியும். செய்தி:

"500 பேர் மட்டுமே பேசும் சமஸ்கிருதம் 14 ஆட்சி மொழிகளில் ஒன்ருக முடியாது."

"இந்தியாவின் 14 – ஆட்சி மொழிகளின் பட்டியலில் சமஸ்கிருத மொழிக்கு இடமளிக்க நியாயம் இல்லை என்று உள்துறை இலாகா துணை மந்திரி திரு. ஹஜார்–நாவிஸ் நேற்று லோக் சபையில் அறிவித்தார்" - என்பதாகும். அன்று குறுகிய மனப்பான்மை காரணமாகச் சிலரால் வழங்கப்படும் மொழியாகச் சமஸ்கிருதத்தைக் கட்டுப் படுத்திவிட்டு, இன்று அதையே தலையாய ஒரு மொழியாக ஆக்கி விடத் துடிக்கின்றனர். அன்று எவ்வாறு ஒரு சிலரால் பேசப் பட்டு வந்ததோ (சிறுபான்மையினர் மொழியாக விளங்கியதோ) அதே போன்று இன்றும் ஒரு சிலரால் மாத்திரம் பேசப்படும் (பேசப்படும் மொழி எனக்கூறுவதைக் காட்டிலும் எழுதப்படும் மொழி எனக்கூறுவது பொருந்தும்) பாராட்டப் படும்—மொழியாக அது உள்ளது. அன்று 5 பேர் சமஸ்கிருதம் பேசினர்கள் என்று கொண்டால் இன்று 500 பேர் பேசுவதாக (அதாவது எழுதுவதாக)க் கொள்ளலாம். அவ்வளவே வேறுபாடு. காலப்போக்கில் தமிழொடு தொடர்பு கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டவுடன் மந்

---

*The Dravidians are usually brushed aside with little or no reference. In the Cambridge history of Ancient India, there is not even one percent reference, so late as 1922. It was not for want of material; it was want of European scholarship and enthusiasm which favoured Aryanism at the expense of the Dravidian.

But events turned out so suddenly and so startlingly that it well illustrates the Italian proverb which says "He who goes quietly goes safely and goes far". page—19 "Dravidian & Aryan" P. Chidambaram Pillai

திரங்கள் கூறுவதற்கான சொற்கள் நீங்கலாக, (பல பொருள்களை, பெயர்களை, செயல்களை உணர்த்துவதற்குரிய சொற்களை அன்று அறியாத அவர்கள்) மற்றச் சொற்களையெல்லாம் சாட்டர்ஜி என்பவர், "இருக்கு வேதத்திற் காணப்படும் அணு, அரணி, கபி, கருமாரா, காலம், கானம், நானு [பல] நீலம், புட்பம், பல [பழம்], பீசம், மயூரம், இராத்திரி, உருவம்" முதலிய பல தமிழ்ச் சொற்களை எடுத்துக் காட்டியுள்ளார். தமிழிலிருந்து இரவலாகக் கொண்டு பயன்படுத்த முனைந்ததுடன் அமைதி கொள்ளாமல், அத்தகைய சொற்களின் உச்சரிப்பு முறைகளையும் வழக்குகளையும் சிதைத்து மாற்று உருவிலே அமைத்துக் கொண்டு அவை சமஸ்கிருதத்திற்கே உரியவை எனக்கூறியும், தமிழர் சமஸ்கிருதச் சொற்களையெல்லாம் மாற்றித் தங்கள் மொழியில் ஏற்றுக் கொண்டனர் என உண்மைக்கு மாறாகக் கதைகளைக் கட்டியும் (பொருளைத் திருடியவன் தன்னைக் காத்துக்கொள்ள, "அதோ ஓடுகிறான் திருடன்" என்று கூறி, மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு தானும் ஓடுவது போல்) பொய்களைப் பேசியும் எழுதிய கருத்துக்களையே மீண்டும் மீண்டும் தொடர்ந்து எழுதியும், மக்களை ஏமாற்றி விட்டனர். இதுவே உண்மை.

தமிழும் வடமொழியும்

தெளிவிற்காகத் திராவிடர், திராவிடம் (மொழி) என வழங்கப்படும் வழக்குகள் தமிழரையும், தமிழையும் அன்றி வேறு எவரையும், எந்த மொழியையும் குறிப்பிடுவன அல்ல என்பதை முதலில் நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

" 'திராவிடமென்பது தமிழ்என்பதின் திரிபு, அல்லது சமக்கிருத வடிவமாக்கப்பட்ட சொல்' எனச் சமக்கிருதபண்டிதர்கள் கருதுகின்றனர் என்று 'தமிழ் ஆராய்ச்சி' என்னும் நூலார் கூறுவர். 'திசைச் சொல் பன்னுரென்பது வேறுமொழியில் ழகரம்' இன்மையின் தமிழ் என்னும் பெயரைச் சொல்ல இயலாமை பற்றித் திராவிடம் முதலிய பெயர்களால் தமிழைக் குறிப்பது இது பற்றிப் போலும்"—என டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கூறிய கருத்து இந்த உண்மையை வலியுறுத்தப் போதிய சான்றாகும். தமிழ்மொழி இன்றிச் சமஸ்கிருதம் இல்லை என்னும் உண்மையையும் வேத காலத்தில் சில சொற்களைத் தமிழினின்றும் பெற்றுக்கொண்ட சமஸ்கிருதம் காலப்போக்கில் பல சொற்களை இரவலாக ஏற்றுக் கொண்டு வளர்ச்சியடைந்தது என்னும் உண்மையையும் மொழிநூல் வல்லுநர்களும், மறுக்கவியலாத ஆராய்ச்சி முடிபுகளைக் கண்ட சான்றோர்களும் மிகத்தெளிவாக எழுதிச் சென்றுள்ளனர். இந்த உண்மையைக் கூறுமற் கூறும் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களுடைய கருத்து* நமக்கு உண்மையைத் தெளிவு படுத்துகின்றது. சான்றோர்களுடைய விளக்கங்கள் — கருத்துக்கள்;

* "இந்தியாவின் வடக்குப் பாகத்தில் வழங்கிய மொழிக்குத் தமிழ் இலக்கணக்காரர் வடமொழி எனப் பெயரிட்டனர். அதனைத் தற்போது சமஸ்கிருதம் என்பர். அம்மொழியைப் பேசுவோர் ஒரு நாட்டில் நிலைத்திராமையால் நாட்டைக் கொண்டு அதற்குப் பெயர் வரவில்லை. தற்போது உள்ள நூல்களிலிருந்து அது வளர்ச்சியுற்ற நிலை நான்கு என்னலாம்."

(பக்கம் – 26 'வடமொழி வரலாறு'')

இருமொழிகளின் தன்மை; தொடர்பு; ஆற்றல் முதலியவை பற்றிய உண்மைகளை அறியப் பெரிதும் துணை செய்ய வல்லனவாம். அவை வருமாறு:

(1) 'தமிழர்களுடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமையானது கணப் பொழுதிற்கு முன் பெற்ற இராய்ட்டர் (Reuter) தந்திச் செய்தியை ஒக்கும்''

—சென்னைக் கவர்னர் கிராண்டப், அவர்களின் பட்டமளிப்பு விழாப் பேச்சு

(2) ''சமஸ்கிருதம்'' என்ற சொல்லிற்கு 'நன்ருய்ச் செய்யப் பட்டது' என்று பொருள். அதாவது ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த பிற்பாடு தமிழர்களைப் பார்த்துத் தங்களுடைய பாழையைச் சீர்திருத்தம் செய்து கொண்டார்கள் என்றும், எழுத்து முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டார்கள் என்றும் ஏற்படுகிறது. இன்ன காலத்தில் தான் ஏற்பட்டது என்று எடுத்துக் கூற இயலாத மொழிக்கு, நேற்று ஏற்பட்ட சமஸ்கிருத பாழையின் சொல்லால் பெயருண்டாயிற்று என்பது எவ்வளவு அழகு! எவ்வளவு பொருத்தம்!! என்பதை நோக்குங்கள். ஆரியர் வருவதற்கு முன் இந்நாட்டு மக்கள் பேசின பாழைக்குப் பெயரே கிடையாதா? பேரில்லாப் பாழையாகவா இருந்தது? பிரயோக விவேகத்தைப் பின்பற்றிக் கூறும் புலவர்களே விடை பகர்வார்களாக.''

('தமிழ்' ''செந்தமிழ்ச் செல்வி"; சிலம்பு.- 1 பரல் - 3. து. அ. சிதம்பரனுர்)

(3) ''திராவிட நாகரிகத்தை நாம் ஒருபோதும் குறைவாகக் கருதுதல் கூடாது. திராவிட நாகரிகத்தின் அடிப்படையினுல் ஆரிய நாகரிகம் செழிப்பும் ஆழமும் எய்திற்று. திராவிடர் பல கலைகளில் திறமை அடைந்திருந்தார்கள். அவர்கள் பாடவும் கட்டிடங்கள் அமைக்கவும் வல்லவர்களாயிருந்தனர்.''

—கவி. இரவீந்திர நாத தாகூர்

(4) ''ஆரிய மொழிக்குரிய நெடுங்கணக்குத் தமிழர் முறையைப் பார்த்துச் செய்யப்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. தாங்கள் செல்லுமிடங்கட்குத் தக்கபடி புதிய லிபிகள் ஏற்படுத்திக் கொள்ளும் இயல்புடைய ஆரியர் தமிழ் லிபியை ஒட்டிக் 'கிரந்தம்'என்னும் பெயரிற் புதியதோர் லிபி வகுத்தனர்."

(—''தமிழ் மொழி வரலாறு"; வி. கோ. சூ)

(5) - a "ஆரியர் வரும்போது வடக்கே தமிழ் வழங்கிற்று. பின்பு இரு மக்களும் அளவளாவிக் கலந்தார்கள். அப்பொழுது தமிழொடு, பல இருமொழிச் சிதைவுகளும் கலந்து புதுமொழிகள் எழுந்தன. வட நாட்டு மொழிகள், சொற்போக்கில் ஆரியம் போல் தோன்றினுலும், இலக்கண அமைப்பில் திராவிடமாயுள்ளன என ஆராய்ச்சி வல்ல பி. தி. சீனிவாச ஐயங்காரவர்கள் 'தற்கால இந்தியா' என்னும் தமது நூலிற் காட்டியுள்ளார் "

(—பக்கம் 14- 'தமிழ் விளக்கம்'; ந. சி. கந்தையா பிள்ளை)

(5)–b "It (Tamil) stands alone without any predecessor. In origin it must be long anterior to the Sanskrit .... Human remains and traces have been found on the East Coast of an age which is indeterminate but quite beyond the ordinary calcu-

lations of history."(p-50- "Manual of Standing Imformation" for the Madras Presidency)

(6) "இனி ஆரியர் இந்தியாவிற் புகுந்த பின் தமிழருடைய நாகரிக முதிர்ச்சியினையும், அவர் தாங்கருதிய பொருளை எழுத்திலிட்டுப் பொறித்தலுங் கண்டு தாமும் தம்முடைய பாட்டுக்களைப் பண் அடைவுபட வகுத்தொன்று எழுதுமுறை கண்டறிந்தார். இது கோல்ட் ஸ்டக்கர் என்னும் பண்டிதர் விளக்குமாற்ருனும் நன்கு அறியப்படும். இரைஸ் டேவிட்ஸ் பண்டிதரும் 'இந்தியாவிலுள்ள எழுத்துக்கள் ஆரியர்க்குரிய வல்ல' என்றும், 'அவை திராவிட வியாபாரிகளாற் கொண்டு வந்து தரப்பட்டன' என்றும் கூறுமாற்ருனும் அவை தமிழர்க்கே உரியவென்பது இனிது பெறப்படும்."

(பக்கம் — 30; 'பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்' மறைமலை அடிகள்)

(7) "The three classic languages of the world viz. Sanskrit, Hebrew and Greek contain Tamil words in the vocabulary"

—'Rhys Davids'

(8) "Tamil is also the oldest Dravidian language known in Europe. The name 'Tamilian' or 'Tamulian' was at first given to the entire family; 'Dravidian' chosen by CALDWELL as being more general, is nothing but an ancient form of the same name, known to Sanskrit (Dramida, Dravida)."

—Page XXVI–Introduction "The Grammatical structure of Dravidian Languages" —By Jules Bloch.

(9) "Tamil, the language of Tamilaham, is one of the earliest (if not the earliest), languages of the world. It took its origin in the country itself. It became the language of the Indian Peninsula and was spoken in different parts of the world."

(Page-35 "Tamil India" —By M. S. Purnalingam Pillai)

(10) "Sanskrit scholars suffer from a form of superiority complex and believe that Sanskrit, the language of the gods being a perfect language, could not stoop so low as to borrow words from the languages of men. Hence they are fond of inventing derivations, ingenious and plausible but absurd from a historical point of view."

("Pre-Aryan Tamil culture" —P. T. S. Iyengar)

இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப் பெருத பல சொற்கள் சமஸ்கிருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றன. எனவே அவை பழம் பெருமையுடைய மொழியாகிய தமிழினின்றும் கொள்ளப்பட்டவை என்னும் உண்மையை மறுத்தற்கில்லை. இருக்கு வேதத்தில் காணப்பெறும் (சமஸ்கிருதச் சொற்களாக மாற்றிவிடப்பட்ட) தமிழ்ச் சொற்களின் பட்டியலையும், ஆங்கிலத்தில் அவற்றிற்குரிய பொருள்களையும் கீழ்க்காணும் அட்டவணை வாயிலாக அறிந்து கொள்ளமுடியும். 'The influenee of Dravidian on Sanskrit may be illustrated by a list of the most important and certain of the Dravidian loans' எனக் கூறி நூற்றுக்கணக்கான சொற்களை டி. பீர்ரோ என்பவர் தொகுத்துக் காட்டியுள்ளார்.

'Rig Veda' எனும் நூலில் காணப்படும் சொற்கள்*

தமிழ்	சமஸ்கிருதம்*	ஆங்கிலத்தில் பொருள்
(1) உலக்கை	Ulukhala (உலூகலா)	Mortar
(2) கடு(மை) (kadu)	Katuka (கடு)	Pungent, Sharp
(3) குடம்	Kuta (குடா)	Pot
(4) கள்வன்	Khala (கல)	Rogue
(5) தண்டம்	Danda (தண்ட)	Stick, Cudgel, Stem, Handle
(6) பள்ளி	Palli (பள்ளீ)	Small village (hamlet)
(7) வலம் (வலிமை)	Bala (பல)	Strength
(8) பிளவு (பிலம்)	Bila (பில)	Hole, Cave
(9) மயில்	Mayura (மயூரா)	Peacock
(10) மாலை	Mala (மாலா)	Garland
(11) முரசு	Muraja (முரஜ)	Drum
(12) வளை	Valaya (வலய)	Bracelet
(13) வள்ளி	Valli (வல்லி)	Creeper
(14) எருமை	Heramba (ஹெரம்பா)	Buffalo
(15) உடுக்கை	Hudukka (ஹுடுக்கா)	Small drum
(16) பிண்டம்	Pinda (பிண்ட)	Lump, Clod

இங்கு காட்டப் பெற்றுள்ள சொற்கள்† மொழிநூல் வல்லாராகிய T. Burrow என்பவரால் எழுதப்பட்ட 'சமஸ்கிருத மொழி' என்னும் நூலிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவையாம்.

பிற ஆதாரங்கள்

சமஸ்கிருதம் எவ்வாறு தமிழுக்குக் கடன்பட்ட மொழியாக ஆராய்ச்சி முடிபுகளின்படி கொள்ளப் படுகின்றது என்பதை அறிஞர் பெருமக்களுடைய (Jules Bloch, Caldwell, Burrow, Collins, Rhys Davids, Sesha Iyengar, குண்டர்ட், குமிரிலபட்டர், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மறைமலை அடிகள், கந்தையாபிள்ளை போன்றோர் தம்) விளக்கங்கள் நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றன.

தமிழ் நாகரிகமும், தமிழ்மொழியும் இந்திய நாகரிகத்தின் பெருமையை உலகுள்ளளவும் பறை சாற்றிக் கொண்டிருக்கும் என்பதை இனிப் பிறர் மறுக்கவோ அன்றி மறைக்கவோ இயலாது. காலம் அதனுடைய கடமையைச் செய்து முடித்து விட்டது. உலகம் விழித்துக் கொண்டது. பொய், நீர்க்குமிழி போல் தோன்றி மறைந்துவிட்டது. குற்கிய மனம் தக்க தண்டனையைப்

† "On the other hand it is important to note that there is a small nucleus already found in the Rigveda. Such are: Ulukhala......... It is clear that as far as Sanskrit is concerned the active period of borrowing from Dravidian was well over before the Christian era."
— (page 386 "The Sanskrit Language"
T. BURROW

பெற்றுவிட்டது. உண்மை வென்று விட்டது.

சிந்தனை ஊற்றைத் தொட வல்ல அறிஞர் பெருமக்களுடைய விளக்கங்கள் தமிழருடைய கண்களைத் திறக்க ஆரம்பித்து விட்டன. தமிழர் தங்களுடைய வரலாற்றையும் (அதனுடன் பின்னிப் பிணைந்துள்ள இலக்கிய வரலாற்றையும்), தமிழ் மொழியின் சிறப்பினையும் தொகுத்துக்கூறும் நாள் நெடுந்தொலைவில் இல்லை என்பதையும், கீழே குறிக்கப்பட்டுள்ள உண்மைகள் கலங்கரை விளக்கங்களாக அமைந்து பயன் தரவல்லவை என்பதையும், மனத்திற்கொண்டு (உண்மையான மொழிப்பற்றுடன்) நேர்மையுடன் செயல்பட வேண்டும். விளக்கங்களாவன:

I. மீன், நீர் என்ற தமிழ்ச் சொற்கள் வடமொழியில் மீன' 'நீர' என வழங்குகின்றன. குமரிலபட்டர் தான் இயற்றிய ச்லோக வார்த்திகத்தில் சோறு, அதர் முதலிய திராவிடச் சொற்கள் வடமொழியில் கலந்துள்ளன என்பர்''.

—(ந. சி. கந்தையா பிள்ளை)

II. "As before, the Dravidian words are to be regarded as Tamil, except it is stated that they are taken from some other dialect"

(page 588 "Camparative Grammar" — Dr. Caldwell)

III. "ஆரிய மொழிகளில் திராவிட மொழி இயல்புகள்."

"சம்ஸ்கிருதம் திராவிடத்திற்குப் பல்லாற்றானும் கடன்பட்டது. அது வேத இலக்கியத்திலேயே காணப்படுகின்றது என்ற முடிவுக்கு அவர்கள் (இன்றைய மொழி இயல் ஆய்வாளர்கள்) வந்தனர். டாக்டர் கிரையர்சன் கூறுகிறார்: "There are a number of verbal roots and words in Sanskrit which do not appear to occur in other Indo-European languages. It is probable that at least a considerable portion of such words and

அமெரிக்காவின் மறுபுறம்!

அய்க்கிய அமெரிக்கா (யு. எஸ். ஏ.) குபேர நாடு என்பது உண்மை! அதிலும் மற்றொரு பகுதி இருக்கிறது. அது இது :-

"இருபது கோடி மக்களில் ஏறத்தாழ சரிபாதிப்பேர் அரை வயிறு உணவுகூடக் கிடைக்காதவர்கள் என்று இந்நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்; அரசாங்கக் கணக்குப்படி $3\frac{1}{2}$ கோடிப் பேர்தாம் வறுமையில் ஆழ்ந்திருக்கிறார்கள். எப்படியும், அய்ந்தில் ஒரு பங்குக்குக் குறையாதவர் இப்பிரிவைச் சார்ந்தவராகும். மொத்தம் நாலே முக்கால் கோடி குடும்பங்களில் 90 லட்சம் குடும்பங்கள் பரம ஏழைக் குடும்பங்களாகும். 80 லட்சம் பேர் (ஆண்-பெண்-குழந்தைகள்) நாள்தோறும் அரசாங்க— பொதுஜன-உதவியினால் உயிர் வாழ்ந்து வருகின்றனர். இந்த எண்ணிக்கை பெருகிக் கொண்டேயிருக்கிறது. இவ் ஏழைக் குடும்பங்களில் 100க்கு 22 பேர் வெள்ளையர் அல்லாத மற்றவர்களும், நீக்ரோக்களும் ஆவர். ஏறத்தாழ 50 லட்சம் அமெரிக்கர் வேலை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.''

—("நியூஸ்வீக்")

bases has been borrowed from the Dravidian." ஆரிய மொழிகளையும் நாகரிகத்தையும் பெருமளவிற்குத் திராவிடர்கள் உருவாக்கியிருக்கின்றனர் என்பதை டாக்டர் சுநீதிகுமார் சாட்டர்ஜி என்ற வங்காளப் பன்மொழிப் புலவர் (இவர் 'நன்னெறி முருகன்' என்று தம்பெயரைத் தமிழில் கூறிக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்) சுட்டுகிறார்.'

— (பக்கம் - 27. "ஆரிய மொழிகளில் திராவிடமொழி இயல்புகள்" கட்டுரை) பெ. திருஞான சம்பந்தன்,எம்.ஏ.எல்.டி. (Professor of Sanskrit & Comparative Philology, Presidency College, Madras.) "தமிழ்ப் பொழில்" துணர் 38 மலர் 1 – 2 (1962).

IV. "That there was in India at the time of the Aryan invasion a Dravidian civilization of a more elaborate and developed character than the civilization, if civilization it can be called, of the Aryans."

—("The Dravidian Element in Indian Culture" By Dr. Gilbert Slater)

V. "கிறித்து பிறப்பதற்கு முன்னும் ஆரியர் வருகைக்கு முன்னும் திராவிட நாகரிகம், பொருளாதார, இலக்கிய, திருமண முறைகளில் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது எனக் கொள்வதில் யாதும் மயக்கமில்லை."

—(டாக்டர் ஏ. கே. ஆனந்தக் குமாரசாமி)

VI. "இந்திய நாகரிகத்தில் ஆரியரல்லாத மக்களுடைய நாகரிகத்தின் அடிப்படை பெரிதும் உள்ளதென்பதைச சில்வன் லெவி, பிறிஸ்லுஸ்கி (Sylvann Levi and Jean Przyluski) என்போர் தெள்ளிதில் விளக்கி எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதியுள்ளதன் ஆங்கில மொழி பெயர்ப்பைக் காக்சி (Cagchi) என்பவர் தாமெழுதிய, "ஆரியருக்கு முற்பட்ட மக்கள்" என்னும் நூலில் வெளியிட்டுள்ளார். இந்திய வரலாற்றில், ஆரியரல்லாத மக்களின் நாகரிக அடிப்படை உள்ளதென்பதை எல்லா ஆசிரியர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்."

(டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி Dr. Suniti Kumar Chatterji in the Ramamurthi Pantulu garu memorial volume - page - 72)

VII. "Ela is also found written in Sanskrit Eda. It is well known the Tamil peculiar sound "ழ" changes into 'ḷ' or 'd' or 'r' in Aryan tongues. c.f 'பழம்' fruit, palam (sans); 'பீழை' 'misery' pida (sans); 'இழு' 'draw' eru-o (Lat) etc.

—D. Savariroyan, in "Tamilian Antiquary" (Second Edition - 1913)

VIII. "கிரேத்தா (Crete) என்பது கிரீஸ் நாட்டுக்குத் தெற்கேயுள்ள தீவு. இங்கு வாழ்ந்த மக்கள் தமிலி என அழைக்கப்பட்டார்கள் என எரடோடஸ் (Heradotus கி.மு. 480) என்னும் ஆசிரியர் கூறியுள்ளார். அவர்களின் பழைய நாகரிகம் அரப்பா மொகஞ்சதரோ நாகரிகத்தை ஒத்தது" (பக்-5; "தமிழ் விளக்கம்:" ந. சி. கந்தையா பிள்ளை)

IX. "In grammatical structure, in conception of ideas, in

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

K. S. மகாதேவன், B. SC., M. A.

சோதிடம் அறிவியல் ஆகுமா?

[சோதிடம் என்பது சுத்தப்புரட்டு என, திரு. சாமிக் கண்ணுப் பிள்ளை உள்ளிட்ட வானநூல் நிபுணர்கள் பலர் கூறிவிட்டனர். ஆயினும் படிக்காதவர்களைவிடப் படித்தவர்களே இம்மடமையில் ஆழமாக மூழ்கிக் கிடக்கின்றனர். இத்தகையோருக்கு அறிவு கொளுத்துவதற்கு இது போன்ற ஆராய்ச்சிக் கட்டுரை பயன்படும். இக் கட்டுரை ஆசிரியர் விஞ்ஞானம், தமிழ் இலக்கியம், வானநூல் முதலிய பல் துறைகளில் ஆராய்ந்து உண்மை கண்டிருப்பவர். இவர் கூறியுள்ள வானநூல் உண்மையையும், சோதிடப் புரட்டையும் மறுத்து, இன்று முன்னணியிலுள்ள சோதிடப் புலிகளில் எவராவது ஆதாரத்துடன் எழுதக்கூடுமானால் அதையும் வெளியிடக் காத்திருக்கிறோம்—ஆசிரியர்.]

விண்ணில் காணும் மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் இயல்பினை ஆய்ந்தறிவது வான நூல்; விண்ணில் உள்ள மீன்களும் கோள்களும் மண்ணில் வாழும் மக்களை அடக்கிஆளுகின்றன என்ற கருத்தை வலியுறுத்துவது சோதிடம். இன்றைய அறிஞருலகம் சோதிடத்தை அறிவியல் எல்லைக்கு வெளியில் எடுத்து வீசிவிட்டது!

பழங்காலத்துப் பொருள் மாருட்டக் கொள்கையரின் (Alchemists) உழைப்பு இன்றைய இயைபியல் (Chemistry) வளர்வதற்குத் துணை செய்துள்ளது; அவ்வாறே பழங்காலத்தில் சோதிடர்கள் மேற்கொண்ட முறைகளும், விட்டுச்சென்ற குறிப்புக்களும் இக்கால வான நூற்கலை செழித்து வளர்வதற்குப் பெரிதும் உதவியுள்ளன.

[முன் பக்கத் தொடர்ச்சி]

refinement of expressiveness, in its polish of prosody and grandeur of literature, and in the development of the language, Tamil is surpassed by few, and has secured for itself a very high and envious status among the languages of the World." (page - 15; "The Bharata Land or Dravidian India" — By D. Savariroyan in 'Tamilian Antiquary' No: 1.)

X. "சமஸ்கிருதம் இக்காலத்திற்கு ஒவ்வாது" — நேருஜி

'சமஸ்கிருதத்திடம் எனக்கு மதிப்பு இருந்தாலும், அதற்காக எல்லோரும் சமஸ்கிருதம் கற்றாக வேண்டும் என்று என்னால் சொல்லமுடியாது. நவீன காலத்திற்கு அம்மொழி பொருந்தாது. இலக்கியங்கள் அனைத்துக்கும் மதிப்புத் தர வேண்டியதுதான். ஆனால் இதிகாசங்களைக் கொண்டே எல்லாக் காலமும் வாழமுடியாது. நவீன உலகில் நாம் வாழ்ந்தாக வேண்டும்.'

—(நேரு–ஹைதராபாத் பேச்சு; "நவசக்தி" 24–7–63)

நம்பிக்கை வளர்ந்த காரணம்

வானநூல் அறிவுடைய எவரும் இன்று விண்வெளியில் வெவ்வேறு தொலைவுகளில், இருந்துகொண்டிருக்கும் மீன்களும், கோள்களும் மண்ணுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் கண்காணித்து வருகின்றன என்ற கருத்தை ஏற்க முன்வர மாட்டார். ஆனால், பழங்காலத்தில் நிலைமை முற்றிலும் வேருக இருந்து வந்தது.

பாபிலோனியர் போன்ற பழங்காலத்து மக்கள் 'வானுலகில்' இருக்கும் கோள்களைக் கடவுளர் என்றே கருதி வந்ததில் வியப்பதற்கொன்றுமில்லை. இன்றும் சோதிடர்கள் இக்கருத்திலேயே கோள்களை ஆண்பால் விகுதி கொடுத்து சுக்கிரன் (வெள்ளிக் கோள்) வந்தான், அங்காரகன் (செவ்வாய்க்கோள்) சென்றான் என்று அழைத்து வருகின்றனர்! கோள்களைக் கடவுளராகக் கொண்ட மக்கள், மனிதனது எண்ணத்தையும். செயலையும் அவை அடக்கி ஆளுகின்றன என்று நம்பத் தொடங்கினர்.

அறிவியலின் நிழல்?

வானத்தில் உலவும் திங்கள் நம் பூமியிலுள்ள கடல் நீரைப் பொங்கியெழச் செய்கிறது; கோள்கள் பல நேர்க் கோட்டில் வந்து நின்று ஒன்றையொன்று மறைத்து மக்கள் உள்ளத்தில் பல்வேறு உணர்ச்சிகளை உண்டாக்குகின்றன. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் கோள்களுக்கும் 'நமக்கும்' உள்ள தொடர்பைத் தானே காட்டுகின்றன!' இத்தகைய எண்ணமே பழங்காலத்தில் மனிதன் உள்ளத்தில் இடம் பெற்று வளர்ந்து மண்ணுலகில் நிகழும் நோய், வறுமை, வெள்ளம், புயல், நில நடுக்கம், வெற்றி; தோல்வி ஆகிய எல்லா

> ### பத்திரிகை உலகம்
>
> "உலகிலுள்ள எல்லா செய்தித்தாள்களும் சேர்ந்து நாள்தோறும் வெளிவரும் மொத்தப் பிரதிகளின் எண்ணிக்கை, ஏறத்தாழ 25 கோடி. சோவியத் ருஷ்யாவின் நாளேடுகளின் தினசரி எண்ணிக்கை மட்டும் 8 கோடி; மொத்தம் 6712 செய்தித்தாள்கள் இங்கு வெளியாகின்றன. ப்ராவ்தா 60 லட்சம்; இஸ்வெஸ்தியா 50 லட்சம். சோவியத் மக்களுடைய 56 மொழிகளில் செய்தித்தாள்கள் வெளிவருகின்றன."
>
> —"சோவியத் நாடு"

நிகழ்ச்சிகளுக்கும் விண்ணிலே தொடர்புகாணத் தூண்டியது. வருவதைத்தடுக்க முடியாவிட்டாலும், முன்கூட்டியே அறிந்து கொள்வதிலே மனிதன் ஆர்வம் காட்டினான். மீனும், கோளும் காட்டிய 'குறிகளை' வைத்துக் கொண்டு தனக்குத் தோன்றியவற்றை எடுத்துக் கூறினான். கூறிய சொற்கள் பின்னர் நிகழ்ந்த செய்திகளுடன் ஒன்றிரண்டிடங்களிலே பொருந்திவிடவே, தான் கண்டுபிடித்த குறுக்குவழியிலே மேலும் மேலும் நம்பிக்கையும் மன நிறைவும் கொண்டான்! சோதிடம் அறிவியலின் நிழல்போல் தோற்றமளித்தது!

பிறந்த நாள் குறிப்பு

ஒருவன் பிறந்த நேரத்தில் பிரிந்தும் கூடியும் காணப்படும் கோள்களின் நிலையைக் குறிப்பிடும் அட்டவணையையே ஓரைக் குறிப்பு (Horoscope-ஜாதகம்) என்றும், பிறந்த நாட் குறிப்பு என்றும், சொல்கிறோம். ஒருவனது எதிர்காலம் பற்றிய செய்தி

களைச் சொல்ல வரும் சோதிடர்கள் இந்த அட்டவணைக் குறிப்பின் அடிப்படையிலேயே தங்கள் கட்டடங்களை எழுப்புகின்றனர்.

இயங்கியபடி இருக்கும் கோள்களின் நிலையை எதனை அடியாகக்கொண்டு குறிப்பிடுவது? நாம் கடிகாரத்தின் முகத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் முள்ளைப் பார்க்கின்றோம். 'இரண்டில்' இருக்கிறது; எட்டில் இருக்கிறது, அல்லது பன்னிரெண்டில் இருக்கிறது என்றெல்லாம் பேசுகிறோம்- ஆனால், இந்த எண்கள் இல்லாவிட்டாலோ முள் இருக்குமிடம் எது என்று குறிப்பிடமுடியாது! இதுபோன்றே, வானத்தில் நகர்ந்துகொண்டிருக்கும் கோள்களின் நிலையைக் குறிப்பிடுவதற்கு வான வட்டத்திலேயே நம் சோதிடர்கள் எண்களை அமைத்துக்கொண்டிருக்கின்றனர்! இத்தகைய எண்களை அமைப்பதற்கு வர்னவட்டத்திலேயே நிலையாகத் (Fixed) தோன்றும் விண்மீன்களையே அவர்கள் துணையாக்க் கொண்டனர்.

ஓரை வட்டம்

வானத்தின் எல்லாப் பகுதிகளிலும் விண்மீன்கள் சிதறிக் கிடக்கின்றன. இருப்பினும், அவை இருக்கும் பகுதிகளிலெல்லாம் கோள்கள் நகர்ந்து செல்வதில்லை! ஞாயிறு, திங்கள், கோள்கள் ஆகிய விண்பொருள்களெல்லாம் தெற்கிலோ, வடக்கிலோ அளவுகடந்து விலகியோடாமல் ஒரு குறிப்பிட்ட வழியிலேயே அடங்கிச் செல்வதாகத் தோன்றுகிறது. இந்த வட்டமான வான வழியையே நாம் ஓரை வட்டம் (Zodiac) அல்லது இராசிவட்டம் என்று சொல்கிறோம். கடிகார வட்டத்தைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்தது போல் இந்த வான வட்டத்தைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவ்வப் பகுதியிலடங்கிய மீன் கூட்டங்கள் மக்கள் உள்ளத்தில் எழுப்பிய கற்பனைகளையொட்டி ஆடு (மேஷம்), காளை (ரிஷபம்), இரட்டை (மிதுனம்), நண்டு (கடகம்), சிங்கம் (சிம்மம்), மங்கை (கன்னி), சீர்கோல் (துலாம்), தேள் (விருச்சிகம்), வில் (தனுசு), சுரு (மகரம்), குடம் (கும்பம்), மீன் (மீனம்) எனப்பெயர் பெற்றிருக்கின்றன! இவற்றை ஓரை, இராசி, வீடு, மடம், என்று பல பெயர்களால் அழைப்பர். குறிப்பிட்ட ஒரு காலத்தில் எந்தெந்தக் கோள் எந்தெந்த வீட்டில் இருக்கிறது என்று எளிதில் கூறிவிடலாம். இந்த வீடு ஒவ்வொன்றும் தனிப்பட்ட இயல்புகளைக் கொண்டிருப்பதாகச் சோதிட நூல் கூறுகிறது. ஆடு முதல் மீன் வரை உள்ள வீடுகள் முறையே ஆயுள், பொருள், உடன்பிறப்பு, பெற்றோர், குழந்தைகள், உடல் நலம், திருமணம், சாவு, சமயம், புகழ், நட்பு, பகை ஆகியவற்றிற்கு உரியனவாகக் கொள்ளப்படுகின்றன.

எழுச்சி—(லக்னம்)

நம் பூமி நாளைக்கொரு முறை சுழன்றபடி இருப்பதால் இந்த வீடுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கீழ்த்திசையில் எழுந்து உயர்ந்து பின்னர் மேற்றிசையில் தாழ்ந்து மறைகின்றன. ஒவ்வொரு வீடும் எழுங்காலத்தில் (Ascending hours) மிகவும் ஆற்றலுடையதாகக் கருதப்படுகிறது. எனவே, குழந்தை பிறக்கும் போது எந்த வீடு எழுச்சியில் இருக்கிறது என்று பார்ப்பதும் சோதிடத்தின் அடிப்படையாக அமைகின்றது. எழுந்துகொண்டிருக்கும் வீட்டை எழுச்சி (லக்

னம்—Ascendant) என்று சொல்கின்றோம். சிங்க எழுச்சியில் பிறந்தவனுக்கும் கன்னி எழுச்சியில் இருக்கும்போது பிறந்தவனுக்கும் வெவ்வேறு எதிர்காலத்தை சோதிடம் கூறும்!

கோள்களின் பண்புகள் ?

கோள்கள் செல்லும் வழி பற்றிய இத்தகைய கருத்துக்களை வகுத்துக்கொண்ட சோதிடர்கள், நகர்வதாகத் தோன்றும் விண்பொருள்கள் பற்றியும் பல கற்பனைகளை உருவாக்கிக்கொண்டுள்ளனர். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது, ஆகியவற்றிற்கும் தனித்தனியான பண்புகளைக் கற்பித்திருக்கின்றனர். சனிக்கோள் பொதுவாக அழிவைத் தருவது என்றும், வியாழன் பெரும்பாலும் நன்மையையே தரக்கூடியது என்றும் சொல்வர். “இக்கோள்களெல்லாம் அவை இருக்கும் வீடுகளுக்கேற்ப ஆற்றல் மிகுந்தோ குறைந்தோ செயல்படும்! மேலும், சில கோள்கள் சில வீடுகளுக்கே உரிமையுடையனவாகவும் பேசப்படுகின்றன. சிங்க வீட்டில் சனி பெற்றிருக்கும் ஆற்றலுக்கும் அதுவே கன்னி வீட்டில் இருக்கும்போது கொண்டிருக்கும் ஆற்றலுக்கும் வேறுபாடு உண்டாம்! இன்னும், இக்கோள்கள் சேர்ந்து தோன்றும் காலத்தில் அவற்றின் கூட்டு ஆற்றல் ஒரு வகையாகவும் பிரிந்து காணப்படும்போது வேறு வகையாகவும் இருக்குமாம்! இத்தகைய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் சோதிடம் எழுந்து நிற்கிறது.

பேருருவம் எடுத்தது !

காலம் செல்லச் செல்ல இந்த நம்பிக்கை அளவுகடந்து பேருருவம் எடுத்தது! உலகத்துப் பொருள்கள் ஒன்றுகூட விலக்குப்பெறாமல் விண்மீன்களோடும் கோள்களோடும் தொடர்பு படுத்தப்பட்டன. விலங்குகள், நிறம், கற்கள், மருந்து ஆகிய எல்லாம் கோள்களின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டன. மனிதனது முடியிலிருந்து அடிவரை அமைந்த உறுப்புகளையும் ஆடு முதல் மீன்வரை யுள்ள பன்னிரண்டு வீடுகளும் பங்கிட்டுக் கொண்டன! காலில் நோய் வந்ததென்றால், காலுக்குரிய ‘மீன் வீடு’ கீழ்வானத்தில் எழும் போதுதான் மருத்துவர் தம் செயலைத் தொடங்குவார்!

வீடுகள்: வெறுங்கற்பனை!

விண்ணகத்தைப் பற்றிய அடிப்படை அறிவுடைய எவரும் கோள்கள் வீடுகளில் தங்குகின்றன என்ற கருத்தினைக் கேட்டு நகைக்கவே செய்வர்! பழங்காலத்தில் விண்மீன்களெல்லாம் ‘வானக் கூரையில்’ பதிக்கப்பட்டுள்ளன என்று நம்பிக்கொண்டிருந்தனர். எனவே, எல்லா மீன்களும் ஒரே தொலைவில் இருப்பதாக அவர்கள் கருதி வந்தனர். அருகருகே தோன்றும் இருமீன்கள் உண்மையிலேயே ஒன்றுக்கொன்று அருகில் இருக்கும் என்று எண்ணினர். இன்றோ ‘வானக் கூரை’ என்பது ஒரு கண்மயக்கு (Illusion) என்பதோடு, ஒன்றுமில்லாத வெறும் வெளி என்பதும் தெரிந்துவிட்டது. மீன்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தொலைவில் இருப்பதை அறிகிறோம்! நாம் காணும் நெருப்பு மீனை (Sirius) விட எழுபது மடங்கு அதிகத்தொலைவில் ரிகல் மீன் (Rigel) இருக்கின்றது! அவ்வாறே ‘சீர்கோல்’ மீன்கள் யாவும் ஒன்றுக்கொன்று தொடர்

பின்றி வெவ்வேறு தொலைவில் சிதறிக் கிடக்கின்றன. நம் பார்வை செல்லும் வழியிலே அவை இடம்பெற்றிருப்பதால் எல்லாம் திரண்டு கூட்டமாக இருப்பதுபோல் தோன்றுகின்றன. வெவ்வேறு இடங்களில் முளைத்திருக்கும் மரங்கள் தொலைவிலிருந்து பார்க்கும் பொழுது கூட்டமாகத் திரண்டு காணப்படுவதை இங்கு நினைத்துக் கொள்ளலாம்!

மீன்கள் அங்கே! கோள்கள் இங்கே!

சற்று அண்மையில் நிற்கும் கம்பம் ஒன்று தொலைவில் இருக்கும் மரங்களைப் பின்னணியாகக் கொண்டு தோன்றுகின்றதே, அப்படித்தான் கோள்கள் வீடுகளில் தங்குகின்ற செய்தியும்! கோள்கள் யாவும் மிகவும் அண்மையில் இருக்கின்றன. மீன்களோ நினைவையும் கடந்த நெடுந்தொலைவில் நிற்கின்றன. வினாடிக்கு 1,86,000 மைல் ஓடும் ஒளி திங்களிலிருந்து நம்மை வந்தடைய ஒன்றேகால் வினாடியே ஆகின்றது; ஆனால், மிகவும் அருகில் இருப்பதாகச் சொல்லப்படும் நெருப்பு மீனிலிருந்து ஒளி நம்மை வந்தடைவதற்கோ ஐந்தாண்டுக் காலம் பிடிக்கின்றது! இந்நிலையில் கோள்கள் எங்ஙனம் மீன்களோடு சென்று தங்க முடியும்?

சோதிடர் அறியாத செய்திகள்!

மீன்களையும் கோள்களையும் வைத்துக்கொண்டு 'சதுரங்கம்' ஆடும் சோதிடர்கள் அறிவியல் கண்ட சில உண்மைகளைப் பற்றி எண்ணிப்பார்ப்பதாகவே தெரியவில்லை! இவர்களது 'கோள்' வரிசையில் உள்ள இராகு, கேது என்பவை கோள்களே அல்ல! அவை பூமி, திங்கள் ஆகியவற்றின் நிழல்களே யாகும்! அவ்வாறே ஞாயிற்றையும் திங்களையும் கோள்கள் என்று சொல்வது நம்மைத் 'தாலமிக் காலத்திற்கு' இழுத்துச் செல்லும் முயற்சியாகும்! திங்கள் நம் பூமியைச் சுற்றிவரும் ஒரு துணைக்கோள்; பூமியின் ஆட்சிக்கு அடங்கிய ஓர் அடிமை! ஆனால், சோதிடர்கள் திங்களுக்குக்கொடுத்த மதிப்பை உண்மையான கோள்களில் ஒன்றாகிய நம் பூமிக்குக் கொடுக்கவில்லை! கோள்களின் பட்டியலில் பூமியை அவர்கள் சேர்க்கவில்லை! பூமியும் ஒரு கோள் என்பது சோதிடம் முளைத்த காலத்தில் எவர்க்கும் தெரியாது! ஞாயிறோ, எல்லாக் கோள்களையும் இழுத்து நிறுத்தி விண்வெளியில் அவை திசை கெட்டுத் தெறித்து ஓடிவிடாமல் பிடித்து வைத்திருக்கும் பெரும்பொருளாகும்! ஆனால், சோதிடர்களோ, திங்கள் பூமியைச் சுற்றுவது போன்றே ஞாயிறும் பூமியைச் சுற்றி வருகிறது என்று இன்றும் தவறாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர்! மேலும், சோதிடர்கள் அறியாத சில கோள்களும் (யுரானஸ்,—நெப்டியூன் —புளூட்டோ) விண்ணில் இயங்கிக் கொண்டிருக்கின்றன! அம்மட்டோ! சோதிடர்கள் அறிந்திருக்கும் செவ்வாய், வியாழன், சனி, போன்ற கோள்களுக்கும் துணைக்கோள்கள் பல இருப்பதை இன்றைய எளிய தொலை நோக்கிகளே காட்டுகின்றன! இவைபற்றியும் சோதிடர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை! எல்லாவற்றினும் மேலாக இன்று சின்னாள் வாழ்க்கை சிற்றறிவினரான மனிதர்கள் விட்ட செயற்கைக் கோள்கள் வேறு, சோதிடர்களின் ஓரை வட்ட எல்லையையும்

மீறி 'சடுகுடு' விளையாடி வருகின்றன! இவற்றின் 'பீப்பீப்' ஒலிக்கு நம் சோதிடர்கள் செவி சாய்ப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

அடிப்படை தகர்ந்தது!

சோதிடம் தோன்றியபோது, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வீடுகளுக்கும் அவற்றின் பெயர்களுக்கும் இருந்த பொருத்தம் இப்பொழுது இல்லாமல் போய்விட்ட ஒரு திடுக்கிடும் செய்தியும் சோதிடர்களை இன்று எதிர் நோக்கி நிற்கிறது! தெற்கில் சென்ற ஞாயிறு திசை மாறித் திரும்பி, பூமியின் நடுக்கோட்டுப் பகுதியில் (Eguatorial Region) வாழும் மக்களின் தலைக்குமேல் மார்ச்சு 23–ஆம் நாளில் வருவதை அறிவோம். அன்று உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இரவும் பகலும் ஒரே அளவாக இருக்கும். அன்றுதான் ஆடுகளுக்கு வேண்டிய இலைகள் தளிர்க்கும் தளிர் காலம் (Spring Season) தொடங்குகிறது. அக்காலத்து மக்கள் ஞாயிறு அன்று இருக்கும் வீட்டையே முதல் வீடாகக்கொண்டதுடன், தங்கள் செல்வமாகிய ஆட்டு மந்தையைக் குறிக்க அதற்கு 'ஆடு' (மேஷம்) என்று பெயரிட்டனர். இப்படியே ஆறாவது வீட்டில் ஞாயிறு வரும்போது (செப்டம்பர் 23) இரவும் பகலும் மீண்டும் சமமாக இருப்பதால் 'சமன் செய்து சீர்தூக்கும்' துலாக்கோலின் பெயரை அதற்கு இட்டனர். இப்படியே ஒவ்வொரு காரணத்திற்காகவும் ஏனைய வீடுகளும் தம் பெயரினைப் பெற்றன. ஆனால் இப்பொழுது தளிர்காலம் தொடங்கும் மார்ச்சு 23–ஆம் நாள் ஞாயிறு 'ஆடு' வீட்டிற்கு வருவதில்லை; மாறாக, மீன் வீட்டை நோக்கிப் பின்னால் பெயர்ந்து போய்விட்டது! அதேபோல் செப்டம்பர் 23–ஆம் நாளிலும் ஞாயிறு சீர்கோல் வீட்டிற்கு வந்து இரவையும் பகலையும் சமன் செய்து வழங்குவதில்லை! அச்செயலை ஞாயிறு இப்பொழுது 'கன்னி' வீட்டிலேயே செய்துவிடுகிறது! இத்தகைய இடமாற்றத்தை சமநிலைப் பெயர்ச்சி (Precession of the equinoxes) என்று வானநூலார் அழைக்கின்றனர். பூமியின் நாட் சுழற்சியால் வானம் சுழல்கின்றது; பூமியின் ஆண்டுச் சுழற்சியினால், ஞாயிறு ஓரை வட்டத்தில் நகர்வதாகத் தெரிகிறது; அவ்வாறே பூமி திங்களின் கவர்ச்சியால் தலையாட்டங் கண்டுவிட்ட பம்பரம்போல் 'தலை சுழன்று' ஆடுவதால் ஏற்படும் விளைவே இந்தச் சமநிலைப் பெயர்ச்சியாகும்! மீண்டும் முன்போல் இருந்த இடத்திற்கே இந்தச் சமநிலைப் புள்ளிகள் வருவதற்கு 25,200 ஆண்டுகள் நம் சோதிடர்கள் காத்திருக்க வேண்டும்! ஆனால், இப்படி அடிப்படையே மாறிவிட்டதை அறியாமலேயே சோதிடர்கள் பலன் சொல்லிக்கொண்டு போகிறார்கள்! 'அடிப்படை மாறினாலும், விளைவு மாறவில்லை' என்று சொல்வது அறிவியல் முறைமைக்கே முரண்பட்ட தொன்றாகும்!

அறிஞர்களின் அறிவுரை

வான நூலறிஞர்கள் 2000 ஆண்டுகட்குப் பின்னர் வரவிருக்கும் மறைவுகளை (eclipses) இப்பொழுதே கணக்கிட்டுக் கூறுகின்றனர். ஆனால், அண்மையில் தோன்றிய இரண்டாம் உலகப்போரை ஒருவாரத்திற்கு

முன்னால்கூட எதிர்பார்த்து நம் சோதிடர்களால் கூறமுடிய வில்லை! நாடாள்வான் என்று சொல்லப்பட்ட இளங்கோ துறவி யானார்! "வானநூல் பயில்" என்று பேசும் பாரதியாரும் "சோதிடம் தனை இகழ்" என்று சொல்கிறார்! பேராசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களோ வானத்து மீன்களைப் பார்த்து,

"வான் காடதனில் வரிதே
சுழலும்
மீன்காள்! வேறும் உளதோ
விளம்பீர்;
மதியிலா மாக்கள் விதியென
நும்மேல்
சுமத்தும் சுமையும் தூற்றும்
சும்மையும்
உம்க்கிடு பெயரும் உருவமும்
தொழிலும்
அமைக்கும் குணமும் அதில்வரு
வாதமும்
யுக்தியும் ஊகமும் பக்தியும்
பகையும்
ஒன்றையும் நீவிர் உணரீர்!"

என்று கேட்டுச் சோதிடத்தை நம்பிக் கருத்திழக்கும் மக்களுக்காகக் கண்ணீர் வடிக்கின்றார்!

"99 பேர் வெறும் தொடர்பு மட்டுமே கொண்டுள்ள சக்திக்கு, ஒரே ஒருவர் நம்பிக்கை கொண்டுள்ள சக்தி சமம் ஆகும்."

—John Stuart Mill.

* * *

"கடவுளை அறிந்துகொள்வதற்கு மிகச் சிறந்த வழி ஒன்றுண்டு; அதுதான் பல சங்கதிகளிடம் அக்கறை கொண்டு அன்பு செலுத்துதல்."

—Vincent van Gogh.

* * *

"எந்தத் துறையிலும் எந்த முயற்சியிலும் முழு நம்பிக்கை வைப்பதுதான் மிகச் சிறந்த மூலதனம். இது இல்லையேல் எதையுமே சாதிக்க முடியாது."

—Albert Schweitzer.

* * *

"மக்கள் தங்கள் சொந்தக் குறைகளை உணர்வதில்லை என்று குற்றஞ் சுமத்தப்படுகிறது. ஆனால் மக்கள் தங்கள் சொந்த வலிமையை உணர்வதில்லை என்பதுதான் உண்மை. மக்கள் மண்ணைப் போன்றவர்கள்; தங்களிடம் எங்கே தங்கம் தேங்கிக் கிடக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமலிருக்கின்றனர்."

—Jonathan Swift.

உங்களுக்கு ஊக்கம் பிறக்க

[இங்குள்ள பொன்மொழிகளில் சிலவேனும் உங்களுக்குப் பொருந்தலாம். மிகப் பொருந்தக் கூடிய ஒன்றைப் பொறுக்கிக் கொள்ளுங்கள். அதைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்; மனப்பாடஞ் செய்யுங்கள்; பல தடவை நினைவுபடுத்திப் பாருங்கள்.—பிறகு நடத்தையில் காட்டுங்கள்.

மற்றப் பொன் மொழிகளை மற்ற நாட்களில் இப்படியே பயன் படுத்துங்கள்.

இவை பல பேரறிஞர்களால் கூறப்பட்டவை; சலித்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் இரண்டு — மூன்று வரிகள் உங்கள் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கலாம்.]

''நாம் அஞ்ச வேண்டியது ஒன்றே ஒன்றுதான்; அதுதான் அச்சம்''
—(ரூஸ்வெல்ட்)

* * *

''நமது சந்தேகங்களே நம் துரோகிகள். நாம் முயற்சி செய்து பெற வேண்டிய நன்மைகளை அச்சத்தின் மூலம் இவை தடுத்து விடுகின்றன.''
—(ஷேக்ஸ்பியர்)

* * *

''ஆம்''; "இல்லை". இவைகளே மிகப் பழங்காலத்து மிகச் சிறிய சொற்கள். ஆனால் இவைகளுக்குத்தான் மிகச் சிறந்த சிந்தனை வேண்டும்''
—(பித்தகோரஸ்)

* * *

''காலை பத்து மணி வரையில் இன்பமாக இருங்கள்; மீதியுள்ள நாள் தன்னைத்தானே கவனித்துக்கொள்ளும்.''
—(எல்பர்ட் ஹப்பர்டு)

* * *

"சிந்தனை என்பது காதல் போல; மரணம் போல. நம்மில் ஒவ்வொருவரும் தனித்தனியே செய்து கொள்ள வேண்டிய சங்கதி.''
—(Josiah Royce)

* * *

"கோபம் வரும்போது பேசுவதற்கு முன்பு பத்துவரை எண்ணிக்கொள்; மிகுந்த கோபம் வந்தால் நூறுவரையில் எண்ணிவிடு.''
—(Thomas Jefferson)

* * *

''இடையூறுகளை எதிர்த்து நின்று சமாளிப்பதுதான் வாழ்க்கையிலுள்ள இன்பம்; ஒருப்படியிலிருந்து மற்றொரு படிக்கு ஏறுவதே இன்பம்; புது ஆசைகளை உருவாக்கிக் கொண்டு அவைகளைப் பெறுவதே இன்பம்.''
—(சாமுவல் ஜான்சன்)

பேனா மன்னர்கள்-2

நாவல் மன்னன் சார்ல்ஸ் டிக்கன்ஸ்

[காதம்பரி]

[லண்டன் வாழ்க்கை நாவலின் தந்தை என்று வழங்கப் படுபவர் சார்லஸ் டிக்கன்ஸ். பாமரமக்களின் அவலச் சுவையையும் நகைச்சுவையையும் இன்னவை என்று முதன்முதல் கண்டறிந்த இங்கிலீஷ் எழுத்தாளர். நகைச்சுவை தரும் பகுதிகளைப் படைப்பதில் ஷேக்ஸ்பியருக்கு ஈடானவர் என்று கருதப்படுகிறார். மிகக் குறைந்த படிப்புள்ளவர் மிகச் சிறந்த நாவலாசிரியராக விளங்கிய புதுமையின் சுருக்கம், இக்கட்டுரை.]

உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர்களில் தலைசிறந்தவர் சார்லஸ் டிக்கன்ஸ். 1812 ம் ஆண்டு பிப்ரவரி 7 ந் தேதியன்று இங்கிலாந்து நாட்டில் போர்ட்ஸீ என்ற சிற்றூரில் பிறந்தார். துறைமுகங்களிலேயே அவர் இளம் பருவம் கழிந்தது. அவர் தந்தை ஜான் டிக்கன்ஸ், கடற்படையின் சம்பளப் பிரிவில் ஊழியனாக இருந்தார். வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டி வராமல் திண்டாடும் பல்லாயிரக் கணக்கான நடுத்தரக் குடும்பங்களில் அவர் குடும்பம் ஒன்று. எட்டுப்பேர் கொண்ட அந்தக் குடும்பத்தில் சார்லஸ் டிக்கன்ஸ் இரண்டாவது பிள்ளை. குடும்பம் எப்போதும் வறுமையுடன் போராட்டந்தான்.

ஜான் டிக்கன்ஸ் தன்னுடைய அன்புக்குரிய சார்லசுக்கு சுவையுடன் பல கதைகள் சொல்வது வழக்கம். அவன் தன் வீட்டுப் பரணில் ஏறித் துழாவி, தூசி ப்டிந்து கிடந்த பழங்கால நூல்கள் சிலவற்றைக் கண்டுபிடித்தான். ராபின்சன் குரூஸோ, டாம் ஜோன்ஸ், டான் குவிக்சாட் முதலிய கதைகள் அவை: அவற்றையும், ஆயிரத்தொரு இரவுக் கதைகளையும் அவன் தன்னுடைய பத்து வயதிற்குள்ளேயே படித்துத் தீர்த்தான்.

பொறுப்பற்ற வாழ்க்கை நடத்திய தந்தை ஜான் டிக்கன்ஸ் கடன்காரர்களுக்கு இரையாகிச் சிறைவாழ்க்கை நடத்த நேர்ந்தது. குடும்பம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுமா? சார்லஸ் டிக்கன்ஸ், பூட்-பாலிஷ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் கூலி வேலை செய்யச் சம்மதித்தான். வாரத்திற்கு ஆறு ஷில்லிங் சம்பளம் வந்தது. இருந்தாலும், பள்ளியில் படிக்க வேண்டிய அருமையான நேரம் வீணாகிறதே என்று நம் இளம் மேதை அழுதான். தன்னுடைய முப்பத்தேழாம் வயதில் அவன் தன் சுய வரலாற்றை ''டேவிட் காப்பர் ஃபீல்ட்'' என்ற பெயரில் எழுதினான். அவனுடைய துயரம்

தோய்ந்த இளம் பருவ நிகழ்ச்சிகளை அதில் காணலாம்.

தந்தை, மார்ஷல் சீ சிறையில் நடத்திய வாழ்க்கையை அவன் நாள்தோறும் கண்டு வெதும்பினான். அக்கோரக் காட்சிகளை அவனால் மறக்க முடியவில்லை. ''லிட்டில் டோரிட்'' என்ற நாவலில் அவன் அக்காட்சிகளுக்கு எழுத்துருவம் தந்தான்.

ஜான் டிக்கன்ஸ் சிறையிலிருந்து விடுதலையானதும், டிக்கன்சுக்கும் பூட்பாலிஷ் தொழிற்சாலையிலிருந்து விடுதலை கிடைத்தது. வெல்லிங்டன் ஹவுஸ் அகாடமி என்ற பள்ளியில் மாணவனாகச் சேர்ந்தான். ஆனால் அவன் நிழல் அவனைத் தொடர்ந்து வந்தது. மிஸ்டர் ஜோன்ஸ் என்ற தலைமை ஆசிரியர் தன்னுடைய கைப் பிரம்பினால் முரட்டுத் தனமாக அவனையும் மற்ற மாணவர்களையும் அடித்துத் துன்புறுத்தினார். பதினான்கு வயது வரையில் அங்கே சார்லஸ் வாழ்ந்தான். பள்ளிக் கூட நினைவுகளை அவன் 'டேவிட் காப்பர் ஃபீல்ட், ''நிக்கோலாஸ் நிக்கிள்பி,'' ''டாம்பே அண்ட் சன்'' முதலிய நூல்களில் விளக்கியிருக்கிறான்.

வேலை செய்து வயிறு வளர்க்க வேண்டிய நெருக்கடி மறுபடியும் வந்துவிட்டது பிளாக்மூர் என்ற வழக்கறிஞரிடம் எழுத்தர் (Clerk) வேலை; வாரத்திற்குப் பதினைந்து ஷில்லிங் சம்பளம். பலவிதமான மனிதர்களுடன் பேசவும், பழகவும் அவனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. லண்டன் மாநகரின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் போய் வர நேரிட்டதால், பல் வேறு வகை மக்களின் வாழ்க்கை முறைகளை அவன் கவனிக்க நேரிட்டது. அது அவனுக்கு நற்பயனளித்தது.

விமானப் பணிப்பெண்

இவ்வேலைக்கு விண்ணப்பிப்பவர் 19 வயது முதல் 25 வயதுக்குள் இருக்க வேண்டும். மெட்ரிக் அல்லது சீனியர் கேம்ப்ரிட்ஜ் ஆவது படித்திருக்க வேண்டும். நல்ல உடற்கட்டு, அழகான தோற்றம், அருமையான குரல், சரளமான பேச்சுத் திறன், சிறந்த பார்வை—ஆகிய தகுதிகளை உடையவராயிருக்க வேண்டும் மணமாகாதவராயும் இருத்தல் வேண்டும். முதல் சிகிச்சை அறிவும், பிற நாட்டு மொழிகளில் ஒன்றிலாவது நல்ல தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

இனிமையான புன்சிரிப்புடன் தொண்டு செய்யும் பண்பு வேண்டும்.

இப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவர் சாண்ட்டா க்ரூஸ் அகில இந்திய விமான நிலையத்தில் (பம்பாய்) இரண்டு மாதத்துக்குப் பயிற்சி பெறுவார்.

இவர்கள் விமானப் பயணிகளின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து, குறிப்பறிந்து உதவுவர். விமானத்தின் எல்லாப் பகுதிகளையும் இவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். நாட்டின் பூகோள அமைப்பு முதல், குழந்தைகளைச் சீராட்டுதல் வரையில்—பல துறைகளிலும் இவர்களுக்கு அறிவு உண்டு.

—Eve's Weekly.

காதலின் தோல்வி

அதன் பின் சுருக்கெழுத்துக் கற்றுக் கொண்டு பத்திரிகை நிருபரானார். 'ட்ரூசன்' 'மிர்ரர் ஆஃப் பார்லிமெண்ட்' ஆகியஏடு

களின் அரசியல் நிருபராகப் பணி யாற்றினர். தன்னுடைய பதி னெட்டாம் வயதில் அவர் மேரியா பீட்நெல் என்ற செல்வ ரின் மகளைக் கண்டு காதல் கொண்டார். ஆனல் அவள் எங்கே? அவர் எங்கே? அவள் லட்சாதிபதியின் மகள். டிக் கன்சோ பரம ஏழை. காதலுக்குக் கண்ணில்லையல்லவா?

மேற்படிப்பிற்காக அயல்நாடு சென்ற மேரியா, திரும்பி வந்த தும் மனம் மாறினள். முன்பெல் லாம் சிரிக்கச் சிரிக்க அவருடன் பேசுபவள், இப்போது முகத் தைத் திருப்பிக் கொள்ளத் தொடங்கினள். டிக்கன்ஸ் விடா முயற்சி செய்தும் பயனில்லை. காதலிப்பதே அசட்டுத்தனம்; பணக்காரப்பெண்களைக் காதலிப் பது அசட்டுத்தனத்தின் எல்லைக் கோடு! டிக்கன்சின் காதலி, ஹென்றி விண்டர் என்ற வணி கரை மணந்துகொண்டு விட் டாள். அந்த ஏமாற்றம் அவர் இதயத்தை உலுக்கிவிட்டது.

''மார்னிங் கிராணிகிள்'' என்ற ஏட்டின் நிருபராக அவர் எல்லா ஊர்களையும் சுற்றினர். இப்போது கைநிறையச் சம்ப ளம். வாரம் ஐந்து "கினி". பணக் கவலை மறைந்ததும், கற்பனைக் குதிரை சிறகடித்துப் பறந்தது. தன்னுடைய இருபத்திரண் டாம் வயதில் அவர் எழுதின சிறுகதையொன்று ''மந்த்லி மேகசின்'' என்ற இதழில் ''போஸ்'' என்ற புனைபெயரில் வெளியானது. அதுமுதல் அவர் வாழ்க்கை மாறியது.

புகழ் மணம்

'போஸ்' எழுதிய கட்டுரைகள் முதல் தொகுதி 'விற்பனையா யிற்று. புகழும் வருவாயும் பெரு கின. இதற்குப் பிறகு ''பிக்விக் பேப்பர்ஸ்'' என்ற நகைச்சுவைத் தொடர்கதையை எழுதினர். சீமர் என்ற ஓவியரும் ''ஹாப் லாட் பிரவுன்'' என்ற இன்னெ ருவரும் அதற்கு ஓவியங்கள் வரைந்தார்கள். இருபத்தைந்து வயதுக்குள் இங்கிலாந்து முழு தும் டிக்கன்சின் புகழ் பரவியது.

'மார்னிங் கிரானிக்கிள்' இதழின் உரிமையாளர்களில் ஒருவரான ''ஜியார்ஜ் ஹோகார்த்'' தின் மூத்த மகளான காதரீன் என்ப வளை அவர் மணந்தார். 2-4-1836 அன்று திருமணம். காதரீன் மிக மிக மந்தம். மேதை டிக்கன் சுக்கும் அவளுக்கும் சரிப்பட வில்லை. காதரீனின் உடன்பிறந்த தங்கை மேரி அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தாள். டிக்கன்ஸ் அவளிடம் அன்பு கொண்டார். ஓராண்டு பழக்கத் திற்குள்ளே இருவரும் இணை பிரியாதவர்கள் ஆனர்கள். ஆனல் மேரி திடீரென நோய் வாய்ப்பட்டு இறந்தாள். அள வற்ற துயரம் நெஞ்சை அழுத்த டிக்கன்ஸ் மனமுடைந்து போனர். ஒரு மாதகாலம் ஒன்றுமே எழுதவில்லை அவர். தொடர் கதை பாதியில் நின்றது. மேரியை அவரால் மறக்கவே முடியவில்லை. அவளை அவர் தம்மு டைய இலட்சியப் பெண்ணுகக் கருதி மனத்தினுள் வழிபட்டார். அவளுடைய வடிவழகை அவர் ''ஓல்டு க்யூரியாஸிடி ஷாப்'' என்றகதையில் ''லிட்டில் நெல்'' என்ற பாத்திர வாயிலாக வரு ணிக்கிருர். ''லிட்டில் டோரிட்'' என்ற கதையில் 'அமி' என்ற பாத்திரவாயிலாக விளக்குகிருர். 'டேவிட் காப்பர் ஃபீல்ட்' கதை யில் 'ஏஜின்ஸ்' என்ற பாத்திர மும் அவளே!

நாவல்கள்

மேரி என்ற முதல் மைத்துனி இறந்ததும் ஜார்ஜின என்ற

இரண்டாவது மைத்துனி வந்தாள். டிக்கன்சின் கற்பனைத் திறமையில் மனதைப் பறி கொடுத்த அவள் அவர் குடும்பத்தின் முக்கிய உறுப்பினராகி விட்டாள். அக்காளின் குழந்தைகள் மளமளவென்று பெருகிக்கொண்டிருந்தன. அவள்தான் குழந்தைகளுக்குத் தாய்போல் இருந்து வந்தாள்.

இந்தச் சமயத்தில் அவர் ஆலிவர் டுவிஸ்ட் என்ற அனாதைச் சிறுவனின் கதையை எழுதினார். 'பிக்விக் பேப்பர்ஸ்'முழுவதும் நகைச்சுவை. ஆலிவர் கதையோ ஒரே சோகமயம்.எத்தனையோ பேர்கள் அதைப் படித்துவிட்டு அழுதார்கள். அதன்பின் ''நிக்கோலாஸ் நிக்கிள்பி" என்ற நாவல்வெளிவரத்தொடங்கியது. அவர் வழக்கமாக காலை வேளையில் தான் எழுதுவது. அவர் எழுதியதை வாங்கிச் செல்வதற்காக வென்று பத்திரிகை அலுவலக ஆள் கால் வலிக்கக் காத்திருப்பான். பிற்பகலிலும் மாலை வேளைகளிலும் அவர் கால்நடையாக நெடுந்தொலைவு நடந்துவிட்டு வருவார். லண்டன் நகரத்தின் வீதிகளில் அவர் அடிக்கடி உலாவுவார். அவரது கற்பனை உரம் பெற இந்த ஊர்சுற்றும் பழக்கம் தூண்டுதலாக இருந்தது.

''பார்ன்பிரட்ஜ்'' என்ற கதை 1880-ம் ஆண்டில் எழுதப்பட்டது. இதில் ஆழ்ந்த கருத்துக்களும், நகைச்சுவையும் விரவி வருகின்றன. தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை அவர் சுவையாக எழுதி படிப்போரைக் கவர்வது வழக்கம். மேரியின் மரணத்தை அவர் தன் கதாநாயகிகளின் மரணமாக வருணித்தார்.

அமெரிக்காவில்...

"ஓல்டு கியூரியாசிடி ஷாப்'' என்ற கதையை எழுதும் போது அவர் புகழ் அமெரிக்காவிலும் பரவியது. தொடர் கதையான அதைப் படிக்க எண்ணற்ற பேர்கள் காத்துக் கிடப்பார்கள். இங்கிலாந்திலிருந்து வரும் கப்பல் ஒன்றில் இக் கதையின் பகுதிகள் அமெரிக்காவுக்கு வந்தன. ஆயிரக்கணக்கானவர் துறைமுகத்தில் அதை எதிர் நோக்கி நின்று கொண்டிருந்தனர். அவர் புகழ் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பரவியதும், மக்கள் அவரை நேரில் பார்க்க விரும்பினார்கள். அமெரிக்க மக்களின் அன்பு மிக்க அழைப்பை ஏற்றுக் கொண்டு டிக்கன்ஸ் 1842-ம் ஆண்டில் அமெரிக்காவுக்குச் சென்றார். மிகச்சிறந்த முறையில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. என்ன காரணத்தாலோ அமெரிக்க நாகரீகம் அவருக்குப் பிடிக்கவில்லை; இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் அமெரிக்கப் பயணக் குறிப்புகளை எழுதினார். அதில் அவர் இங்கிலாந்தைப்புகழ்ந்தும், அமெரிக்கரின்குறைபாடுகளைப் பெரிதுபடுத்தியும் எழுதியிருந்தார். அதனால் ஏற்பட்ட சல சலப்பினால் அவர் பிறகு எழுதிய கதைகளின் விற்பனைக்கு கேடு நேரிட்டது. ''மார்ட்டின் சசில்விட்" என்ற கதை வெளிப்பகட்டு சுயநலம் முதலியவற்றை இரக்கமின்றித் தாக்கியது.மக்கள் அதை விரும்ப வில்லை. 1843-ம் ஆண்டில் ''கிருஸ்துமஸ் கரோல்'' என்ற கதைத் தொகுதி அவருக்கு மறுபடியும் புகழைக் கொண்டு வந்தது.

அவர் ஐரோப்பாக் கண்டத்துக்கு குடும்பத்துடன் பய

ணம் போனார். ஃபிரான்ஸ், இத்தாலி நாடுகளுக்கும் சென்றார். டாம்பே அண்ட் சன் என்ற கதைக்கும் "டேல் ஆஃப் டூ சிடீஸ்" என்ற நாவலுக்கும் அவர் மனதில் கற்பனை உருவாயிற்று. கதையில் வரக்கூடிய வரலாற்று முக்கியத்துவமுள்ள ஊர்களையும் கட்டடங்களையும் அவர் ஃபிரான்ஸ் நாட்டில் பார்வையிட்டார்

லண்டன் திரும்பி வந்ததும் "டாம்பே அண்டு சன்" கதையை எழுதினார்.

அதன் வெற்றி டிக்கன்சை வாழ்க்கையின் உச்சத்திற்கே கொண்டு சென்றது. அதன் பின் பென் ஜான்சன் என்ற அறிஞர் எழுதிய "எவ்வரிமேன் இன் ஹிஸ் ஹ்யூமர்" (Every man in his humour) என்ற கதையை நாடகமாக்கி அதை மேடையேற்றினார். அதில் வெற்றி அடைந்தாலும், சில தொல்லைகள் உண்டாயின. உடல் நலம் கெட்டது. கண்பார்வை குன்றியது. தலைவலி பிடித்தாட்டியது. இவற்றைப் பொருட்படுத்தாமல் "டெய்லி நியூஸ்" என்ற செய்தித் தாளின் ஆசிரியர் பதவியை ஏற்றுஉழைத்தார். அதில் அவர் திறமை வெளியாகவில்லை. "குடும்பப்பேச்சு" என்ற வார இதழைத் துவங்கினார். அது எட்டாண்டு காலம் வெளி வந்தது.

இத்தனைக்கும் பிறகு தன் வாழ்வையே கதையாக்கினார். டேவிட் காப்பர் ஃபீல்ட் அவருடைய இரத்தக்கண்ணீரை மையாகக் கொண்டு எழுதப்பட்ட காவியம். அவருடைய தந்தை ஜான் டிக்கன்ஸ்; மிக்காபர் என்ற பாத்திரமாக வருகிறார். இந் நாவலில் அவர் உள்ளத்தில் குடிகொண்ட மேரியா பீட்நெல் என்ற பணக்காரப் பெண் டோரா ஸ்பென்லோ என்ற பெயரில் வருகிறாள்.

டேவிட் காப்பர் ஃபீல்டைப் படித்ததும், மேரியா பீட்நெல் விண்டர் மனம் உருகினாள். அவளுக்கு நாற்பது வயதுக்குமேல் ஆகிவிட்டது. முன்பு பூங்கொடிபோல் இளம் பருவத்தில் துவண்டு நெளிந்தவள் இப்போது பூதம் போலப் பருத்துப் போய்விட்டாள். சார்லஸ் டிக்கன்சுக்கு அவள் அன்புடன் கடிதம் எழுதினாள். தன் இளம் பருவ நட்பைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவதாகஎழுதினாள். ஆனால் டிக்கன்ஸ் சட்டை செய்யவில்லை.

அவர் கனவு வாழ்க்கைக்கும், அவரது மனைவியின் மந்தப் போக்குக்கும் ஒத்துவரவில்லை. ஆகவே 1858 ம் ஆண்டில் இருவரும் மணவிலக்குச் செய்து கொண்டனர்.

"டேல் ஆஃப் டூ சிடீஸ்" "கிரேட் எக்ஸ்பெக்டேஷன்ஸ்" முதலிய நாவல்கள் பின்னர் அவரால் எழுதப்பட்டன. இரண்டாம் முறையாக அமெரிக்காவுக்குச் சென்று புகழ்க்கொடி நாட்டிவிட்டுத் திரும்பினார். 8-6-1870 அன்று தம்முடைய அம்பத்தெட்டாம் வயதில், எழுதிக் கொண்டிருந்த போதே டிக்கன்ஸ் மரணமடைந்தார்.

அவருடைய உடல்,வெஸ்ட்மினிஸ்டர் கல்லறையில் பெருங்கவிஞர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் புதைக்கப்பட்டது. கதைச்சக்ரவர்த்தி சார்லஸ் டிக்கன்ஸ் அழியாப்புகழ் பெற்றார். கதாசிரியர்கள் காதல் கதைகளை எழுதித் தள்ளி மக்களை மகிழ்விக்கலாமே தவிர, தாமே காதல் சிக்கலில் இறங்கக்கூடாது என்பதற்கு அவர் வாழ்க்கை சான்று தருகிறது. அற்புதமான நகைச்சுவைக்

(அடுத்த பக்கம் பார்க்க)

கடிதங்கள்

குழந்தைக் கல்வி

தங்களின் "குத்தூசி"யைத் தொடர்ந்து படித்து வருபவன். குத்தூசியில் "குழந்தைக்குப் புத்தகம்" என்ற தலைப்பில் வந்த கட்டுரைகளைப் படித்ததின் பயனாக நான் என் கல்லூரியில் நடந்த கட்டுரைப் போட்டியில் 'குழந்தைக் கல்வி' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு முதற் பரிசைப் பெற்றிருக்கிறேன். இதற்காகத் தங்களுக்கும், கட்டுரையாளர் உயர்திரு K. S. மகாதேவன், Bsc. M.A. அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன் என்பதை இதன் மூலம் அறிவித்து மகிழ்கிறேன்.

கலியபெருமாள்ரத்தினம்
(குடந்தை)

''பகுத்தறிவு''

(ஊசி 2; குத்து 5, பார்க்க.)

பகுத்தறிவு நாத்திகர்களின் தனிச் சொத்தா? இல்லவே இல்லை. இதுவரையில் எந்த நாத்திகனும் இப்படிச் சொன்னது கிடையாது. வானொலி, 'விவசாயிகளுக்கான வானிலை அறிக்கை' என்று தினமும் ஒலி பரப்புகிறது அல்லவா? உடனே, ''வானிலை அறிக்கை விவசாயியின் தனிச் சொத்தா? வானம் எனக்கும் தான் சொந்தமானது; நானும் தான் வானோக்கி வாழ்கிறேன்" என்கிருன், கோவிலினுள் வேலை பார்க்கும் ஒருபூசாரி. இவனுக்கு நாம் என்ன மறுப்புச் சொல்ல முடியும்?

ஆத்திகனும் பகுத்தறிவாளனாக இருக்கலாம். ஒருவன், ''வானோக்கி வாழ்பவன்தான் விவசாயியா? பக்கத்தில் ஆறு, குளம் இருக்கிறது. அணைக்கட்டு இருக்கிறது. இவற்றை நோக்கி வாழ்ந்தால் போதாதா? இவற்றிலும் தண்ணீர்தானே கிடைக்கிறது? நான் இவற்றையே நோக்கி வாழ்கிறேன். இதைத் தவிர நான் மழைக் காலம் பற்றிப் படித்ததில்லை; படிக்க நினைத்ததும் இல்லை. வானிலை அறிக்கை பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது; தெரிய வாய்ப்பு இல்லை. இவை பற்றி எனக்கு ஒரு அனுபவமும் இல்லை. நான் விவசாயி இல்லையா?" என்று கேட்கிருன். இவனுக்கு நாம் என்ன மறுப்புக்கூற முடியும்?

இந்த நில உலகில் பிறந்த எல்லா மக்களும் அறிவு, பகுத்தறிவு உடையவர்களே. ஆனல் பலரும் தங்கள் சொந்த அறிவைப் பூட்டி வைத்து விடுகிருர்கள். அல்லது அமுக்கி விடுகிருர்கள். இரவல் புத்தியை, அதாவது இன்னொருவர் பகுத்தறிந்த வேதம், புராணம், சாத்திரம், பழக்க வழக்கம் முதலியவற்றைச் சார்ந்து வாழ்கிருர்கள்; பகுத்தறிந்து வாழவில்லை.

இனி பகுத்தறிவில்தான் நம்பிக்கை, பயம், பணிவு, ஆசை முதலிய உணர்ச்சிகள் பிறக்கின்றன. பகுத்தறிவு இல்லையேல் அவ் உணர்ச்சிகள் வீண். (வானம் பொய்த்தால் மற்ற நீர் நிலைகள் பொய்த்து விடுகின்றன அல்லவா? வள்ளுவர் சொல்வது

(முன் பக்கத் தொடர்ச்சி)

கதைகளை எழுதும்போது கூட அவர் உள்ளத்தில் அளவிட முடியாத துயரம் பொங்கித் ததும்பியது. அவர் சொந்த வாழ்வு ஒரு சோகக் காவியம். அவர் புற வாழ்வு இன்பச் சோலை.

போல் கடல்கூட வற்றிவிடும்.) பகுத்தறிவை மறந்து இந்த உணர்ச்சிகளைச் சார்ந்து வாழ்பவன் ஏமாந்து விடுகிறான். பகுத்தறிவைக் கைவிட்டு, மற்ற உணர்ச்சிகளுக்கு கட்டுப்படுகிறவன் உண்மைப் பகுத்தறிவு வாதியல்ல இவனை வாழ்க்கை கைவிட்டு விடுகிறது.

பூமி தட்டையானது என்று வேத புத்தகம் பறை சாற்றுகிறது. விஞ்ஞானம் இதை உடைக்கிறது. பகுத்தறிவு தலையெடுக்கிறது. பலன்; பூமி உருண்டை, என்ற உண்மை வெளியாகிறது. மதத் தலைவர் இதை மறுக்கிறார். கலிலியோவை கண்டிக்கிறார். காரணம் என்ன? மதவாதிக்குப் பகுத்தறிய முடியவில்லை; வாய்ப்பில்லை என்று சொல்ல முடியாது. ஆனாலும் பகுத்தறிவு பலியாகி விடுகிறது.

இதற்கு ஊசி 1; குத்து 2-இதழில் ஆசிரியர் 'மதப் பண்டிகை' என்ற கட்டுரையில் விளக்குகிறார்.

மதச் சார்பு கொண்ட இன்றைய அரசாங்கத்தைப் பயனுள்ள வேலைக்குத் திருப்பி விடுவதுதானே யோக்கியமான ஒரு பத்திரிகையின் வேலை? இதைத்தான் குத்தூசி செய்து கொண்டிருக்கிறது.

இன்றைய அரசாங்கம் எப்படி மதத்தைச் சார்ந்து போகிறது, எந்தெந்த முறைகளில் மதத்திற்குத் துணை நிற்கிறது;—என்பதை நமது ஆசிரியர் அடிக்கடி சுட்டிக் காட்டத் தவறுவதில்லை. குத்தூசி படிப்பவருக்கு இது விளங்கும். 'வானொலிப் பெட்டிக்கு' மதம் பிடிக்கிறது. இதைத் தடுக்க (ஊசி 1, குத்து 8—இதழில்) ஆசிரியர் அவர்கள் 'மதம் பிடித்த வானொலி' என்ற தலைப்பிட்டு எழுதி, இந்திய மக்கள்

நேபாள ஆட்சியில்...

"உலகத்தில் இன்றுள்ள ஒரே ஒரு இந்து மத ஆட்சி நேபாளம். அண்மைக் காலம் வரையில் இங்கு கிரிமினல் சட்டம் கூட சாஸ்திரத்தின் அடிப்படையில்தான் இருந்து வந்தது. சமுதாய, மத, கிரிமினல்-குற்றங்கள் யாவும் ஒரே மாதிரியாகத் தான் தண்டிக்கப்பட்டன. பிராமணர்களுக்கு மரண தண்டனை கிடையாது. பசுவைக் கொல்பவர்களுக்கு மரண தண்டனை உண்டு. "இந்தியாவில் சாதி ஒழிந்து வருகிறது; ஆனால் இங்கே கடுமையாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது. பிராமணரின் உயிர் மட்டும் பல்வகைகளிலும் காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்தியாவில் சாஸ்திரங்கள் பேச்சளவில் மட்டுந்தான்; ஆனால் இங்கே நடைமுறையில் சட்டமாக்கப்பட்டுள்ளன", என்று நூறாண்டுகட்கு முன்பு நேபாளத் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதி கூறியுள்ளார்."

—("இந்தியா மதச்சார்பற்ற நாடு" ஸ்மித்; பக்கம் 299)

யாவருக்கும் வானொலியில் சம உரிமை பெற மாபெரும் கிளர்ச்சி தேவை என்று அழைப்பு விடுகிறார். இதைப்போல எண்ணிறந்த கிளர்ச்சிகள் தேவையல்லவா? இவற்றிற்கு நாம் தயாராவதை விட்டு, இம்முயற்சிகளுக்குத் தடை போட்டால் நாம் மதச் சார்பற்ற அரசை சந்திக்க முடியாது.

இனி, "தனிப்பட்ட அரசாங்க ஊழியர் செய்யும் குற்றத்திற்கு அரசாங்கம் பொறுப்பாகுமா; இதை அரசாங்கத் திட்டம் கேட்கலாமா?" என்று கேட்கிறார், கடிதம் எழுதிய நண்

பர். எத்தனையோ அரசாங்க ஊழியர் தவறு செய்து அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிருர்கள். அதைப்போல் இந்த 'மதச் சார்பு' குற்றத்தையும் கவனிக்கலாமே! கண்டிக்கலாமே! தண்டிக்கலாமே! ஏன் செய்யவில்லை?

''கடவுள் உண்டா? இல்லையா? என்ற வாதம் முடிவற்றது" என்கிருர். எந்தக் கடவுள்? இயற்கைக்கு அப்பாலுள்ள, மனிதனுல் காணுத, காண முடியாத, அறியாத, அறிய முடியாத, உணராத, உணர முடியாத—ஒரு கடவுள் உண்டா; இல்லையா, என்ற பிரச்னைதான் விவாதத்திற்குரியது, முடிவற்றது. இந்த பிரச்னையைப் பற்றித்தான் கவலைப்படாதே என்ருர் புத்தர். "வீணுன முயற்சி" என்ருர். ஆனுல் இங்கே கற்பித்து வைத்திருக்கின்ற, காட்டப்படுகின்ற, வணங்கப்படுகின்ற, வாழ்த்தப்படுகின்ற, கடவுள்கள் பொய், கற்பனை என்பது புத்தர் காலத்திற்கு முன்பே முடிவாகிவிட்டது. இவற்றை ஒவ்வொன்ருகப் பெயர்த்து எறிய வேண்டும். இதுதான் மனித குலத்துக்கு புத்தர் இட்டுச் சென்ற பெரிய கடமை.

இனி, ''இப்படிப்பட்ட கடவுள்கள் இருப்பதால் என்ன நஷ்டம்" என்று கேட்கிருர். ஆம்! பெரிய இழப்பு. கோடிக்கணக்கில் பணச் செலவு. ஈடுகட்ட முடியாத தோல்விகள், ஏமாற்றங்கள். நேரக் கொலை! 'உடன்கட்டை'யை ஏற்படுத்தியதும் ஒரு கடவுள்தானே! சாதியைக் கற்பித்ததும் ஒரு கடவுள்தானே! 'நரபலி' கேட்டதும் ஒரு கடவுள்தானே! இல்லையா? வாழ்க்கையை பொய் என்றதும் மாயை என்றதும் ஒரு கடவுள்தானே? கணக்கற்ற கடவுள்களை வைத்துக்கொண்டு எவ்வளவுதான் உழைத்தாலும் எல்லாம் வீண்! வீண்! வீண்! —வி. தேவதாசன், (மிடாலக்காடு)

[குறிப்பு: இன்னும் பல மறுப்புக் கடிதங்கள் வந்துள்ளன.
-ஆசிரியர்]

தமிழன்-அன்றும் இன்றும்

தொடர்கதை ஒன்று சேர்க்கப்படவேண்டும் என்று சில நண்பர்கள் குறிப்பிட்டுத் தங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்கள். இது 'குத்தூசிக்குத் தேவையற்றது.

நிற்க. ஃபிப்ரவரி 1964 இதழில் கபிலரின் அகவல் நெஞ்சை ஈர்க்கிறது. ''200 கோடி ஆக்கிடுவேன்" என்ற கட்டுரையும், ஆங்கிலமொழியில் தமிழ்ச் சொற்கள், என்ற சொல்லாராய்ச்சியும், சிந்தனையைத் தூண்டுகின்றன.

''தமிழன், அன்றும் இன்றும்''—என்றகட்டுரையில் சில கருத்துக்கள் வருந்தச் செய்கின்றன. ஆசிரியர் பகீரதன் அவர்களை ''கல்கி" ''கங்கை" மூலம் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருக்கிருர்கள்.

அவர் எழுதியுள்ள கட்டுரையின் படி, தமிழ் மக்களின் பழம் பெருமையை வேண்டுமானுல் இன்று பேசாதிருக்கலாம். ஆனுல் தமிழ் மக்களின் இலக்கியத்திலும், வீரத்திலும் செயல் திறமையிலும் ஐயப்படும்படி வரைந்திருப்பது வருந்தச் செய்கிறது. புறநானூறும், சிலப்பதிகாரமும், கற்பனை என்ருல் உண்மையான இலக்கியங்கள்தான் எவை? தமிழிலக்கியம் கூறும் பழம்பெருமையிலும், சொற்சுவையிலும் களங்கம் உண்டாக்க முயல்வது நம் முன்னேர்களின் வாழ்க்கையை நாம் இழிவு படுத்துவதாகுமல்லவா? திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் கண்ட குறைகளையே, ஒழுக்க இழிவுகளையே, திருக்குறளாக

வடித்துத்தந்துள்ளார், என்கிறார். அப்படியென்றால் அக்காலத்தில் நிறைவுடனும், ஒழுக்கமுடனும், அறிவுடனும், பண்புடனும் மக்கள் வாழ்ந்திருக்கவே மாட்டார்கள் என்பது கட்டுரையாளரின் முடிவான கருத்தா?

மற்ற நூல்களைப்பற்றியும், குறுகிய அறிவு, காதலுக்காக வாழ்வு, தமிழனுக்குள்ளே அடிபிடிச் சண்டை, ஒருவரை ஒருவர் நேசியாப்பண்பு என்றெல்லாம் இனி எவரும் நமது இலக்கியம் குறித்து சிந்திக்கா வண்ணம் சாடியுள்ளார். இதை எங்ஙனம் ஒப்புக் கொள்ளவியலும்? தமிழனின் மேன்மைக்காக வேறு நாடு சென்று போர் தொடுத்து வெற்றி கண்டதாக வீர வரலாறே இல்லை, என்று துணிந்து கூறுகிறார். அறிவியல் வளமுற்றுள்ள இக்காலத்திலேயே பனிமலையருகில் செல்லவில்லை என்றால் அக்காலத்தில் எப்படிச் சென்றிருக்க முடியும் என்கிறார். அறிவியல், பொறிவியல், இயக்கும் கருவிகள் இல்லாத பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே தமிழ் நாட்டில் பல கற்கோயில்களை எப்படி எழுப்பினார்கள்? வட நாட்டிலும் கோயில்கள் உண்டு என்கிறார். மதுரை மீனாட்சியம்மன், திருவண்ணாமலை, சிதம்பரம், இராமேசுவரம் போன்ற கல்லெல்லாம் கதைசொல்லும் மிகப் பெரிய கோயில்களைப் போன்று ஆசிரியர் எங்கு கண்டார்? சிறு கற்களையும் காணமுடியாத தஞ்சை மாவட்டத்தில் ஞாயிறு எப்பக்கம் திரும்பினும், தன்னிழல் கீழ் விழாது மிக நுட்பமான அறிவுடனும், திறனுடனும் எவரும் வியக்கும் வண்ணம் கோபுரத்தை எப்படி எழுப்பினார்கள்?

சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய இடங்களுக்கு கூலி செய்து பிழைக்கப் போனான் என்று இழிவாகக் கூறியுள்ளார். இன்றைய நிலையைக் கொண்டு கணக்கிட முடியாது. ஆங்கிலேயர் ஆட்சிக்குப்பின் தமிழகத்தில் நல்லாட்சி மலராத காரணத்தாலும், நம்மில் ஒற்றுமை யில்லாக் காரணத்தாலும், அண்டை நாடுகளுக்குக் குடியேறினார்கள் என்ற கூற்றை வேண்டுமானால் ஏற்கலாம். ஆனால், அக்காலத்தில் கடலில் முதன் முதல் நாவாய் செலுத்தி வணிகம் செய்தார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது! தமிழகம் இயற்கை வளம் மிகுந்தில்லாவிடினும், இயற்கையின் கொடுமையான, பெரும்புயல், பெருமழை, பெருவெள்ளம், அந்நியரின் படையெடுப்பு முதலியன இல்லாது அமைந்து விட்டது.

குறிப்பாக, விடுதலைக்குப் பிறகு அதாவது கடந்த15ஆண்டுகளில் தான் தமிழகம் விரைவாகவளர்ந்துள்ளது என்கிறார். தமிழனின் அறிவையும், தமிழ் நாட்டின் வளர்ச்சியையும் இவரே குறிப்பிடுகிறார். இந்திய நாட்டின் 16மாநிலங்களின் முன்னோடியாக விளங்குவது தமிழ் மாநிலம். கல்வி, குடிநீர், சாலையமைப்பு, வேலைவாய்ப்பு, வேளாண்மை, துப்புரவு, போன்ற பணிகளில் சிறந்து விளங்குகின்றது. இதை யாரும் மறுக்க முடியாது. எத்தனையோ மாநிலங்கள், நல்ல சாலை, கல்வி வசதி, துப்புரவு போன்றவற்றில் மிகமிகப் பின்னடைந்துள்ளன. இது தமிழர்களின் சாதனையல்லவா?

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற நிலையில் மற்ற நாடுகளையும் தன்னுடாகக் கருதி மகிழ்வுடன் கூடியே உழைக்கின்

ருன் தமிழன். உழைப்பில் தமிழனுக்கிணை தமிழன்தான். அறிவிலும் தமிழருக்குக் குறைவில்லை. மாநில—மத்திய அரசியலில் தமிழர்கள் நிறைந்துள்ளார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. காவலர் துறை (Police) கடற்படை, தரைப்படை, வானூர்திப் படையிலும் யார் மிகுந்துள்ளார்கள்? இரண்டாவது உலகப் போரில் ஜனரல் திரு கரியப்பாவுடன் போரில் வெற்றி கண்டவர், தமிழகத்து மக்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது! ஆங்கிலேயனை எதிர்த்த கட்டபொம்மனும் தமிழ் நாட்டில் தோன்றிய பாஞ்சாலங்குறிச்சி பரம்பரை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தொழிற்சாலைகளில் திறமுடனும், நுண்ணறிவுடனும் செயல்படுவதில் தமிழனை இன்றும் வெல்லமுடியாது! படம் பிடித்தல் (சினிமாதொழில்) கலை வளர்ச்சி, நாடகம், நாட்டியம், இசை இவற்றில் தமிழன் பின்னடைந்து விடவில்லை. நன்கு சிந்திப்போமானல் எல்லாத் துறைகளிலும் ஈடுஇணையின்றி தமிழ் நாடு முன்னிற்கிறது என்பது விளங்கும்.

ஆனல், நமக்குள் ஒற்றுமை இல்லை; இனப்பூசல் மறையவில்லை; நமக்கு நாமே குறை கூறிக் கொள்வது ஓயவில்லை. முன்னேறுபவர்களுக்கு ஆக்கமும், பின்னடைந்துள்ளவர்களுக்கு ஊக்கமும் அளிக்க முன்வரவில்லை. நல்ல நாள், தீய நாள், இராகுகாலம், எமகண்டம் பார்க்கும் மடமைத்தனம் ஒழியவில்லை என்பதை மறுக்க முடியாது. இவற்றை ஒழிக்க முயல வேண்டும். இந்தியாவை விட்டு வேறு நாடுகளை நோக்கினுலும் நல்ல அரசாட்சி, அமைதியான வாழ்வு, முதலியவைகளைக் காண இயலாது. அறிவியல் விரைந்து முன்னேறி அச்சத்தையும், அழிவையும் உண்டாக்கி வருவதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அறிவியல் வளர்வதுடன் அமையும் அன்பும், பண்பும் வளர்ந்தால்தான் உலகம் உய்யும். அப்படிப்பட்ட ஒரு நல்ல அறிவியலை வளர்த்து ஒற்றுமையை ஓங்கச் செய்து உலகத்தோடு ஒட்ட ஒழுக திட்டமிடல் வேண்டும்.

நம் நாட்டு நல்லறிஞர்களும், அறிவை வளர்க்கும் நாளிதழ்களும், செய்தித்தாள்களும், வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களும் நாட்டின் நிலையைக் கருதி நேர்மையாகவும், உண்மையாகவும் உழைத்திடல் வேண்டும். நமக்கு நாமே இழிவு படுத்திக் கொள்வதை விட்டு ஒருவரை ஒருவர் மதித்து நடக்க முயல்வோம்.

குழற்கோமான் (பெங்களுர்)

"தொழிலாளர் தொழுநோய்"

கடந்த அக்டோபர் மாத ஊசி 2; குத்து 1ல் வெளியான, "தொழிலாளர் தொழு நோய்" என்ற கட்டுரையைக் கண்ணுற்றேன்.

பம்பாயில் பல நூற்றுக்கணக்கான, பஞ்சாலை, பட்டு ஆலைகளும், இதர தொழிற்சாலைகளும் உள. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆயிரம் முதல் பத்தாயிரம் தொழிலாளர்கள் வரையில் பணி புரிகின்றனர்கள். ஒரு பட்டாலையில் 1958-ல் வேலை நிறுத்தம் நடந்தது. பூசல் ஏற்பட்டதில் பல பெரிய ஆட்களால் பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டு, நல்ல முறையில் தீர்த்து வைத்தார்கள். அதை இருதரப்பாரும் ஒத்துக் கொண்டார்கள். பின்

இரண்டு மாதம் கழித்து, ஒரே ரகத் துணியிலேயே வேறு ''எண்'' போட்டு நேர்பாதி கூலியைக் குறைத்து விட்டார்கள். நிர்வாகிகளிடம் இதைப் பற்றி முறையிட்டபோது, ''அது வேறு எண், இது வேறு எண்'', என்பதாகக் கூறிவிட்டார்கள். இதற்காகப் பலமுறை நிர்வாகிகளிடம் போய் முறையிட்ட தொழிலாளர் சிலரை வேலையிலிருந்தே நீக்கி விட்டார்கள். நாளெல்லாம் உழைத்து உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாளிக்கு உண்மை விளங்கும்போது, மனம்நொந்து, கடிக்க வருகிற பாம்பைக் கம்பாலடித்தாலென்ன, கல்லாலடித்தாலென்ன என்ற மன வெறுப்பில் வெளியிடம் நாட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படி நாடிப் போகும்போது ஏதாவது ஒரு தொழிற்சங்கம், யூனியனில் சேர்ந்து பின்பும் அவர்களைக் கொண்டு வாதாடியும் பலன் கிட்டாமல், நீதிமன்றத்தில் வழக்காட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதிலும் ஊதியக் குறைவுக்காகப் போட்ட வழக்கு, ஓர் ஆண்டு இரண்டு ஆண்டு,மூன்று ஆண்டு என ஓடிக் கொண்டிருக்கிறது. இதே மாதிரி ஒரு சிறு குற்றத்துக்காக, வேலை நீக்கம் பெற்ற தொழிலாளிகள் நான்கு பேர் வழக்குப்போட்டு $2\frac{1}{2}$ ஆண்டு ஆகிறது. இப்படி ''வாய்தா'' போட்டுக் கொண்டே போனால் இல்லாமையிலுள்ள தொழிலாளி பணம் படைத்த முதலாளியோடு எத்தனை மாதம் போராட முடியும்? ஆகவே தொழிலாளர்கள் யூனியனில் சேர்ந்து கொள்வதற்கும், வேலை நிறுத்தம் செய்வதற்கும் காரணம் யார் என்பதை உணர வேண்டும்; வேலை இழப்பு நாட்கள் யாரால் ஏற்படுகிறது, ஏன் ஏற்படுகிறது என்பதையும் சிறிது சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்தால், விளங்கும். இவைகளுக்கெல்லாம் மூல காரணமானவர்கள், முதலாளிகளும், அரசியலாரும் ஆவர், அரசியலாரை ஏன் கூற வேண்டுமென்றால், ஊதியக் குறைவுக்காக வரும் வழக்கில், 1959-ல் கொடுத்த கூலியை 1963-ல் குறைத்து, அதற்காக நடக்கிற வழக்கில் 2, 3-ஆண்டு தீர்ப்புக் கூறாமல் காலங் கடத்துவது சரியா? 1959-ல் என்ன நிலை? என்ன விலை? 1963-ல் என்ன நிலை? என்ன விலை? இதைப் பகுத்துணர்ந்து விரைவில் தீர்ப்புக் கூற வேண்டியதுதானே முறை? எனவே,

''தொழு நோயை'' இவர்களே உற்பத்தி செய்கிறார்கள் என்றே கூறலாம்.

சே. பெ. சுந்தரவேல்
(பம்பாய்-17)

'' ஒரு சங்கதியைப் பற்றிப் பாமர மக்கள் உணர்ச்சி வசப்பட்டு வெறியோடிருக்கும் போது இதை எதிர்த்து நல்ல அறிவான கருத்தை வெளியிடுவதற்குப் பலர் நடுங்குகின்றனர்; இதனால் தீயவை தோற்க வேண்டியதற்கு மாறாக வெற்றி பெறுகின்றன.''

—பர்ட்ரண்டு ரஸ்ஸல்

சு. செந்தில்நாதன்

தமிழ்த் திறனாய்வு

[தமிழ் நூல்களை ஆய்ந்து மதிப்பிடுவதற்கு (criticism) இங்கிலீஷ் முறையைப் பின்பற்றக்கூடாது என்கிறார், கட்டுரையாளர். தமிழ்ப் பெண்ணைச் சேலை கட்டி அழகு பார்க்க வேண்டுமே தவிர, 'கவுன்' மாட்டிப் பார்க்கலாமா என்று கேட்கிறார்.]

தமிழில் திறனாய்வு மெல்ல வளர்கின்றதே என்று வேதனைப் படுகின்றனர் சிலர்; ஆயிரக் கணக்கில் திறனாய்வு நூல்கள் வெளிவரும் நாள் எந்நாளோ, என்று ஏங்குகின்றனர் சிலர். திறனாய்வு மெல்ல வளர்வதாலோ அன்றி ஆயிரக் கணக்கில் நூல்கள் வெளி வராமையாலோ தமிழின் தனிச் சிறப்பு நலிந்து விடாது. ஆனால், வளர்கின்ற இத் திறனாய்வு; "தமிழ்த் திறனாய்வாக" விளங்காது போகுமேயாயின் தமிழின் நல்லியல்புகள் சிதைந்து விடும்.

தமிழகத்தில், வடமொழியின் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில் அம்மொழியின் நூல்களைத் தழுவி நம் மொழியில் பல நூல்கள் எழுதப்பட்டன. தமிழ் இலக்கியமும் அந்தக் கண்ணோட்டத்திலேயே ஆயப்பட்டது. வடமொழியின் செல்வாக்குக் குறைந்து ஆங்கில மொழியின் செல்வாக்கு மிகுந்திருக்கும் இந்நாளிலும் அதே முறை தான் கையாளப் படுகின்றது. இம் முறை சிறந்தது அல்ல; நன்மை பயப்பதும் அல்ல.

தமிழ் இலக்கியங்களை, தமிழ் இலக்கணம், தமிழ்ப் பண்பாடு, நாகரிகம், வாழ்க்கை, இவைகளின் அடிப்படையில்தான் ஆய வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் இலக்கியத்தின் தனிச்சிறப்புக் கெடாதிருக்கும்.

ஒரு தமிழ் எழுத்தாளர்—பல முறை "கார சாரமாக" விவாதிக்கப் பட்டவர் ஒரு நல்ல கருத்தை வெளியிட்டிருந்தார். தமிழ் இலக்கியத்தைஇன்பியல்என்றும்,துன்பியல் (Comedy and Tragedy) என்றும் பிரிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழில் அகம்–புறம் என்ற இரண்டு பிரிவுகள் உள்ளன. இன்றைய நாவல்களை எல்லாம் கூட அதன் அடிப்படையிலேயே பிரித்துக் கொள்ளலாம், என்று அந்த எழுத்தாளர் எழுதியிருந்தார். இந்தக் கருத்து நம் பாராட்டிற்குரியது. ஆங்கிலத் திறனாய்வு முறைகளை மனத்தில் கொண்டு தமிழ் இலக்கியத்தை ஆயப் புகுவதால் இடர்ப்பாடுகள் பல நேர்கின்றன. தமிழ் இலக்கியத்தை மேனாட்டு முறையில் ஆய்ந்து தமிழ் இலக்கியத்தில் குறை காணவும் சிலர் முன் வருகின்றனர்.

துன்பியல் நாடகங்களை மனத்தில் கொண்டு, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து கோவலன் இறந்தவுடன் காப்பியத்தை முடித்திருந்தால் சிறப்பாய் இருக்

குமே, என்று மேனாட்டுத் திறனாய்வு முறையில் முடிவிற்கு வருவது முறையல்ல. ஏனெனில், இளங்கோவின் குறிக்கோள் இதுவல்ல.

மேலும், துன்பியல் நாடகங்கள் அல்லது நாவல்கள் தான் ''நன்றாக'' இருக்கும் என்று எண்ணுவது தவறாகும்; இது படிக்கின்றவர்களின் ''குரூர'' மனவுணர்வையே வெளிப்படுத்துகின்றது.

சஸ்பென்ஸ்!

வேறு சிலர் ''சஸ்பென்ஸ், சஸ்பென்ஸ்'' என்று அலைகின்றார்கள். இலக்கியங்கள் துப்பறியும் கதைகளல்ல, ஒரு முறை படித்தவுடன் தூக்கி வீச; அவைகள் படிக்கப் படிக்க மகிழ்ச்சி தரும் இன்ப ஊற்றுக்களாகும். ஒரே ஒரு முறை படிக்கக் கூடிய எழுத்துக்களுக்கே மேலே நாம் கண்ட கூற்றுகள் பொருந்தும். இலக்கியம் என்ற நிலைக்கு உயர்ந்து விட்ட எழுத்துக்களுக்கு இவைகள் தேவையில்லை.

மேலை நாட்டுக் காப்பியங்களெல்லாம் கதையின் இடையிலேயே தான் துவங்குகின்றன. ஆனால் தமிழ்க் காப்பியங்கள் தலைவனின் பிறப்பு வளப்பிலிருந்து தான் துவங்குகின்றன. இதனால் காப்பியத்தின் சுவை சிறிதும் குன்றவில்லை.

''மேனாட்டினரின் முறைப் படி இராமாயணம் எழுதப்பட்டிருந்தால் கதை ஆரண்ய காண்டத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும். இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் உச்ச நிலையை அடைவதற்குமுன் இராமன் சீதை முதலியோர் காடு வந்த கதையைக் கிளைக்கதையாக, காப்பியப் பாத்திரங்களின் கூற்றாக, அமைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இராமாயணத்தில் சுவை இருக்காது" என்று திரு. இராம கிருட்டினன் அவர்கள், ''கம்பனும் மில்டனும்" என்ற நூலில் கூறுகின்றார்.

இதைத் திறனாய்வாளர்கள் மட்டுமல்ல; கதை எழுதுபவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். புதுமையாகக் கதை எழுதுகிறோம் என்று இடையிலே துவங்கி இடையிலே முடிக்க வேண்டாம். அதாவது, குழப்பத்திலே தொடங்கிக் குழப்பத்திலே முடிக்க வேண்டாம்.

எனவே, தமிழ் இலக்கியங்களை தமிழ்க் கண்ணோட்டத்தில் நோக்கும் நிலை வளர வேண்டும். இதனால், தமிழை ஆங்கில இலக்கியத்தோடு ஒப்பிடுவது தவறு என்று கூறுவதாகக் கருதக் கூடாது. ஒப்பிடுதலை தமிழ் உலகம் வரவேற்கின்றது; வாழ்த்துகின்றது. ஆனால் மேனாட்டு முறையில் தமிழ் இலக்கியம் பிரிக்கப்பட்டு ஆயப்படுவதைத் தமிழுலகம் வெறுக்கின்றது. ஏனெனில், அம்முறை ''போலி"யைச் சுட்டெரிப்பதற்குப் பதில் உண்மையைச் சுட்டெரித்து விடுகின்றது.

உண்மைத் தமிழ்ப் பெண்ணைச் சேலை கட்டி அழகு பார்க்க வேண்டும்; அவளுக்கு ''கவுனை'' மாட்டிவிட்டு ''ராக் அண்டு ரோல்'' ஆடத் தெரியவில்லையே என்று வருந்தலாமா?

''உறுதியற்ற நாலாந்தர மக்கள்தாம் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைப்பார்கள். உறுதியுள்ளவர்கள் காரணத்தையும் விளைவையுமே நம்புவார்கள்.''

—எமர்சன்

6. நாணுத் துறவு உரைத்தல்

[காதலனும் காதலியும் தனித்தனியே தம் நாணத்தை விட்டு வெளிப்படையாகத்தம் இன்ப உணர்ச்சியைக் காட்டத் தொடங்கி விட்டதைக் கூறுவது இந்த அதிகாரம். முன் அதிகாரத்தில் இவர்கள் தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்களல்லவா? இந்த அதிகாரத்தில், தங்கள் வெட்கத்தை விட்டு விட்டதைக் கூறுகிறார்கள்; நாணத்தைத் துறந்ததை உரைத்தல்.]

புணர்ச்சி மூலம் காம இன்பத்தை நுகர்ந்து விட்டு அப்பெண்ணைப் பிரிந்து வருந்துகின்ற ஒருவனுக்கு மடல் ஊர்தலைத்தவிர வலிமையான துணை வேறெதுவுமில்லை. (மடல் ஊர்தல் என்றால், தென்னை, பனை, ஈந்து, கமுகு முதலிய பாளைகளால் அலங்கரிக்கப்பட்ட குதிரை மீது ஏறி ஊரின் தெருக்கள் வழியே போதல். களவியலுக்குப் பிறகு கற்பியல் (மணச்சேர்க்கை) நடப்பதற்குத் தடை ஏற்படுமானால், காதலன் தன்காதல் ஏமாற்றத்தை ஊரார் அறியும்படியாகச் செய்து அவர்கள் மூலம் ஒன்று சேர்வதற்கு முயல்வது; இது வெட்கங்கெட்ட செய்கையாதலால், ''நாணுத்துறவு'' எனப்படும்.)

காதலியின் பிரிவினால் விளைந்த துன்பத்தைப் பொறுக்க முடியாமல் என் உடலும் உயிரும் வெட்கத்தைப் பொருட்படுத்தாமல் மடல் ஏறத்துணிந்து விட்டன. இதுகாறும் வெட்கமும் ஆண்மையும் உடையவனாயிருந்தேன்; காதலியைப் பிரிந்து வருந்தும் இச்சமயம் காதல் மிகுந்தவர் செய்கின்ற மடல் ஏறுதலை ஏற்றுக் கொண்டுவிட்டேன். காதல் என்னும் பெரிய வெள்ளம், நாணம், ஆண்மை - ஆகிய தோணிகளை என்னிடமிருந்து தள்ளிக் கொண்டுபோய்விடுகிறதே! நாள்தோறும் மாலை நேரத்தில் காம மிகுதியால் மடல் ஏறுவதையே நினைத்துக் கொண்டிருக்கும் படியான துன்பத்தை என் காதலி எனக்குத்தந்துள்ளாள். மாலை நேரம் மட்டுமா? நள்ளிரவிலும் கூட மடலேறுவதை எண்ணிக் கொண்டிருக்கிறேன்; காதலியின் பிரிவினால் இரவிலும் உறங்க முடியவில்லை.

இவை காதலன் கூற்றுக்கள்.

கடல் அளவு மிகுந்த காம வேதனைப்பட்டாலும் ஆணைப் போல் மடல் ஏறும் செயலைப் பெண் செய்வதில்லையென்பது பெண்மையின் சிறந்த பண்பாகும்.

இனி, காதலி தனக்குத்தானே சொல்லிக் கொள்வது:—

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

மதிப்புரை :

இமயத்தில் நூறு மைல்: ஆக்கியவர்—எஸ். அருண். [பக்கம் 87. கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ்; சென்னை 5. விலை ரூ. 1-50]

இந்நூலை எழுதியவர் "நவ இந்தியா" பத்திரிகையின் செய்தி ஆசிரியர் திரு. எஸ். அருண். இந்நூல் மூன்று கட்டுரைகளின் தொகுப்பு. இதன் முதல் கட்டுரையும், முக்கிய கட்டுரையுமாகிய "இமயத்தில் நூறு மைல்" என்பதே நூலுக்குப் பெயராக அமைந்திருக்கிறது. இமயத்தில் இருபத்தேழு நாட்களும், ஆந்திர நாட்டில் இரண்டு நாட்களும், காவிரி ஆறு கடலில் கலக்கும் பகுதியில் ஏழு நாட்களும், ஆசிரியர் பிரயாணம் செய்த பொழுது தாம் கண்டும் கேட்டும் உணர்ந்தவைகளை 'இனிய எளிய நடையில் சுவைபட' இந்நூலில் எழுதியுள்ளார். இமயத்தில் திரு. அருண் கண்ட நூறு மைல்களைப்பற்றி முன்னரே பல நூல்கள் வெளிவந்துள. அம்மலைப்பகுதியின் வளத்தைப்பற்றியும் அங்கு வாழும் மக்களின் நிலையைப் பற்றியும் நாம் அறிய வேண்டிய புதிய செய்திகள் திரு அருண் அவர்களின் நூலில் இல்லை. ஆயினும் ஒருசில, நாம் முன்னமே அறிந்தவையாக இருப்பினும் மீண்டும் நினைவிற் கொள்ளத் தக்கன. அவை: சிவானந்தர் ஆசிரமம் விளங்கும் ரிஷிகேசத்தில் பல வித நிலைகளில் விளம்பரம் தேடிக் கூடும் சாமியார்கள் ஏராளம். இக்கூட்டத்தை அதற்கு மேற்பட்ட பகுதிகளில் காணமுடியாது. குளிர்மிகுந்த பகுதியில் போலிகள் செல்ல முடியாது போலும்! ருத்திரபிரயாகைக்கும் குண்ட் என்ற இடத்திற்கும் இடையே ஓர் இடத்தில் உள்ள அகஸ்திய முனிவரின் கல் உரு அவரை குறுமுனியாகக் காட்டாது ஆஜானுபாகுவாகக் காட்டுகிறது; அதாவது, கட்டபொம்மன் மீசையுடன் காட்சி தருகிறார்! சங்கப் பாக்களில் குறுமுனியாக பாடப்பெறும் இம்முனிவர் ஏன் அங்கு பேருருக் கொண்டாரோ? கேதார நாதனை பக்தர்கள் கட்டித் தழுவலாம். ஆனால் மதுரை சொக்கனை இராஜனே ஆயினும் எட்டிநின்றே காண வேண்டும்! கேதார—பத்ரி ஆலயங்களின் பூசாரிகள் கேரள

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் காமத்தை அடக்கிக் கொள்ளும் தன்மை மிகுந்தவர்கள் என்பதையும் மிக இரங்கத் தக்கவர் என்பதையும் கூடக் கருதாமல் இதுவரை என் நெஞ்சுக்குள் அடங்கிக் கிடந்த காமம் இப்போது வெளிப்படவும் நேர்ந்துவிட்டது. என் துன்பத்தைப் பிறர் அறியவில்லை யென்று கருதி என் காதல் உணர்வு தெருவில் நின்று பார்த்துத் தவிக்குமாறு செய்கின்றதே! நான் படும் துன்பங்களைத் தாம் படாதவர்களாதலால் அறிவில்லாதவர்கள் என்னைப் பார்த்து நான் காணும்படி ஏளனமாகச் சிரிக்கின்றனர்.

நாட்டு நம்பூதிரி பார்ப்பனர்கள். இப்பார்ப்பனர் கட்வாலி பெண்களை மணந்து இல்லறம் நடத்துகின்றனர். இது சங்கர சனாதன தர்மத்திற்கு ஏற்புடையதே போலும்! லாண்டஸ் டவுனில் உள்ள, 1922-ல் மலபார் மாவட்டத்தில் மாப்பிள்ளையார் செய்த கலகத்தில்உயிர்நீத்த, இராணுவ வீரர்களின் நினைவுச் சின்னங்களைப்பற்றி குறிப்பிடுகையில் திரு. அருண், ''கூலிப்பட்டாளத்திற்கு வீர வணக்கமா'', என்று குமுறுகிறார். மாப்பிள்ளைமார் கலகத்தை புரட்சி என்றும் குறிப்பிடுகிறார். மாப்பிள்ளைமார் மதவெறி பிடித்து செய்த அட்டகாசங்களை 'புரட்சி' என்பது அச் சொல்லுக்கே இழுக்காகும். "கூலிப்பட்டாளமாம்!' இது அடாத சொல்!

ஹைதராபாத் நகரில் உள்ள ஜாலர்ஜங் மியூசியத்தைப்பற்றி சில விவரங்களை இரண்டாவது கட்டுரையில் காணலாம். சிறப்புமிக்க அந்தக் கலைக்களஞ்சியத்தைப்பற்றி விரிவாக எழுதியிருக்கலாம். இங்கு ஒரு சங்கதி என் நினைவுக்கு வருகிறது. தமிழ் நாட்டிலும் ஒரு ஜாலர்ஜங் இருந்தார். அவர் தேடிவைத்த கலைப்பொருள்கள் இன்றும் உள என்பதை யார் அறிவார்? இராசசர். செவளை இராமசாமி முதலியார் தேடிவைத்துள்ள கலைப் பொருள்கள் இன்றும் சென்னை பூவிருந்தவல்லி, ஹைரோடில் உள்ள அவர் மாளிகையில் காணலாம். அவற்றைத் தக்க இடத்தில் தக்கவாறு பேணும் காலம் எப்பொழுதோ?

மூன்றாவது கட்டுரை பூம்புகாரைப்பற்றியது. அதில் ஒரு ''புகார்'' கூறுகிறார்! கண்ணகிக்கு விழா எடுத்தவர்கள் கண்ணகி உருவம் எப்படி இருக்கும் என்பதற்குப் பல ஆதாரங்கள் தேடி இலங்கை முதலான இடங்களில் கிடைத்த தடயங்கள், உருவப்படங்கள் முதலியவைகளைக் கொண்டு விழாக்காலத்தில் காட்சி அமைத்தனர். ஆனால் கண்ணகி சிலையை அமைக்க அரசாங்கம் நியமித்த எஞ்சினியர், விழாக் குழுவினர் எவருடனும் தொடர்பு கொள்ளாது, ஒரு சிலையை அமைத்து விட்டார். நீண்ட நாசியுடன், கந்தல் பாவாடையுடன், இழைநூல் நைந்துவிட்ட தாவணியுடன், மீனவரின் வறுமைக்கே ஒரு எடுத்துக் காட்டாக கண்ணகி என்ற திருப்பெயருடன் விளங்குகிறது அச்சிலை! பூம்புகாரைக் கொள்ளை கொண்ட கடல் இக்கண்ணகிச் சிலையையும் விழுங்கும் நாளை தமிழர் எதிர்பார்க்கின்றனர். இந்நூல் உலகம் சுற்றிய தமிழர் திரு. A. K. செட்டியாரின் மதிப்புரை பெற்றுளது. நல்ல பதிப்பு. 'ஆசிரியர் பயணம் செய்த இமயப் பகுதியின் படம் ஒன்று சேர்த்திருக்க வேண்டும்.

—சி. சுப்பையா.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29.
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30.

குத்தூசி

[ஆசிரியர்: சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ்: விலை 50 காசு;

ஆண்டுக் கட்டணம்:

உள் நாடு: ரூ. 5 கொழும்பு: ரூ. 6

வெளி நாடு: ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

விளம்பர விகிதம்:

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய்; அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய்; இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.

(அரைப் பக்கம்: 25 ரூபாய்)

குறிப்பு:- நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

குறிப்பு:—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை; முன் அனுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

TELEGRAMS:
"SWITCHES"

PHONE:
51436

KASIMARI

ADDS ONE MORE LINE

MACHINE TOOLS MADE TO Gr. I. LIMITS

WATCH FOR THE PRODUCTS SHORTLY APPEARING IN THE MARKET

(1) $\frac{3}{4}''$ CAPACITY H. DUTY DRILL PRESS
BENCH MODEL

(2) 6"x10" TOOL & CUTTER GRINDER
BENCH MODEL

KASIMARI MACHINE TOOLS CO.,

KASIMARI BUILDINGS
295 THIRUVOTTIYUR HIGH ROAD
MADRAS 21